விலை ரூபா: 15.00


Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

ரா
ம்
கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

பக்கங்கள்: இருபது — Valampurii

சங்கு 12 வள்ளுவர் ஆண்டு 2042 புரட்டாதி 20 வெள்ளிக்கிழமை (07.10.2011) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 292



யாழ்.பல்கலைக்கழகத்தின் 27-வது பொது பட்டமளிப்பு விழா நேற்று கைலாசபதி கலையரங்கில் 5 அமர்வுகளாக நடைபெற்றது. இதில் பல்கலைக்கழக வேந்தர் பேராசிரியர் எஸ்.சிவசூரியா, துணைவேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரட்ணம் மற்றும் பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள் அழைத்து வரப்படுவதையும் படங்களில் காணலாம்.

# மனிதவுரிமைகள் செயற்திட்டம் ஒன்றை ஐ.நாவுக்கு அனுப்ப அரசாங்கம் முடிவு

## சர்வதேசத்தை திருப்திப்படுத்தும் முயற்சி

(கொழும்பு) இலங்கையின் மனிதவுரிமை பாதுகாப்புத் தொடர்பில் செயற்றிட்டம் ஒன்றை ஐக்கிய நாடுகள் சபையின் மனிதவுரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளைக்கு அனுப்பவுள்ளதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையின் மனிதவுரிமைகள் ஆணைக்குழுவுக்கான சிறப்புத் தூதுவரும் அமைச்சருமான மகிந்த சமரசிங்க மேற்கண்ட தகவலை நேற்று வெளியிட்டார். (20ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.தே.க.எம்.பி தயாசிறி சபையிலிருந்து வெளியேற்றப்பட்டார்




அரசாங்கத்துக்கு எதிராகக் கிளர்ச்சியூட்டும் வகையில் பேசினார் என்ற குற்றச்சாட்டின் பேரில் ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரான தயாசிறி ஜயசேகர நேற்று நாடாளுமன்றிலிருந்து வெளியேற்றப்பட்டார்.

ஆயுதம் தாங்கிய பாதுகாப்பு உத்தியோகத்தர்களால் இவர் நாடாளுமன்றிலிருந்து வெளியே அழைத்துச் செல்லப்பட்டுள்ளார். அத்துடன் அவரது உரையும் பதிவழிக்கப்பட்டது. இச்சம்பவத்தையடுத்து நாடாளுமன்றக் கூட்டத் தொடர் சுமார் 10 நிமிடங்கள் வரை ஒத்தி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (பா-8)

## தமிழர்களுக்கு நியாயமான அரசியல் தீர்வு கொழும்புக்கு அழுத்தம் கொடுப்பார் மத்தாய்

### இந்திய ஊடகம் தகவல்



இலங்கைக்கு மூன்று நாள் விஜயமாக நாளை கொழும்புக்கு வரும் இந்திய வெளிவிவகாரச் செயலாளர் ரஞ்சன் மத்தாய் தமிழ் மக்களுக்கு நியாயமான அரசியல் தீர்வு ஒன்றை வழங்குமாறு கொழும்புக்கு அழுத்தம் கொடுக்கக்கூடும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

புதுடில்லி அதிகார வட்டாரங்களை மேற்கோள்காட்டி இந்திய ஊடகம் ஒன்று இவ்வாறு செய்தி வெளியிட்டுள்ளது.

இலங்கையில் மூன்று நாட்கள் தங்கியிருக்கவுள்ள இந்திய வெளிவிவகாரச் செயலாளர் ரஞ்சன் மத்தாய் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரதிநிதிகளை நாளை மறுதினம் கொழும்பில் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார்.

இதன்போது இலங்கையின் (20ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் பாடசாலைகள் குறித்து விரிவான விசாரணை நடத்தப்படும்

### நெதர்லாந்து பாதுகாப்பு அமைச்சர் தெரிவிப்பு

நெதர்லாந்தில் இயங்கிவரும் விடுதலைப் புலிகளுக்குச் சொந்தமான பாடசாலைகள் குறித்து விரிவான விசாரணை நடத்தப்படும் என அந்நாட்டு அரசாங்கம் அறிவித்துள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆதரவு அமைப்புகளினால் சனிக்கிழமைகளில் பாடசாலைகள் நடத்தப்பட்டு வருவதாகக் குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது.

இப்பாடசாலைகளின் நடவடிக்கைகள் குறித்து விரிவான விசாரணை செய்யப்படும் என நெதர்லாந்தின் பாதுகாப்பு அமைச்சர் ஜவோ ஒப்செல்ட்ஸன் தெரிவித்துள்ளார். நாடு முழுவதிலும் 21 பாடசாலைகள் இயங்கி வருவதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆயுதப் போராட்டத்தைப் போற்றும் வகையில் இப்பாடசாலைகளில் கல்வி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாகக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

நாட்டின் கல்விமுறைமையின் கீழ் இப்பாடசாலைகள் இயங்கவில்லை என நெதர்லாந்து பாதுகாப்பு அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார். (பா)

## வெள்ளைக் கொடி விவகாரம் உண்மையில்லை என்பது உறுதி

### சட்டமா அதிபர் அறிவிப்பு

சரத் பொன்சேகா கூறியதாக வெளியிடப்பட்ட வெள்ளைக்கொடி செய்தி இதுவரை பெறப்பட்ட சாட்சியங்களின்அடிப்படையில் பொய்யென உறுதி செய்யப்படுவதாகச் சட்டமா அதிபர் கொழும்பு நீதி மன்றுக்கு நேற்று அறிவித்துள்ளார்.

முறைப்பாடு ஒன்று முன்வைக்கப்பட்டுக் குறித்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக் (20ஆம் பக்கம் பார்க்க)

பயனீர் அக்ரோ ரெக்ஸ்
PIONEER AGRO TEX
சல்வார் ரகங்கள், சாரி ரகங்கள், வேஷ்டி ரகங்கள்,
இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்து
மொத்த வியாபாரம் செய்பவர்கள்.

சைனா வீதிக்கு அருகில்
பிரைம் பிளாசா
261/19, பிரதான வீதி,
கொழும்பு-11
M:- 077 1077215
Ph:- 011 2394906
pmsandco@yahoo.com
Near China Street,
PRIME PLAZA
261/19, Main St.,
Colombo-11

# கொழும்பு துறைமுகத்தில் கொரிய கப்பல்கள்

(கொழும்பு)

தென்கொரிய கடற்படைக்குச் சொந்தமான இரண்டு கப்பல்கள் நேற்று முற்பகல் கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்துள்ளது.

பயிற்சி நடவடிக்கை ஒன்றில் ஈடுபட்டிருந்த இரண்டு கப்பல்களே இவ்வாறு கொழும்பு துறைமுகத்தைச் வந்தடைந்துள்ளதாக கடற்படைப் பேச்சாளர் கொமண்டர் கோசல வர்ணகுலசூரிய தெரிவித்துள்ளார்.

இவ்விரண்டுகப்பல்களும்நாளை வரை கொழும்பு துறைகத்தில் நங்கூரமிடப்பட்டிருக்கும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இக்கப்பல்களில் 608 பணியாளர்கள் இருப்பதாகவும் கூறப்பட்டுள்ளது.

அத்துடன், தென்கொரிய கடற்படையினருக்கும் இலங்கை கடற்படையினருக்கும் இடையில் நட்புரீதியான உதைபந்தாட்டப் போட்டி ஒன்றும் இடம்பெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (பா)


## கந்தசாமி கிட்ணலிங்கம் ஞாபகார்த்த மாபெரும் சைக்கிள் ஓட்டப் போட்டியும் மாட்டுவண்டி சவாரி போட்டியும்

இடம் :- பிரான்பற்று, பண்டத்தரிப்பு
காலம் :- 08.10.2011 சனிக்கிழமை
சைக்கிள் ஓட்டப்போட்டி காலை 6.00 மணி
மாட்டு வண்டிச் சவாரி மாலை 2.00 மணி

அனைத்து வீரர்களும் கலந்து கொள்ளலாம்
அனைத்தும் இலவசம்

நண்பர்கள் (சி-4658) பிரான்பற்று பண்டத்தரிப்பு



## பாராட்டி வாழ்த்துகின்றோம்

### திருமதி விஜயகுமாரி சந்திரன்



சிறந்த ஆசிரியருக்கான ஜனாதிபதி விருதான "ஆசிரியர் பிரதீபா பிரபா" விருதினை பெற்ற எமது பாடசாலை ஆரம்பப் பிரிவு வகுதித்தலைவர் திருமதி விஜயகுமாரி சந்திரன் அவர்களது ஆசிரிய சேவையைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

கல்விச் சமூகம்
கிளி/ பிரமந்தனாறு ம.வி.

(6363)



## பாராட்டி வாழ்த்துகின்றோம்

யா/கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலய அதிபர்
உயர்திரு.வ. நடராசா B.A(Hons) Dip. in Ed., MED, SLPS 2 1



அவர்கள் தென்மராட்சிக் கல்வி வலயத்தில் சிறந்த அதிபராகத் தெரிவு செய்யப்பட்டு 06.10.2011 அன்று அலரி மாளிகையில் அதிமேதகு ஜனாதிபதி அவர்களின் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் "ஆசிரியர் பிரதீபா பிரபா" என்னும் கௌரவ விருதைப் பெற்றமையினையிட்டு பாராட்டி வாழ்த்துகின்றோம்.

(சி-4655)



## பாராட்டி வாழ்த்துகின்றோம்

### திருமதி அன்பரசி அருட்செல்வன் MA

(வலயக்கல்வி அலுவலகம், தென்மராட்சி.)



யாழ் பல்கலைக் கழகத்தில் நேற்று இடம்பெற்ற 27வது பட்டமளிப்பு விழாவில் பண்பாட்டியல் முதுகலைமாணிப் பட்டம் பெற்றதையிட்டு பெருமகிழ்வடைவதுடன் மேலும் பல பட்டங்கள் பெற்று சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றோம்.

கணவன், மாமா, மாமி
கற்கோவளம், பருத்தித்துறை

(C-4656)



## திசைகாட்டி

முன்மாதிரியான ஆலோசனை நிறுவனம்

✓ UK, Australia நாடுகளிற்கு குறைந்த கட்டண விசா ஆலோசனை
✓ வழக்கறிஞர்களின் ஆலோசனை

| | | |
|---|---|---|
| ✓ | Student Visa மூலம் வெளிநாடு செல்வதற்கான ஆங்கிலப் பாடநெறி | IELTS-10000 |
| ✓ | Student Visa மூலம் வெளிநாடு செல்பவர்களிற்கு மிகவும் இலகுவான பாடத்திட்டம் | B1 - 10000/=<br>B2 - 10000/= |
| ✓ | Sponsor மூலம் UK செல்பவர்களிற்கான மிகவும் விளக்கமான பாடத்திட்டம் | A1 - 10000/= |
| ✓ | Spoken English அனைவருக்கும் உகந்தது | 2000/= |
| ✓ | Diploma in English | 5000/= |
| ✓ | Advanced Diploma in English | 10000/= |

எமது நிறுவனத்தால் சான்றிதழ்கள் வழங்கப்படும்

37, சிவகுருநாதர் ஒழுங்கை, பிறவுண் வீதி, (Expo முன்பாக)
யாழ்ப்பாணம். ☎:021 491 4527

(6334)



## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யா/ கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி நல்லாசிரியரை மனமாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்
எமது கல்லூரியின் பௌதிகவியல் ஆசிரியரும் பகுதித் தலைவருமான

### திரு. காசிலிங்கம் ஜெயந்தன்

அவர்கள் 2011.10.06 வியாழக்கிழமை அன்று அலரிமாளிகையில் அதிமேதகு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அவர்களினால் "ஆசிரியர் பிரதீபா பிரபா" விருது வழங்கி கௌரவிக்கப் பெற்றமையையிட்டு அவரை பாராட்டி வாழ்த்துவதில் பெருமகிழ்வடைகின்றோம்.

ஆசிரியர் ஊழியர் நலன் புரிக் கழகம்
யா/ கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி கோப்பாய்.

(சி-4651)



## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யாழ்ப்பாணம் கல்வி வலயத்தில் நல்லாசிரியராக உலக ஆசிரியர் தினத்தன்று 06.10.2011 அலரி மாளிகையில் நடைபெற்ற 'ஆசிரியர் பிரதீபா பிரபா' விருது வழங்கும் வைபவத்தில் கௌரவம் பெறும் எமது சிரேஷ்ட ஆசிரியர்

### திருமதி செல்வரஞ்சினி ஶ்ரீதரன்

(SLTS 2 II)
(யா/உரும்பிராய் சந்திரோதய வித்தியாசாலை)
அவர்களை பாராட்டி வாழ்த்துகின்றோம்.

பாடசாலைச் சமூகம்
யா/உரும்பிராய் சந்திரோதய வித்தியாசாலை

(சி-4653)



## Little Aid

மாணவர்களின் கணனிக்கல்வி மேம்பாட்டுக்காக

பிரித்தானியாவைத் தளமாக கொண்டு இயங்கும் "லிட்டில் ஏய்ட்" நிறுவனத்தின் நிதி அனுசரணையுடன் கோப்பாய் நவமங்கை நிவாசத்துடன் இணைந்து நடாத்தும்

• இலவச கணனிப்பயிற்சி வகுப்புக்கள் •

• வயது வேறுபாடின்றி ஆண், பெண் இருபாலாரும் பங்குபற்றலாம்
• இலவச பாடக்குறிப்புகள் • பயிற்சி முடிவில் சான்றிதழ்கள்

ஆரம்பம் - 09.10.2001 ஞாயிறு காலை 9.30

பதிவுகளை மேற்கொண்டவர்களும் புதிதாக இணையவிரும்புபவர்களும் சமூகம் தரவும்
மேலதிக தொடர்புகளுக்கு - 0773103874

வகுப்புக்கள் நடைபெறும் இடம் நவமங்கை நிவாசம் (கல்வியற் கல்லூரிக்கு அருகில்) இராஜபாத வீதி கோப்பாய்


# உள்ளூர் உற்பத்திகள் கண்காட்சியும் விற்பனையும்

(யாழ்ப்பாணம்)

அபிவிருத்தியில் உள்ளூர் வளங்கள் என்ற தொனிப்பொருளில் வடக்கு மாகாண கிராம அபிவிருத்தித் திணைக்களத்தின் ஏற்பாட்டில் கண்காட்சியும் விற்பனையும் நடைபெறவுள்ளது.

இக்கண்காட்சி நாளை சனிக்கிழமை முதல் மூன்று நாட்கள் கைதடியில் உள்ள உள்ளூராட்சி அமைச்சின் வளாகத்தில் நடைபெறுகின்றது.

இக்கண்காட்சியில் தனியாரின் சிறுகைத்தொழில் முயற்சிகள், இளம் யுவதிகள், கைம்பெண்களின் கைத்தொழில் முயற்சிகள், வருமானம் ஈட்டும் வழிகள், உள்ளூர் உற்பத்திகள் மற்றும் உள்ளூர் வளங்களின் பயன்பாடு போன்றவற்றை முதன்மைப்படுத்தி ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

முயற்சியாண்மைக்கூடம், விற்பனைக்கூடம், சேவைக்கூடம், திறந்தவெளிக்கூடம் என்கிற நான்கு கூடங்களில் கண்காட்சிப்படுத்தப்படவுள்ளன.

இதில் முதலீட்டாளர்கள், சிறுகைத்தொழிலாளர்கள், தனியார் துறையினர், விற்பனையாளர்கள், சேவை வழங்குநர்கள் ஆகியோர் பங்குபற்றவுள்ளனர்.

இக்கண்காட்சியினை இலவசமாகக் கண்டு பயன்பெறுமாறு வடமாகாண கிராம அபிவிருத்தி பணிப்பாளர் ஜே.ஜே.சி.பெலிசியன் தெரிவித்துள்ளார். (பா-8-12)

## பாராளுமன்றில் வாணி விழா

நவராத்திரி இறுதி நாளான நேற்று புத்தசாசன மற்றும் மத அலுவல்கள் அமைச்சு இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்துடன் இணைந்து பாராளுமன்றத்தில் வாணிவிழா பூசையை நடத்தியது.

இந்தப் பூசையில் பிரதி சபாநாயகர், சிரேஷ்ட அமைச்சர் ஜோன் அமரதுங்க, பாராளுமன்ற உறுப்பினர்களான அஸ்வர், அப்பாத்துரை விநாயகமூர்த்தி, சந்திரகுமார் உட்பட சில எம்.பிக்கள் கலந்து கொண்டனர்.

இனமத பேதம் இன்றி பாராளுமன்றத்தில்நடத்தப்படும்இவ்வாணிவிழா பூசைக்கு எந்தவொரு தமிழ் அமைச்சரும் கலந்து கொள்ள வில்லை என சுட்டிக்காட்டப்பட்டது. (பா-8)

## குடும்பஸ்தரின் சடலம் மீட்பு

கொழும்புத்துறையில் பற்றைக் காணியொன்றிலுள்ள மரத்தில் தூக்கில் தொங்கிய நிலையில் குடும்பஸ்தர் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

இச்சடலத்தை நேற்றுக் காலை யாழ்ப்பாணப் பொலிஸார் மீட்டுள்ளனர். சடலமாக மீட்கப்பட்டவர் கொழும்புத்துறை பிள்ளையார் கோவிலடியைச் சேர்ந்த பிரான்சிஸ் றேமன் (வயது 35) என அடையாளம் காணப்பட்டுள்ளது.

இவரது சடலம் பிரேத பரிசோதனைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (பா-6)

## கஸ்தூரியார் வீதியில் சடலம் மீட்பு

யாழ்.கஸ்தூரியார் வீதியில் குடும்பஸ்தர் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

இச் சடலத்தை யாழ்ப்பாணம் பொலிஸார் நேற்று பிற்பகல் 4.00 மணியளவில் மீட்டனர்.

இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவர் புங்குடுதீவைச் சேர்ந்த ஆறுமுகம் சாந்தமோகன் (வயது 43) என அடையாளம் காணப்பட்டது.

சம்பவ இடத்துக்குச் சென்று விசாரணைகளை மேற்கொண்ட யாழ்.நீதவான் ஏ.ஏ.ஆனந்தராசா, பிரேத பரிசோதனைக்காக சடலத்தை யாழ்.போதனா வைத்திய சாலையில் ஒப்படைக்குமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டார். (பா-6)

# இன்று ஒரு தகவல்

## எதுவும் நடக்கலாம்

ஓர் ஊரிலே அடர்ந்த காடு இருந்தது. அந்தக் காட்டில் ஒரு மரத்தின் கிளையில் இரண்டு புறாக்கள் அமைதியாக தூங்கிக் கொண்டிருந்தன.

அந்த அமைதிக்கு வந்தது ஒரு கேடு. ஒரு வேடன் அந்த வழியாக வேட்டையாடுவதற்காக வந்தான். அவனது கையிலே வில்... தோளிலே அம்பு. வேட்டைக்கு ஏதாவது மிருகங்கள் கிடைக்குமா என்று பார்த்துக் கொண்டு வந்தான்.

இந்த ஜோடிப் புறாக்கள் அவன் கண்ணிலே தென்பட்டது. அவ்வளவுதான்.

சத்தம் ஏதுமின்றி மரத்தின் அடியில் நெருங்கி, வில்லை எடுத்தான். அம்பைத் தொடுத்தான். குறி பார்த்தான்.

காற்றிலே மரத்தின் இலைகள் அசைந்தபடியால், அவனால் சரியாக குறிபார்க்க முடியவில்லை. புறா தற்செயலாக குனிந்து கீழே பார்த்தது. வேடன் குறிபார்க்கிறது தெரிந்து விட்டது. உடனே அருகிலிருந்த புறாவிடம் "இதோ பார்... வேடன் எம்மைக் குறி பார்க்கிறான்... உடனே கிளம்பு... பறந்து உயரே போய்விடுவோம்!"

அந்த இன்னொரு புறா என்ன சொன்னது தெரியுமா?

"அதோ பார்... வானத்திலே ஒரு கழுகு நம்மையே குறிபார்த்து வட்டமிட்டு பறந்து கொண்டிருக்கிறது. இப்போது மேலே பறந்து போனால் அந்த கழுகிடம் மாட்டி விடுவோம்!".

இந்த இரண்டு புறாக்களுக்கும் இரண்டு பக்கமும் ஆபத்து.

முதல் புறா தவித்தது. இரண்டாவது புறா அமைதியாக உட்கார்ந்து இருந்தது. "என்ன இப்படி அமைதியாக உட்கார்ந்திருக்கிறாய்... இங்கேயே இருந்தால் வேடனுக்கு ஆகாரமாகி போய் விடுவோம். பறந்த போனால் கழுகுக்கு இரையாகி விடுவோம். ஒன்றுமே விளங்கவில்லை என்று பதை பதைத்தது.

"பதற்றப்படாதே... பொறுமையாக இரு... எதுவும் நடக்கலாம். இதற்கு பின்னரும் நாம் தப்பி பிழைப்பதற்கு வாய்ப்பு இருப்பதாகவே எனக்கு தெரிகிறது."

குறிபார்த்த வேடனுக்கு ஓர் ஆசை... வந்தது. அதாவது ஒரே அம்பில் அந்த இரண்டு புறாவையும் வீழ்த்திட வேண்டும் என்பதாகும்.

அதனால் அவன் சிறிது கவனமாக ...மிகவும் எச்சரிக்கையாக குறிபார்த்து கொண்டே சற்று பின் நகர்ந்தான்.

அவ்வேளையில் கீழே இருந்த பாம்புபுற்றின் மீது காலை வைத்துவிட அங்கே இருந்த அரவம் அவனை தீண்டியது. உடனே கையில் இருந்த அம்பும் நழுவியது. அந்த அம்பு நேராக வானில் உயர பறந்து கொண்டிருந்த கழுகின் உடம்பை பதம் பார்த்தது.

கடைசியில் வேடனும் கழுகும் தரையில் விழுந்து கிடக்கிறார்கள். கிளையில் இருந்த இரு புறாக்களும் அப்படியே உட்கார்ந்திருந்தன.

சாகப்போகின்றோம் என்று நினைத்த அந்த புறாக்கள் சந்தோசமாக இருக்கின்றன. அவற்றை சாப்பிடப்போகின்றோம் என்று நினைத்த வேடனும் கழுகும் இறந்து கிடக்கிறார்கள். இந்த கதையில் ஒரு நுட்பமான படிப்பினை இருக்கிறது. வாழ்க்கையில் நாம் கடைசி வரையும் நம்பிக்கையோடு செயற்பட வேண்டும். எதற்காகவும் நம்பிக்கையை இழந்து விடக் கூடாது. எதுவும் நடக்கலாம் என்ற எண்ணம் வேண்டும்.

இந்த துணிச்சல் இல்லாதவர்கள்தான் ஒரு சில விநாடிகளில் தற்கொலைக்கு துணிந்து விடுகிறார்கள்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# யாழ்.உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளை பிரதேச செயலகங்களாக்க நடவடிக்கை

### —யாழ்.அரச அதிபர் தெரிவிப்பு—

யாழ்.மாவட்டத்திலுள்ள உதவி அரசாங்க பிரிவுகளை பிரதேச செயலகங்களாக தரமுயர்த்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இதன்படி காரைநகர், ஊகாவற்றுறை, நெடுந்தீவு, மருதங்கேணி ஆகிய நான்கு உதவி அரசாங்க பிரிவுகளையும் பிரதேச செயலகங்களாக தரமுயர்த்துவதற்கு தாம் த முன்மொழிவதாக யாழ்.அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் தெரிவித்தார்.

யாழ்.மாவட்டத்திலுள்ள பிரதேச செயலகங்களுக்கான நிர்வாக எல்லைகளை மீள் அமைப்பதற்கான விசேட கலந்துரையாடல் ஒன்று நேற்று யாழ்.மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. இதன்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், தற்போது யாழ்.மாவட்டத்தில் 11 பிரதேச செயலகங்களும் 4 உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளும் உள்ளன.

இந்த உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளை பிரதேச செயலகர் பிரிவாக தரமுயர்த்த நாம் நடவடிக்கை எடுத்து வருகின்றோம்.

இந்த விடயங்கள் தொடர்பாக ஆராய்வதற்கு கொழும்பிலிருந்து விசேட குழுவொன்று எதிர்வரும் 11 ஆம் திகதி யாழ்ப்பாணம் வருகை தரவுள்ளது.

அத்தோடு தென்மராட்சி பிரதேச செயலர் பிரிவையும் வலிகாமம் கிழக்கு பிரதேச செயலர் பிரிவையும் இரண்டு பிரிவாக்க நடவடிக்கை எடுத்து வருகின்றோம். அதற்கான முன்மொழிவுகளை அரசாங்க அதிபர் சார்பாக நான் வைத்துள்ளேன்.

இதன்படி தென்மராட்சி பிரதேச செயலர் பிரிவினை தென்மராட்சி மேற்கு சாவகச்சேரி, தென்மராட்சி கிழக்கு கொடிகாமம் என இரண்டாக பிரிக்கவுள்ளதோடு வலிகாமம் கிழக்கு பிரதேச செயலர் பிரிவை வலிகாமம் கிழக்கு கோப்பாய், வலிகாமம் கிழக்கு அச்சுவேலி எனப் பிரிக்க முன்மொழியப்பட்டுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (4-6)

# கிளிநொச்சி மாவட்டத்தில் மரண உதவிச்சங்கம் அமைப்பு

கிளிநொச்சி மாவட்டத்தில் வறுமைக்கோட்டின் கீழ் வாழும் மரணச்சடங்குகளை மேற்கொள்வதில் உள்ள கஷ்ட நிலைமைகளை குறைப்பதை நோக்கமாகக் கொண்டு, **கிளி நொச்சி மாவட்ட மரண உதவி சங்கம்** என்னும் பெயரில் புதிதாக அரசு சார்பான நிறுவனம் ஒன்று கிளிநொச்சி நகரில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டுள்ளதாக கிளிநொச்சி திடீர் மரண விசாரணை அதிகாரியும் தலைவருமான டாக்டர் கே.வி.கே.திருலோக மூர்த்தி அறிவித்துள்ளார்.

இதன் தலைவராக கிளிநொச்சி திடீர் மரண விசாரணை அதிகாரி டாக்டர் கே.வி.கே.திருலோகமூர்த்தி, உபதலைவர்களாக க.செல்வராசா, ஆ.ரகுநாதன் ஆகியோரும், செயலாளராக செல்வி.ந.கௌந்தி, உப செயலாளராக டாக்டர் அ.ஸ்ரீரங்கநாதன், பொருளாளராக கோ.குணாளன், அலுவலக இணைப்பாளராக திருமதி க.இராசலட்சுமி பிரதேச இணைப்பாளராக மா.குகனும் தெரிவாகியுள்ளனர்.

அத்தோடு ச.அசோக்குமார், ஞா.ஜீவசங்கர், இ.ராஜ் குமார், க.கனேஸ்வரன், டாக்டர் சு.விக்னேஸ்வரி ஆகியோர் நிர்வாக உறுப்பினர்களாக தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இதில் போசகர்களாக கிளிநொச்சி கருணா நிலைய நிர்வாகி வணபிதா நா.பிரபாகர் அடிகளார், கரைச்சி பிரதேச சபை வருமான அதிகாரி நா.பாலச்சந்திரன், பூநகரி முழங் காவில் ஆதார வைத்தியசாலை முகாமைத்துவ உத்தியோ கத்தர் சு.கணேசராசா ஆகியோரும் தெரிவாகியுள்ளனர். (4÷2-12)

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 50 | 40 | 40 |
| உருளைக்கிழங்கு | 70 | 90 | 80 |
| பச்சைமிளகாய் | 120 | 110 | 70 |
| தக்காளி | 55 | 70 | 50 |
| மரவள்ளிக்கிழங்கு | 30 | 50 | 30 |
| கோவா | 30 | 25 | 40 |
| கரட் | 50 | 100 | 50 |
| பூசணி | 30 | 50 | 40 |
| புடோல் | 35 | 40 | 30 |
| வாழைக்காய் | 40 | 30 | 30 |
| சின்ன வெங்காயம் | 90 | 80 | 90 |
| பெரிய வெங்காயம் | 60 | 60 | 60 |
| பாகற்காய் | 100 | 180 | 70 |
| வெண்டிக்காய் | 40 | 60 | 40 |
| கருணைக் கிழங்கு | 70 | 80 | 80 |
| பயற்றங்காய் | 80 | 50 | 70 |
| லீக்ஸ் | 50 | 40 | 50 |
| பீற்றூட் | 20 | 20 | 15 |
| கறிமிளகாய் | 45 | 40 | 40 |
| முருங்கைக்காய் | 60 | 60 | 70 |
| போஞ்சி | -- | 110 | -- |
| கத்தரிதம்புள்ள | 25 | 15 | 20 |
| கீரை - 1 பிடி | 10-15 | 20 | 15 |
| தேசிக்காய் | 230 | 240 | 200 |
| தேங்காய் (ஒன்று) | 20-40 | 30 | 30 |

# இராசி பலன்

07.10.2011
(புரட்டாதி 20, வெள்ளிக்கிழமை)
சூரிய உதயம் காலை 5.58 மணிக்கு
ஏகாதசி, மரணயோகம் பின்னிரவு 1.23 மணிவரை
திருவோணம் முற்பகல் 9.54 மணிவரை
இராகுகாலம் 10.32-12.02 மணிவரை
சுபநேரம் 6.02-7.32 மணிவரை
ஏகாதசி விரதம்.

**மேடம்** யோகமான நாள், யோசிக்காமல் செய்த காரியங்களில்கூட வெற்றி பெறுவீர்கள், தொழில் ரீதியாக புதிய திட்டங்களை தீட்டுவீர்கள், சுப செய்திகள் வந்து சேரும்.

**இடபம்** நல்லவர்கள் சந்திப்பால் நலம் காணும் நாள், தடைப்பட்ட காரியங்கள் தானாகவே நடைபெறத் தொடங்கும், திடீர் பயணங்களால் அனுகூலமுண்டு, கட்டுப்பாடான நாள்.

**மிதுனம்** கவலைகள் தீர கடவுளை வழிபட வேண்டிய நாள், பிரயாணங்களில் விழிப்புணர்வு தேவை, உங்கள் செயற்பாடுகளில் உறவினர் குறை கண்டு கொள்ளலாம், செலவுகள் அதிகமாகும்.

**கடகம்** தொழிலில் மேலதிகாரிகளின் ஆதரவை பெறுவீர்கள், பயணங்களால் புதியவர்களின் அறிமுகம் கிட்டும், உடல்நலம் உற்சாகமளிக்கும், ஆன்மீக சிந்தனை மேலோங்கும்.

**சிங்கம்** எதிரிகள் விலகுவர், சிக்கனத்தை கடைப்பிடிக்கும் எண்ணம் உருவாகும், தெய்வ சிந்தனை மேலோங்கும், மாற்று மருத்து வத்தால் உடல் நலம் சீராகும், தைரியத்தோடு பணிபுரியும் நாள்.

**கன்னி** நீண்ட நாட்களாக தள்ளிப்போட்ட காரியம் ஒன்றை இன்று திடீரென செய்து முடிப்பீர்கள், உயரதிகாரிகளின் பாராட்டுக்கள் கிடைக்கப் பெறுவீர்கள், வியாபார நன்மையுண்டு.

**துலாம்** செல்வாக்கு அதிகரிக்கும் நாள், சிந்தனை ஆற்றலால் சிறப்படைவீர்கள், தொழில் முன்னேற்றம் உண்டு, வாகன யோகமுண்டு, சுப செலவுகள் செய்து மகிழ்வீர்கள்.

**விருச்சிகம்** வருமானம் அதிகரிக்கும், விரதம், வழிபாடுகளில் நம்பிக்கை வைப்பீர்கள், கடிதம் கனிந்த தகவலை தரும், உறவினர் மூலம் உதவிகள் கிடைக்கலாம், போசன சுகமுண்டு.

**தனுசு** எதிர்பாராத தனவருவாய் ஏற்படலாம், செய்தொழிலில் உயர்வும் மேன்மையும் இடம்பெறும், கொடுக்கல்- வாங்கல்கள் ஒழுங் காகும், குடும்பத்தில் மங்கல ஓசை கேட்பதற்கான அறிகுறி தோன்றும்.

**மகரம்** தொட்ட காரியம் வெற்றி பெற அம்பிகையை வழிபட வேண்டிய நாள், ஆரம்பத்தில் அச்சுறுத்தலாக இருந்த ஒரு விடயம் முடிவில் ஆதாயத்தை கொடுக்கலாம், உடல் நலனில் அதிக அக்கறை தேவை.

**கும்பம்** மாற்றங்களால் ஏற்றம் பெறும் நாள், தொழில் வளர்ச்சிக்கு நண்பர்கள் உறுதுணை புரிவர், உறவினர் வருகையால் திடீர் செலவுகள் ஏற்படலாம், அலைச்சல்கள் அதிகரிக்கும்.

**மீனம்** அதிர்ஷ்ட வாய்ப்புக்கள் வந்து சேரும், ஆதரவு தருவோரின் எண்ணிக்கை கூடும், குடும்பத்தில் குதூகலமான நிகழ்வுகள் ஏற்படலாம், பயணங்கள் செல்ல போட்ட திட்டங்கள் வெற்றி பெறும்.

வளவன்

# பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

தேசிய கல்வி நிறுவக கல்விமாணி பட்ட நெறி மூன்றாம் வருட இறுதிப் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுக்கான முக்கிய கூட்டம் நாளை சனிக்கிழமை காலை 10 மணிக்கு யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இதில் தேசிய கல்வி நிறுவகத்தால் வழங்கப்பட்ட அடையாள அட்டையுடன் சகல மூன்றாம் வருட மாணவர்களையும் தவறாது கூட்டத்திற்கு சமுகமளிக்குமாறு தேசிய கல்வி நிறுவக இணைப்பாளர் எஸ்.ஆர். சத்தியேந்திரம்பிள்ளை கேட்டுக் கொண்டுள்ளார். (4-12)

* * * * * *

(பொற்பதி)

வடமராட்சி கிழக்கின் வெற்றிலைக்கேணி குணவத்தை கண்ணகி அம்மன் ஆலயத்தின் பரிபாலன சபைப் பொதுக்கூட்டமும் புதிய நிர்வாக சபைத் தெரிவும் எதிர்வரும்14 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 12 மணிக்கு ஆலய முன்றலில் இடம்பெறவுள்ளது.

நிர்வாக சபைத் தெரிவு நிகழ்வில் பல அரச உத்தியோகத்தர்களும் இராணுவ உயரதிகாரிகளும் கலந்து சிறப்பிக்கவுள்ளதாக ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர்.

* * * * * *

(பொற்பதி)

வடமராட்சி கிழக்கின் வெற்றிலைக்கேணி றம்போ விளையாட்டுக் கழகத்தினரின் புதிய நிர்வாகத் தெரிவு கடந்த 29 ஆம் திகதி இடம்பெற்றது.

இதில் தலைவராக தா.சிவஞானம் செயலாளராக ச.கங்கை அமரன், பொருளாராக கோ. டினேஸ்ரூபன், உபதலைவராக ஆ. மாதவன், உப செயலாளராக ம.சசிக் குமார் ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டனர்.

அத்தோடு நான்கு நிர்வாக சபை உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டுள்ளதாக விளையாட்டு கழக நிர்வாகத்தினர் தெரிவித்துள்ளனர். (4-3-64)

# வாணி விழா

(யாழ்ப்பாணம்)

சுபாலய மாணவிகளின் வாணி விழா நாளை சனிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு சாவகச்சேரி சிவன் கோயில் வீதி, தென்மராட்சி கலை மன்ற கலாசார மண்டபத்தில் சுபாலய நாட்டியப் பள்ளி இயக்குநர். தயாபரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக தென்மராட்சி பிரதேச செயலர் திருமதி அஞ்சலிதேவி சாந்தசீலன் ,சிறப்பு விருந்தினர்களாக சாவகச்சேரி மக்கள் வங்கி முகாமையாளர் க.சண்முகலிங்கம், கோப்பாய் தேசிய கல்வியியற் கல்லூரி விரிவுரையாளர் திருமதி சுபாதினி தயாபரன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

அத்தோடு மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெறும். (4-12)

# ஆவணங்களின்றி மோட்டார் வண்டியில் பயணிப்போருக்கு எதிராக நடவடிக்கை

## நெல்லியடி பொலிஸ்நிலைய பொறுப்பதிகாரி தெரிவிப்பு

(கரவெட்டி)

ஆவணங்கள் இன்றி சவாரி, மோட்டார் சைக்கிள் மற்றும் சி.சி.49 மோட்டார் சைக்கிள்களை செலுத்தும் நபர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமென நெல்லியடி பொலிஸ்நிலைய போக்குவரத்து பொறுப்பதிகாரி சு.வீர தெரிவித்துள்ளார்.

நெல்லியடி நகரப்பகுதியில் அதிகளவான சிறியரக மோட்டார் சைக்கிள்களை செலுத்தும் நபர்கள் ஆவணங்களை வைத்திருக்காமலும் தலைக்கவசம் அணியாமலும் பயணிப்பதை காணக்கூடியதாக உள்ளது.

அவர்களிடம் நாம் சட்டநடவடிக்கைகளை எடுத்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தியுள்ளோம்.

எனவே எதிர்வரும் காலங்களில் மேற்குறித்த மோட்டார் சைக்கிள்களுக்கு உரிய ஆவணங்களுடன் தலைக்கவசத்தையும் அணிந்து செல்லுமாறும் தவறும் பட்சத்தில் சட்டநடவடிக்கை எடுக்கப்படுமெனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இம் மோட்டார் சைக்கிள்களுக்கு தலைக்கவசமும் அணிதலும் ஆவணங்கள் வைத்திருத்தலும் அண்மையில் நடைமுறைக்கு வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (4-3-24)

# கோப்பாய் பிரதேச சபையினரால் டெங்குஒழிப்பு வாரம் கடைப்பிடிப்பு

(நல்லூர்)

வலி.கிழக்கு கோப்பாய் பிரதேச சபையால் கோப்பாய் பிரதேச செயலக பிரிவிற்குட்ட டெங்கு ஒழிப்பு செயற்றிட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

கோப்பாய் பிரதேச சபைப் பகுதியில் உள்ள கழிவுப் பொருட்கள் வெற்றுக் காணிகளில் படர்ந்து வளர்ந்திருக்கும் பற்றைகள் என்பன அகற்றப்பட்டுள்ளதோடு மேலும் கழிவுப் பொருட்கள் என்பன அகற்றப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

டெங்கு நடவடிக்கை தொடர்ந்து ஒருவாரம் நடைபெறவுள்ளதென தெரிவிக்கப்படுகிறது.

இதனால் இப்பகுதியில் டெங்கு நோயை கட்டுப்படுத்த முடியும் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது. (4-3-134)

# நீதிமன்றத்தால் அபராதம்

(கரவெட்டி)

சட்டவிரோதமாக சாரதி அனுமதிப்பத்திரம் வைத்திருந்த சாரதி நெல்லியடி பொலிஸாரால் கடந்த செவ்வாய்க்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் நெல்லியடி பகுதியில் வாகனத்தை செலுத்திச் சென்ற வேளை அனுமதிப்பத்திரத்தை சோதனையிட்ட போது சட்டவிரோதமான சாரதி அனுமதிப்பத்திரம் வைத்திருந்ததாக குறித்த சாரதி அன்றே பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டார்.

வழக்கை விசாரித்த பருத்தித்துறை நீதிவான் நீதிமன்ற நீதிபதி திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரம் குறித்த நபர் மன்றில் குற்றத்தைக் ஒப்புக் கொண்டமையால் 10 ஆயிரம் ரூபா அபராதம் செலுத்த உத்தரவிட்டார். (4-3-24)

* * * * * *

(யாழ்ப்பாணம்)

நடைபாதைக்கு இடையூறு விளைவிக்கும் வகையில் ஆடம்பரப் பொருட்களை விற்பனை செய்த குற்றச்சாட்டின் பேரில் நபரொருவர் யாழ். பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நேற்றையதினம் யாழ்.நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டார்.

வழக்கை விசாரித்த யாழ்.நீதிவான் நீதிமன்ற நீதிபதி ஏ.ஏ.ஆனந்தராசா குறித்த நபர் மன்றில் குற்றத்தை ஒப்புக் கொண்டமையால் குற்றவாளியெனக் கண்டு ஆயிரத்து 500 ரூபா அபராதமும் செலுத்தத் தவறின் ஒருமாத சாதாரண சிறைத்தண்டனையும் வழங்கித் தீர்ப்பளித்தார். (4-3)

* * * * * *

(யாழ்ப்பாணம்)

அனுமதிப்பத்திரம் இன்றி மணல் ஏற்றிச் சென்ற குற்றச்சாட்டின் பேரில் நபரொருவர் யாழ். பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நேற்றையதினம் யாழ்.நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டார்.

வழக்கை விசாரித்த யாழ்.நீதிவான் நீதிமன்ற நீதிபதி ஏ.ஏ.ஆனந்தராசா குறித்த நபர் மன்றில் குற்றத்தை ஒப்புக் கொண்டமையால் குற்றவாளியெனக் கண்டு 7ஆயிரம் ரூபா அபராதமும் செலுத்தத் தவறின் ஒருமாத சாதாரண சிறைத்தண்டனையும் வழங்கித் தீர்ப்பளித்தார். (4-3)

# கி.அ. சங்கங்களுக்கு பொதுக்கூட்டம்

(நல்லூர்)

வலி.கிழக்கு பிரதேச செயலர் பிரிவிலுள்ள அனைத்து கிராம அபிவிருத்தி சங்கங்களும் வருடாந்த பொதுக்கூட்டத்தை நடாத்தி நிர்வாக உறுப்பினர்களை தெரிவு செய்யும் நடவடிக்கைகளை கோப்பாய் பிரதேச செயலக கிராம அபிவிருத்தி அதிகாரி எஸ்.நிர்மலன் மேற்கொண்டு வருகின்றார்.

இதன்மூலம் செயற்படாமல் உள்ள கிராம அபிவிருத்தி சங்கங்களும் தமது செயற்பாடுகளை முன்னெடுக்கக் கூடியதாய் உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (4-3-134)

# தேவாரபண்ணிசை வகுப்பு

அகில இலங்கைத் திருமுறை மன்றம் வட இலங்கை சங்கீத சபையினதும் மன்றத்தினதும் பாடவிதானத்திற்கு அமைய சனி, ஞாயிறு கிழமைகளில் பிற்பகல் 3 மணி முதல் யாழ். இந்து மகளிர் கல்லூரியிலும் 4 மணி தொடக்கம் 5 மணி வரை யாழ்ப்பாணம் சிவதொண்டன் நிலையத்திலும் நடாத்தி வரும் இலவசத் தேவாரப் பண்ணிசை வகுப்புக்கள் நாளை சனிக்கிழமை, நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமையும் வழமைபோல் நடைபெறும்.

புதிய மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள். ஆண், பெண் இரு பாலாரும் பங்குபற்றி பயன் பெறலாமென அமைப்பாளர் சி.கிருஷ்ணமூர்த்தி தெரிவிக்கின் றார்.

இப் பயிற்சி வகுப்புக்களை தாவடியூர் கலாபூசணம் துறைசை ஆதீன திருமுறைத் தோன்றல் கே.எஸ்.ஆர்.திருஞான சம்பந்த ஓதுவார் மூர்த்திகள் நடாத்தி வருகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது. (4-2)

## யாழ்.செய்திகள்

# பரிசளிப்புவிழா


(உடுப்பிட்டி)

யா/கம்பர் மலை வித்தியாலய பரி சளிப்பு விழா நாளை சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை பிரதான மண்ட பத்தில் அதிபர் சு.கிருஷ்ணகுமார் தலைமை யில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமராட்சி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் சி.நந்தகுமார் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

பரிசில்களை யாழ்.மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை சிரேஷ்ட ஆசிரியர் திருமதி நந்தகுமார் வழங்கி கௌரவிக்கவுள்ளார். (4-3-52)







யாழ்.நெல்லியடி மத்திய மகா வித்தியலயத்தின் ஆசிரியர் தின விழாவும் வள்ளுவர் சிலை திறப்பு விழாவும் நேற்று முன்தினம் புதன்கிழமை நடைபெற்றது.இதில் விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் திறந்து வைக்கப்பட்ட வள்ளுவர் சிலையையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம்.

(படங்கள்:-எஸ்.செல்வதீபன்)

## கோப்பாய் பிரதேச செயலாளர் பிரிவில் 200 மலசல கூடங்கள் அமைக்க நடவடிக்கை

வலி.கிழக்கு பிரதேச சமுர்த்தி வங்கியினால் கோப்பாய் பிரதேச செயலக பிரிவில் மலசல கூடம் இல்லாத வறுமைக் கோட்டின் கீழுள்ள குடும்பங்களுக்கு 200 மலசல கூடங்கள் அமைப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

ஏற்கனவே கிராம ரீதியாக சமுர்த்தி உத்தியோகத்தர்கள் மூலம் 400 குடும்பங்களின் விபரங்கள் எடுக்கப்பட்டு அதில் 200 குடும்பங்கள் தெரிவு செய்யப்பட்டு மலசல கூடம் அமைத்துக் கொடுக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (4-3-134)



வலம்புரிக் காரியாலயத்தில் நேற்று வாணி விழா நிகழ்வு இடம்பெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட கலாபூசணம் லெ. கெங்காதரன் ஆச்சாரியாருக்கு வலம்புரியின் நிர்வாக இயக்குநர் எஸ். வெற்றிவேலாயுதம் பொன்னாடை போர்த்தி கௌரவித்ததைப் படத்தில் காணலாம்.

## மும்மொழிகளிலும் பொலிஸ் சேவையை மக்கள் விரும்பி எதிர்பார்க்கின்றனர்

(கொழும்பு)

பத்து வருட முன்மொழி தேசிய திட்டத்தில் சேர்த்துக் கொள்வதற்கான பொதுமக்களின் ஆலோசனைகளில் இலங்கை பொலிஸ் மும்மொழியிலும் இயங்கும் ஆற்றலுள்ளதாக மாற்றப்பட வேண்டும் என்னும் கருத்து மேலோங்கியுள்ளதாக நேற்று முன்தினம் ஜனாதிபதி செயலகம் கூறியுள்ளது.

இயன்றளவு விரைவாக மும்மொழி பொலிஸ் முறைமையை ஏற்படுத்த வேண்டுமென மக்கள் கேட்டுள்ளதாக முன்மொழி இலங்கைக்கான ஜனாதிபதி முன்னெடுப்புக்களின் இணைப்பாளர் சுனிமல் பெர்னாண்டோ கூறியுள்ளார்.

தமிழ்ப் பகுதியில் தமிழ் பொலிஸ், சிங்கள பகுதியில் சிங்கள பொலிஸ் என காணப்படுவதை மக்கள் விரும்பவில்லை. பொலிஸார் மும்மொழிகளையும் அறிந்திருக்க வேண்டுமென விரும்புகின்றனர் என அவர் கூறியுள்ளார்.

இலங்கையில் மொழி கற்பிக்கும் முறைகளை மாற்றியமைக்க வேண்டுமெனவும் தற்போதைய முறைகள் பெரும் தோல்வி கண்டுள்ளதாகவும் மக்கள் கருத்துத் தெரிவித்துள்ளதாக அவர் கூறினார்.

பத்துவருட மும்மொழி தேசிய திட்டத்தில் சேர்ப்பதற்கான ஆலோசனைகளை மக்கள் அனுப்பி வைக்க வேண்டுமென ஜனாதிபதி செயலகம் கேட்டுள்ளது. இத்திட்டத்தை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நவம்பர் பிற்பகுதியில் ஆரம்பித்து வைப்பார். மக்கள் ஒக்டோபர் 12,2011 இற்கு முன் தமது ஆலோனைகளை மின்னஞ்சல் மூலம் அனுப்பி வைக்கலாம்.

இது குறித்த விபரங்களை www.info.gov.lk எனும் இணையத்தளத்தில் பார்வையிடலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (4-2)

## ஆசிரியர் தினம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மெதடிஸ்த பெண்கள் உயர் தரப் பாடசாலையில் சர்வதேச ஆசிரியர் தின விழா இன்று காலை 9.30 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் பாடசாலை சமூக அபிவிருத்திச் செயலாளர் பி.ஸ்ரீபவன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக மட்டக்களப்பு உயர் நீதிமன்ற நீதிபதி திருமதி கே.சிவபாதசுந்தரம் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார். (4-12)

## மனித உரிமைகளை பாதுகாக்க தேசிய நடவடிக்கைத் திட்டம்

(கொழும்பு)

மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்கு 5 ஆண்டு தேசிய நடவடிக்கைத் திட்டம் பிரகடனம் செய்யப்பட்டுள்ளது.

அமைச்சர் மஹிந்த சமரசிங்க இதுபற்றி தெரிவிக்கையில்,

இதற்கு அமைச்சரவை அங்கீகாரம் கிடைக்கப்பட்டுள்ளதாக கூறினார்.

மனித உரிமைப் பேரவையினால் நடத்தப்படும் குளோபல் மறு பரிசீலனைக் கூட்டத்தில் தொடரில் சகல நாடுகளும் அறிக்கையொன்றை சமர்ப்பிக்க வேண்டும்.

இதன் பிரகாரம் அனைத்து நாடுகளினதும் ஆலோசனைகளையும் கருத்துக்களையும் கவனத்தில் எடுத்து 21 பிரேரணைகளை நடைமுறைப்படுத்துவது என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது.

சிவில் அரசியல் உரிமைகள், சமூக பொருளாதார கலாசார உரிமைகள் சித்திரவதையைத் தவிர்க்கும் உரிமைகள் , சிறுவர் , பெண்கள் உரிமைகள் உட்பட இந்தத் திட்டம் 8 பிரிவுகளின் கீழ் அமுல் செய்யப்படும்.

இந்தத் திட்டம் அனைத்து அமைச்சுக்களுக்கும் இன்று முதல் அனுப்பப்படும். ஜனாதிபதி இது தொடர்பாக ஒருங்கிணைப்புக் குழு ஒன்றை நியமித்துள்ளார்.

எதிர்வரும் ஐக்கிய நாடுகள் கூட்டத் தொடரில் இந்தத் திட்ட அமுலாக்கம் பற்றி அறிவிக்கப்படுமென்று அமைச்சர் நேற்று செய்தியாளர் மாநாட்டில் கூறினார். (4-12)



# தமிழ் தேசியத்தை ஆதரிப்போர் த.தே.கூட்டமைப்பை ஆதரியுங்கள்



## அரியநேத்திரன் எம்.பி.தெரிவிப்பு

(கொழும்பு)

கல்முனை மாநகரசபையின் எதிர்க்கட்சியாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெரிவு செய்யப்படக் கூடாதென் பதில் மாற்றுக் கட்சிகளில் போட்டியிடும் தமிழர்கள் உறுதியாக இருப்பதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் கூறியுள்ளார்.

கல்முனை மாநகரசபைக்குப் போட்டியிடும் வேட்பாளர்களை ஆதரித்து சேனைக்குடியிருப்பில் நடைபெற்ற கூட்டத்தில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் இங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்,

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பானது தமிழ் மக்களின் ஏகோபித்த தனிப்பெரும் கட்சியாகும். சந்தர்ப்பவாதம் அரசியல் செய்யும் கட்சியாக இக் கட்சியை எவரும் எண்ணி விடக்கூடாது.

இக் கட்சிக்கு வந்து முகவரி எடுத்துக் கொண்டு தங்கள் சுய இலாபத்திற்கான மாற்றுக் கட்சிக்குத் தாவி த.தே.கூட்டளளள மைப்பினை தோற்கடிக்க முடியும் என்ற எண்ணம் கொண்ட எத்தனையோ பேர் இன்று இருந்த இடமே தெரியாமல் இருப்பதனையும் காண முடிகின்றது.

இவர்களுக்கான தண்டனையினை தமிழ்த் தேசியத்தினை ஆதரிக்கும் மக்கள் காலங்காலமாக புகட்டி வருகின்றனர். கல்முனை மாநகரசபையைப் பொறுத்தவரையில் அதிகளவில் முஸ்லிம் மக்களே வாக்காளர்களின் தொகை கூடியளவில் உள்ளனர்.

அடுத்தபடியாக தமிழர்கள் உள்ளனர். இதில் கூட்டமைப்பினர் எதிர்க்கட்சியாக தெரிவு செய்யப்படக் கூடாது என்பதில் மாற்றுக் கட்சிக்கு விலை போயுள்ள தமிழர்கள் உறுதியாக இருக்கிறார்கள்.

இவர்களுக்கான இந்த எண்ணத்தினை தமிழ் தேசியத்தை ஆதரிக்கும் மக்கள் த.தே.கூட்டமைப்பிற்கு வாக்களிப்பதன் மூலம் தமது பலத்தினை எடுத்துக் காட்ட முடியுமெனவும் கூறினார். (4-2)

# வலுவிழந்தோர் புனர்வாழ்வு சங்கத்தின் 21ஆவது ஆண்டுவிழா

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திலுள்ள வலுவிழந்தோர் புனர்வாழ்வுச் சங்கத்தின் 21 ஆவது ஆண்டு நிறைவு விழாவும் பரிசளிப்பு நிகழ்வும் எதிர் வரும் 22 ஆம் திகதி சனிக்கிழமை காலை 6.30 மணிமுதல் நண்பகல் ஒரு மணி வரை சங்கத்தின் விடுதிக்கட்டடத்தில் நடைபெறவுள்ளது.

இதில் காலை 6.30 மணிக்கு மாற்று வலுவுடையோர்களுக்கான துவிச்சக்கரவண்டி, முச்சக்கரவண்டி ஓட்டப்போட்டிகள் என்பன இடம்பெறும்.

அதனைத் தொடர்ந்து வினோத உடைப் போட்டிகள், கவிதை, நடனம், பாட்டு ஆகிய போட்டிகளில் முதலாம், இரண்டாம் இடங்களைப் பெற்ற வெற்றியாளர்களின் சமர்ப்பணம் என்பனவும் ஆர்க் பாடசாலை, சிவபூமி பாடசாலை வாழ்வகம், நவீல்ட் பாடசாலை, வழிப்புலனற்றோர் சங்கம், ஏ.ஆர்.ஓ.டி.போன்ற பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகளும், விற்பனை நிலைய திறப்பு விழாவும் இடம்பெறும்.

பின்னர் புத்தக வெளியீடு, அதனை தொடர்ந்து பரிசளிப்பு நிகழ்வுகளும் நடைபெறும்.

எனவே, மேற்படி நிகழ்வுகளில் பங்கு பற்றியவர்களும், பங்குபற்றவுள்ள மாற்றுவலுவுடையோர்களும் தங்களின் நிகழ்வுகளுக்குரிய ஆயத்தங்களை மேற்கொள்ளுமாறு வலுவிழந்தோர் புனர்வழ்வுச் சங்கச் செயலாளர் கே.கோபாலகிருஷ்ணன் கேட்டுள்ளார். (4-12)

# கலைவிழா நிகழ்வுகள்

(கரவெட்டி)

வடமராட்சி கரணவாய் மேற்கு சோழங்கன் சனசமூக நிலையத்தின் இலங்கை வங்கிக்கிராம கலைவிழா இன்று வெள்ளிக்கிழமை பி.ப.4 மணிக்கு சோழங்கன் சனசமூக நிலைய மண்டபத்தில் தலைவர் க.மகேந்திரகுமார் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக நெல்லியடி இலங்கை வங்கி முகாமையாளர் கதிர்காமத்தம்பி ஆனந்தராஜா கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

கௌரவ விருந்தினர்களாக கரணவாய் மகா வித்தியாலய அதிபர் கி.கிருஷ்ணாகரன், கரணவாய் மேற்கு கிராம அலுவலர் எஸ்.குகதாஸ் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.(4-3-24)

# யாழ்.மாவட்ட பொதுமக்கள் பாதுகாப்புக்குழுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட பொதுமக்கள் பாதுகாப்பு குழுவின் அங்குரார்ப்பணக் குழுக்கூட்டம் இன்று மதியம் 12 மணிக்கு மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில்பாரம்பரியகைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா தலைமையில் நடைபெறவுள்ளது.

இக் கூட்டத்திற்கு யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி.இமெல்டா சுகுமார், யாழ்.மாநகர சபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

எனவே, இதில் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர், உதவி பொலிஸ் அத்தியட்சகர்,பிரதேச செயலாளர்கள், உதவி அரசாங்க அதிபர்கள்,உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிரதேச சபை செயலாளர்கள், மேலதிக மாகாண கல்வி பணிப்பாளர், வலய கல்வி பணிப்பாளர்கள், பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர், பிரதம பிராந்திய முகாமையாளர், இலங்கை வடக்கு போக்குவரத்துச்சபை மற்றும் சகல முகாமையாளர்கள், தனியார் பேருந்து உரிமையாளர் சங்கம், இலங்கை மின்சாரசபை பொதுமுகாமையாளர், இலங்கை தொலைத் தொடர் பொதுமுகாமையாளர் ஆகியோரை தவறாது கலந்து கொள்ளுமாறு யாழ்.அரச அதிபர் இமெல்டா சுகுமார் அறிவித்துள்ளார். (4-12)


KALAIMAGAL International College

இலங்கை கல்வித்துறையில் சிறந்த பெறுபேறுகளை ஈட்டிக்கொள்ளும் மாணவர்கள் செறிந்து வாழும் வட பகுதியில் சர்வதேச மொழியான ஆங்கிலத்தின் புலமை சுமார் 25 வருடங்களாகத் தொலைக்கப்பட்ட அல்லது அக்கறை கொள்ளாத ஒன்றாகவே காணப்படுகின்றது.

இன்றைய உலகமயமாக்கலில் ஆங்கில அறிவு மிக மிக இன்றியமையாததாகக் காணப்படுவதனால் ஆங்கில மொழி மூலக் கல்வியின் அவசியம் காலத்தின் கட்டாயமாகும். இதனைக் கருத்திற்கொண்டு எமது கல்லூரி வட பகுதியில் ஆங்கிலமொழி மூலக் கல்வியை உள்வாங்கும் பொருட்டு பல இடங்களில் தனது கிளைகளை நிறுவியுள்ளது. எமது கலைமகள் சர்வதேச கல்லூரியின் சிறப்பான செயற்றிட்டங்கள் வருமாறு:

- பாலர் வகுப்பு முதல் க.பொ.த. (உ/த) வரை கல்வி நடவடிக்கைகளை மேற்கொள்ள இலங்கை கல்வித் திணைக்களத்திலும் பரீட்சைத் திணைக்களத்திலும் உரிய முறையில் பதிவு செய்யப்பட்ட முழுநேர தனியார் பாடசாலை (English Medium)
- சிறந்த ஆங்கில மொழி மூலம் பயிற்றப்பட்ட ஆசிரியர்கள்.
- சர்வதேச தரம் வாய்ந்த வகுப்பறை வடிவமைப்பு
- பிரத்தியேக சீருடை
- சாதாரண மக்கள் முகம்கொடுக்கக்கூடிய மிகக் குறைந்த அளவு கட்டண வசதி
- தமிழ், சமயம் ஆகிய பாடங்கள் தமிழ்மொழி மூலமும் ஏனைய அனைத்துப் பாடங்களும் ஆங்கில மொழிமூலம் சிங்களம் விருப்பத்துக்குரிய பாடமாகவும் கற்பிக்கும் கல்விக் கொள்கை.
- அரச பாடசாலைகளின் நேரசூசி அமைப்பு.
- விளையாட்டு, கலை, கலாசாரம் நிகழ்வுகளை கல்விசார் செயற்பாடுகளாக உள்வாங்கும் கல்விக்கொள்கை.
- மாணவர்களை உற்சாகப்படுத்தும் வருடாந்த பரிசளிப்பும், கலைவிழாக்களும்.



மேற்குறிப்பிட்ட சிறந்த செயற்பாடுகளுடன் இயங்கும் எமது கல்லூரியின் 2012 ஆம் ஆண்டுக்கான அனைத்து வகுப்புகளுக்குமான விண்ணப்பங்கள் ஒக்டோபர் மாதம் 30ஆம் திகதிக்கு முன் சமர்ப்பிக்குமாறு அறிவுறுத்தப்படுகிறது.

மேலதிக விபரங்களுக்கு எமது தலைமைக் காரியாலயத்தில் தொடர்பு கொள்ளவும்:

KALAIMAGAL International College
CHURCH LANE, KOKUVIL EAST, KOKUVIL.
T.P.:021 4923235, 0778834592, 0774904286, 0776548283

# கலாநிதி பட்டம் பெற்றுப் பெருமைசேர்த்த நம் ஆசான் ஆறுதிருமுருகன் அவர்களை ஸ்கந்தா மைந்தர்கள் நாம் வாழ்த்தி பேருவகையுடன் உவந்தளிக்கும் சிறப்பு மலர்

## சொல்லிய வண்ணம் செய்பவர்



சமயத் தத்துவங்களை இனிய தமிழின் சுவையோடு கலந்து ஆன்மீகச் சொற்பொழிவுகளை ஆற்றி, ஆற்றித் தனது சக்தியைப் பயனுள்ளவகையில் விரயமாக்கி, பல அர்ப்பணிப்புக்களைச் செய்த எமது 'சிவநெறித்தவமகனுக்கு' யாழ்.பல்கலைக் கழகம் உயர்விருதான கலாநிதிப் பட்டம் வழங்குவதையிட்டு எல்லையற்ற மகிழ்ச்சியடைகின்றேன். அவரை வாழ்த்துவதை ஒரு பேறாகக் கருதுகின்றேன்.

ஒருவர் வாழும் காலத்திலேயே அவரின் பணிகள், அர்ப்பணிப்புக்களைச் சீர்தூக்கி, வாழ்த்தி, அவர் உள்ளம் குளிரும்போதுதான் மேலும்மேலும் வேகமாக அவர் செயற்பட்டு பிறர் நன்மையடையமுடியும்.

தனது புனித அர்ப்பணிப்புள்ள சேவையால் மக்கள் மனங்களில் இடம்பெற்று உயர்ந்து நிற்கும் செஞ்சொற் செல்வருக்கு நீண்ட ஆயுளையும், உடல் ஆரோக்கியத்தையும் தர்மம் செய்வதற்குரிய செல்வத்தையும் எல்லாம்வல்ல துர்க்காதேவி அருள்வேண்டிப் பணிந்து வணங்குகின்றேன்.

க.சிவாஜி,
ஓய்வுநிலை அதிபர், ஸ்கந்தவரோதயக் கல்லூரி.

## சமூகத் தொண்டாற்றும் மகாத்மா



யாழ்ப்பாண மண்ணுக்கு சமூகத் தொண்டாற்றிவரும் எனது மதிப்புக்குரிய ஆசான் திரு.ஆறு.திருமுருகன் அவர்களுக்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இவரது சேவையைப் பாராட்டி 'கௌரவ கலாநிதி' பட்டத்தை வழங்குவதை எண்ணி மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.

எத்தனையோ இடர்பாடுகள் வந்தாலும் அதையெல்லாம் எதிர்நீச்சல் போட்டு தமது சேவையைத் தொடர்ந்து சாதனை படைத்துவந்ததன் விளைவே கௌரவ கலாநிதி என்னும் மகுடமாகும்.

ஆறு.திருமுருகன் ஆசிரியரின் மாணவர்களில் நானும் ஒருவன் என்னும் வகையில் பெருமையடைகின்றேன். இறைவனுடைய பேரருளால் ஆசிரியர் அவர்கள் மேன்மேலும் சமூகத் தொண்டாற்றி சாதனைகள் படைக்க சிறியேனுடைய வாழ்த்துக்களைச் சமர்ப்பிக்கின்றேன்.

திரு.நா.மாதவன் (2000 கலைப்பிரிவு)
உதவி விரிவுரையாளர், இசைத்துறை,
யாழ்.பல்கலைக்கழகம்.

## சிறந்த திட்டமிடலாளர்



ஆறு.திருமுருகன் அவர்கள் அப்துல் கலாம் சொன்னது போல ஒரு கனவுகாணும் நபர். சமூகத்துக்கான நலத்திட்டங்களை அல்லும் பகலும் கனவுகண்டு நனவாக்கும் திடம் வாய்க்கப் பெற்றவர். மண்டபம் ஒன்றை கட்ட ஆரம்பிக்கும் முன்பே விழாவுக்கான திகதியை நிச்சயிக்கும் ஒரு திட்டமிடலாளரை நான் இதுவரை கண்டதில்லை.


ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் அவரது வகுப்புக்களில் இருப்பது கம்பன் விழாக்களில் கலந்து கொண்ட களிப்பைத் தருவதுண்டு. 1996 முதல் 2001 வரையான காலப்பகுதியில் யாழ்ப்பாணத்தில் பலரும் ஆறு.திருமுருகன் பேச்சை ஆவலோடு கேட்க இயலாமல் இருந்த காலத்தில், கல்லூரியில் அவரது விரிவான உரைகளைக் கேட்கும் வாய்ப்புக் கிடைக்கப்பெற்றவர்களில் நானும் ஒருவன். " நல்லதே செய், பிறருக்கு உதவி செய்வதற்கு நீட்டப்படும் முதலாவது கை உன்னுடையதாக இருக்கவேண்டும்" போன்றவற்றை இயன்றவரை பின்பற்றுவதற்கு பள்ளிப்பருவத்திலேயே பலரையும் பழக்கி எடுத்த ஆசிரியர். ஏககாலத்தில் கடிந்து கொண்டும் கருணை காட்டியும் பல மாணவர்களை கடிவாளமிட்டு நல்வழிப்படுத்திய நல்லாசான்.

ல.றமணன் (98 கலைப்பிரிவு மாணவன்)
விரிவுரையாளர், யாழ்பல்கலைக்கழகம்.

## ஆன்மீகம் மலரட்டும்

கௌரவ கலாநிதிப் பட்டம் பெறும் யாழ்.ஸ்கந்தவரோதயக் கல்லூரி அதிபர் செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன் அவர்களை வாழ்த்துவதில் பேருவகையடைகின்றேன். அவரது ஆன்மீகப் பணிகள் சிறக்கப் பிரார்த்திக்கின்றேன். பொன்விழா நாயகனாய் விளங்கும் இவ்வாண்டில் கலாநிதியோடு நூற்றாண்டு விழாக்காணும்வரை உங்கள் பணிசிறக்க உளங்கனிவோடு வாழ்த்துகின்றோம்.

சா.செந்தில்குமார் (97 கணிதப் பிரிவு) கணனி பொறியியலாளர்.



செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன்
(B.A. Dip in Edu)

## உழைப்பால் உயர்ந்த உத்தமா



எமது கல்லூரி அதிபர் கோமகனுக்கு கௌரவ கலாநிதிப் பட்டம் கிடைத்தமையையிட்டு நாம் பெரும் உவகை அடைகின்றோம். மேலும் அதிபர் அவர்கள் கல்லூரியை முன்னின்று உழைத்த அதிபர் வரலாற்றில் முதன்முதலாகக் கலாநிதிப் பட்டம் பெற்ற ஓர் அதிபர் என்ற பெருமையைக கல்லூரி பெற்றுக்கொண்டமையையிட்டு எமது சமூகம் சந்தோஷப்படுவதோடு, அவரை மேன்மேலும் பட்டங்கள் பல பெற்று எமது கல்லூரிச் சமூகத்தின் முன்னோடிப் பெருமகனாகத் துலங்குவதற்கு எல்லாம்வல்ல ஸ்கந்தப் பெருமானை வேண்டி வாழ்த்துகின்றோம்.

ச.பிங்கலன் (99 வர்த்தகப் பிரிவு)
உப தபாலதிபர், சண்டிலிப்பாய்.

## நல்லாசான்



ஆன்மீகச் சொற்பொழிவுகளால் உலகையே கவர்ந்து, தொண்டுகள் பல செய்து தன்னலம் கருதாது சேவை செய்பவரும் எனது குருவுமாகிய செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன் அவர்களுக்கு உயர் விருதான கலாநிதிப் பட்டம் கிடைத்தமையையிட்டு உள்ளம் பூரித்து மகிழ்கின்றேன்.

ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் உயர்தர வகுப்பில் அவரிடம் இந்து சமயமும் இந்து நாகரிகமும் கற்பதற்கு வாய்ப்புக் கிடைத்தமையை ஒரு பேறாக எண்ணிப் பெருமிதமடைகின்றேன். அறிவுக்களஞ்சியமானவரும் தொடர்சொற்பொழிவுகள ஆற்றியதன்மூலம் ஞானம் பெற்றவருமாகிய எமது நல்லாசானிடமிருந்து நல்லறிவு பெற்றேன். அழகு தமிழில் கவர்ச் சியானமுறையில் எம்மைப் போதித்துப் பல்கலைக்கழகம் அனுப்பிவைத்தார்.

கல்வியை மட்டுமல்லாது ஒழுக்கநெறிகளை எமக்குக் கற்றுத்தந்த சிறப்புமிக்க வகுப்பாசிரியர் உலகின் எந்தமூலையில் இருந்தாலும் எனது ஆசானை எப்போதும் போற்றித் துதிக்கின்றேன்.

திருமதி கஜனி அகிலேந்திரன் (B.A.Hons)
97 கலைப்பிரிவு மாணவி சுவிட்சர்லாந்து.

## கௌரவ கலாநிதி செஞ்சொற் செல்வரே வாழி!




தேசமெல்லாம் சென்று புராண இதிகாச
செய்திகளை செஞ்சொல்லால் நிறையவைத்து
தேடியழைத்த கோயில்கள் எல்லாம்
பரசங்கம் வர்ணனை யாவும் ஆற்றிடுவீர்!

ஸ்கந்தவரோதயவின் முதல்வனாய்,
சமூகத்தின்
அரும்பணியாளனாய், சமூகக் காப்பாளனாய்
எழுத்தாளனாய் அரியபணிகள் யாவும் ஆற்றும்
நாயகன் பணிசிறக்க மனமார வாழ்த்துகின்றேன்.


லோகப்பிரகாசம் ரமணன் (97 வர்த்தகப் பிரிவு)
நிகழ்ச்சித்திட்ட உதவியாளர்
பிரதேசசெயலகம், சண்டிலிப்பாய்.

## வாழ்வாங்கு வாழ்ந்த சேவையாளர்



"வையத்துள் வாழ்வாங்கு
வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்" என்ற வள்ளுவரின் தீர்க்க தரிசனக் கூற்றுக்கு வலுச்சேர்த்து 'மனிதருள் தேவராக' அறநெறி நின்று வாழ்ந்துவரும் எமது மதிப்பார்ந்த குரு ஆறு.திருமுருகனுக்கு யாழ்.பல்கலைக்கழகம் கௌரவ கலாநிதிப் பட்டம் வழங்குவதையிட்டுப் பேருவகையடைகின்றோம்.

யாழ்.பல்கலைக் கழகம் மிகப் பெறுமதியான மனிதர்களை ஆண்டுதோறும் கௌரவித்து, தன்னுடைய சேவையின் உச்சத்தைத் தொட்டுவருவது சாலப்பொருத்தமாக அமைந்தவண்ணம் உள்



ளது. "தானுண்டு தன்வேலையுண்டு" என்று அலையும் மனிதர் மத்தியில் சமூக மேம்பாடு பற்றிச் சிந்திக்கும் ஆர்வம், பற்று அறவே இல்லாது போய்க்கொண்டிருக்கின்றது. சமூகப் பணியைப் பெரும் பணியாகக் கொண்டு வளர்த்த எமது சைவநெறி, ஆலயங்கள் அதன் வரலாற்றுப் போக்கிலிருந்து மாறி வேறு திசை நோக்கி இக்கலியுகத்தில் பயணிக்கின்றன. அவ்வாறான கட்டத்தில், தான் வாழும் சமூகத்துக்குத் தன்னாலான நிறைவான பணியைச் செய்ய முனைபவர்கள் புனிதர்கள். அப்பணிகள் சமூகத்தைச் சென்றடைந்து, அந்தச் சமூகம் அதனை மனதார வாழ்த்தும் போது அது மிகப்பெரும் இறைதொண்டாக மாறும். அதுபோலவே எமது மதிப்பார்ந்த குருவானவர் நொந்துபோன எம்மினத்திலுள்ள சகலமட்ட மக்களின் உடல், உள வலியைப் போக்குவதற்கும் சமூக நீரோட்டத்தில் அவர்களைச் சம அந்தஸ்துடன் சேர்த்துக்கொள்வதறகும் தன்னாலான பணியை இளகிய மனத்துடன் ஆற்றிவருவது நாம் செய்த பாக்கியம். அந்தப் பணி நலிவுற்ற எம்மினத்தின் வாழ்வில் ஒளியேற்றுவதற்கு மிகவும் உறுதுணையாக அமைந்துவருகின்றது. தனது பேச்சாற்றலை மையப்படுத்தி சமயவாதிகள், தமிழ்ப் பற்றாளர்கள், அறிஞர்கள், பாமரமக்கள், முதியவர்கள், சிறார்கள, மாற்றுவலுவுடையோர், நோயாளர்கள் எனப் பல மட்டத்திலும் உள்ள தமிழ் மனங்களில் நீங்கா இடம்பெற்று வருவதோடு, அந்தரித்துநிற்கும் மக்களுக்கெல்லாம் ஆறுதல் தரும் அதிசய மனிதராக எம் கண்முண்னே நாம் கண்டமை பெரும் பேறெனக் கருதி நிற்கின்றோம்.

ச.சுகீதன் (98 கலை), போ.உல்லாசனன் (98 கணிதம்)
யாழ்.மத்திய கல்லூரி ஆசிரியர்கள்.

## சீரிய சிந்தனையாளர்



ஆன்மீகச் சொற்பொழிவாளரும் சிவதொண்டரும், சமூகத் தொண்டரும், எனது பெருமதிப்புக்கும், பேரன்புக்குமுரிய குருவுமாகிய ஆறு. திருமுருகன் அவர்களுக்குக் கலாநிதிப்பட்டம் அளிக்கப்பட்டமை குறித்து மிகவும் மகிழ்ச்சியடைகின்றோம்.

இன்று அவர்காட்டிய தர்ம வழியிலே அவரது மாணவர்கள் தமது வாழ்க்கைப் பாதையைக் கொண்டுசென்று நற்பிரஜைகளாக வாழ்வதற்கு ஒளியாகி ஏற்றந்தந்த பெருமகன் இவர்.

மேலும் இவரது சிறந்த பணிகள் தொடர சகல பேறுகளையும் வழங்கியருளுமாறு இறைவனை வேண்டுகின்றேன்.

பா.விஜிந்தன் (98 கலைப்பிரிவு),
ஆசிரியர், பாப்பாமோட்டை றோ.க.த.க. பாடசாலை, மன்னார்.

## கலாநிதி பட்டத்திற்கு கௌரவம் சேர்க்கிறது



எமது சமூகம் நிஜமற்ற பல நிதர்சனங்களை சந்தித்து, துன்பத்தின விளம்பில் துயர் துடைக்க யாருமின்றி அநாதைகளாகவும் அகதிகளாகவும விதவைகளாகவும் அலைந்த போது விரல்விட்டு எணணக்கூடியவர்களே இதற்கு விடையளிக்க முற்பட்டனர். அவர்களுள் எனது ஆசான் ஆறு.திருமுருகன் அவர்கள் ஆற்றிய சேவை அளப்பரியது. அடுக்குவதற்கு இங்கு ஒடுக்கப்பட்ட இடம்தான உள்ளது ,ஆகவே ஒரு சொல்லில் முடிக்கிறேன். காலத்தால் அழியாத இவரது சேவையால் கலாநிதிப்பட்டதிற்கே கௌரவம் சேர்கிறது.

வாழ்த்துபவர் தங்கள் மாணவன்
ஆர்.கே.மேனன் BA,Dip.in.tea, S.L.T.S 2-11
கணித ஆசிரியர் (யாழ் கொழும்புத்துறை இந்து ம.வி)


## மாணவர் வளர்ச்சியில் அக்கறையுள்ளவர்

எமது மதிப்பார்ந்த குரு நல்லாசான் ஆறு.திருமுருகன் அவர்கள் தன்னிடம் கல்வி கற்கின்ற ஒவ்வொரு மாணவர்களிலும் தனி அக்கறை கொண்டு கற்பித்தலை மேற்கொளவார். நாம் வகுப்பறையில் பாட விதானத்தில் கவனமற்றிருந்தால் எமது உடல், உளத் தாக்கங்களை இனங்கண்டு அவற்றை நிவர்த்திப்பார்.

எமது கல்லூரிக்காலம் முடிவுற்றது. ஒவ்வொரு மாணவரும் எவ்வாறு வாழ்கின்றார்கள் என்றெண்ணி அவர்களது நல் வாழ்வுக்கு தொழில் ரீதியிலான உதவிகளைப் புரிவார். எமது வாழ்வு சிறப்புற்றமைய எம் குருநாதரின் ஆசியும் அருளுந்தான் காரணம் என்றால் மிகையாகாது.

பொ.சந்திரசேகரம் (98 கலை),
விரிவுரையாளர், இந்து நாகரிக பீடம்.

# அவுஸ்திரேலியாவிலும் ஜனாதிபதிக்கு எதிராக வழக்குத்தாக்கல் செய்ய முடிவு



(கொழும்பு)

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிற்கு எதிராக அவுஸ்திரேலியாவிலும் வழக்குத் தாக்கல் செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. எதிர்வரும் 28 ஆம் திகதி தொடக்கம் 30 ஆம் திகதி வரை அவுஸ்திரேலியாவில் பொது நலவாய நாடுகளின் அமைப்பின் மாநாடு நடைபெறவுள்ளது.

அதில் கலந்து கொள்ள வருகை தரவுள்ள ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை இலக்கு வைத்தே அவுஸ்திரேலியாவில் வழக்குத் தாக்கல் செய்வது குறித்து மனித உரிமை அமைப்புகள் நடவடிக்கைகளை முன்னெடுத்து வருவதாக அறிய முடிகின்றது.

இதற்கிடையே அவுஸ்திரேலியாவில் பொதுநலவாய நாடுகளின் மாநாடு நடைபெறும் காலப்பகுதியில் உலகத் தமிழர் பேரவையின் அமர்வொன்றை அந்நாட்டில் நடத்தவும் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அதன்மூலம் இலங்கையில் தமிழ் மக்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட அநீதிகள் மற்றும் போர்க்குற்றங்களை உலகத் தலைவர்களுக்கு விளக்க நடவடிக்கைகளை முன்னெடுக்கப்படவுள்ளதாக அறியக் கிடைத்துள்ளது. (4-2)

# அனர்த்த அபாய குறைப்பு தினம் கிளிநொச்சியில் கடைபிடிப்பு

(கிளிநொச்சி)

ஒக்ஸ்பாம் நிறுவனத்தின் நிதியுதவியுடன் சர்வதேச அனர்த்த அபாய குறைப்பு தினம் எதிர்வரும் 13 ஆம் திகதி கிளிநொச்சிமாவட்ட செயலகத்தில் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

கிளிநொச்சி மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவினரால் செயற்படுத்தப்படும் இத்தினத்தில் கிளிநொச்சி மாவட்ட பாடசாலை ஆசிரியர்களுக்கு அனர்த்த அபாயம் தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தமர்வு நடைபெறவுள்ளது.

இக் கருத்தமர்வினை ஆசிரியர்களுக்கு நடத்துவதனால் அவர்களது வழிகாட்டலில் உள்ள மாணவர்களுக்கும் மற்றும் கிராம மக்களுக்கும் அனர்த்த அபாயம் பற்றிய விழிப்புணர்வை பெற்றுக் கொள்வார்கள் என எதிர் பார்க்கப்படுகின்றது. (4-3)

# பூநகரி பிரதேச கடற்பகுதியில் இந்திய மீனவர்களின் ஊடுருவல்

(கொழும்பு)

பூநகரி பிரதேசத்தில் இரணைதீவு, வலைப்பாடு, பள்ளிக்குடா கடற்பகுதிகளில் இந்திய மீனவர்களின் ஊடுருவல் அதிகரித்துள்ளமையினால் மீன்பிடித் தொழிலையே நம்பி வாழ்ந்துவரும் மீனவர்களின் வருமானத்தில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது மல்லாமல் பெறுமதி வாய்ந்த மீன்பிடி வலைகளும் சேதத்திற்குள்ளாகின்றன.

இந்த அத்துமீறல் செயற்பாடு குறித்து சம்பந்தபட்டவர்களுக்கு தெரிவித்தும் இதுவரை எவ்வித நடவடிக்கையும் எடுக்காதது குறித்துக் கவலையும் அதிருப்தியும் அடைந்துள்ள மீனவர் இந்திய அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு றோலர் தொழிலைத் தடுத்து நிறுத்த நடவடிக்கை எடுக்குமாறு உரியவர்களைக் கோரியுள்ளனர்.

பூநகரி கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தை சேர்ந்த சுமார் 2 ஆயிரத் திற்கும் அதிகமான மீனவர் இரணைதீவு, வலைப்பாடு, பள்ளிக்குடா, கௌதாரிமுனை ஆகிய கடற்பரப்புக்களில் மீன்பிடித் தொழில் ஈடுபட்டு வருகின்றார்கள்.

இக்கடல் பிரதேசங்களில் இந்திய மீனவர் றோலர் தொழிலில் அத்துமீறி ஈடுபடுவதால் கடல் வளம் அழிந்து போவதுடன் மீனவர்களின் பெறுமதியான வலைகளும் சேதத்திற்குள்ளாகின்றன.

இதனால் இத்தொழிலையே நம்பி வாழ்ந்துவரும் மீனவர்களின் வருமானத்திலும் பாதிப்பு ஏற்படுகின்றது. எனவே இந்திய அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு இந்திய மீனவர்களின் ஊடுருவலைத் தடுக்க சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று பாதிக்கப்பட்ட மீனவர்கள் கோரியுள்ளனர். (4-2)

# தேர்தல் முறைப்பாட்டு ஆணைக்குழு கட்டாயம் அமைக்கப்படவேண்டும்

## பவ்ரல் அமைப்பு சுட்டிக்காட்டு

(கொழும்பு)

தேர்தல் முறைப்பாட்டு ஆணைக்குழுவொன்று நிறுவப்பட வேண்டும் என இலங்கையின் முன்னணி தேர்தல் கண்காணிப்பு குழுவான பவ்ரல் தெரிவித்துள்ளது.

நாளை வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தல் பிரசார நடவடிக்கைகளின் போது முறைப்பாட்டு ஆணைக்குழுவின் தேவை வெகுவாக உணரப்பட்டது என கண்காணிப்புக் குழுவின் தலைவர் ரோஹண ஹெட்டியாரச்சி தெரிவித்துள்ளார்.

தாய்லாந்து போன்ற நாடுகளில் இவ்வாறான ஆணைக்குழுக்கள் இயங்கி வருவதாக குறிப்பிட்டுள்ளார். தேர்தல் வன்முறைகளில் ஈடுபடும்வேட்பாளர்களை இரத்து செய்யும் அதிகாரம் தேர்தல் ஆணையாளருக்கு வழங்கப்படவேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார்.

விரிவான விசாரணைகளின் பின்னர் வேட்பாளர்கள் குற்றச்செயலில் ஈடுபட்டதாக கண்டறியப்பட்டால் அவர்கள் தேர்தலில் போட்டியிட அனுமதிக்கப்படக்கூடாதுஎன அவர் தெரிவித்துள்ளார்.

இந்தத் தடவையும் கண்மூடித்தனமான தேர்தல்சட்ட மீறல் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளதாககுறிப்பிட்டுள்ளார். தெற்கில் ஓர் வேட் பாளர் தமது ஆதாரவாளர்களுக்கு 1000 ரூபா பணம், உணவுப் பொட்டலம், மதுபானம் ஆகியவற்றை வழங்கியுள்ளதாக தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் பிரசார நடவடிக்கைகளின் போது சட்டவிதிகள் மீறப்பட்டுள்ளதாகக் குற்றம் சுமத்தியுள்ளார். (4-2)

# புகைபிடிப்பதால் உயிரிழப்போரின் எண்ணிக்கை தொடர்ந்தும் அதிகரிப்பு

## 40 மில்லியன் பேர் உயிரிழக்கும் நிலை

(கொழும்பு)

புகைபிடிப்பதால் உயிரிழப்போரின் எண்ணிக்கை தொடர்ந்தும் அதிகரித்துச் செல்வதாக சர்வதேச ஆய்வொன்றின் மூலம் தெரியவந்துள்ளது.

புகைபிடித்தலால் ஏற்படும் காசநோய் காரணமாக சுமார் 40 மில்லியன் பேர் எதிர்வரும் 2050 ஆம் ஆண்டுக்கு முன்னதாக உயிரிழக்கும் அபாயம் நிலவுகின்றமை குறித்த ஆய்வில் உறுதிசெய்யப்பட்டுள்ளது.

ஆபிரிக்கா, மத்திய தரைக்கடலை அண்மித்த நாடுகள் மற்றும் தென்கிழக்காசியா ஆகிய பிராந்தியங்களிலேயே காச நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாக கூறப்படுகிறது.

புகையிலை உற்பத்தி நிறுவனங்கள் சில நாடுகளில் முன்னெடுத்துள்ள விரிவான சந்தைப்படுத்தல் திட்டங்களால் புகைபிடிப்போரின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாகவும் சுட்டிக்காட்டியுள்ளது.

சுமார் 20 வருடங்களுக்கு முன்னதாக உலக சுகாதாரத்திற்கு பாதிப்பை ஏற்படுத்தும் நோயாக காசநோயை உலக சுகாதார ஸ்தாபனம் பிரகடனம் செய்திருந்ததாக பிரித்தானியா வின் மருந்துவ நிபுணர் டொக்டர் ஜோன் மூரே கில்லன் கூறியுள்ளார்.

இந்த பிரகடனத்தை அடுத்து நாளுக்கு நாள் காசநோயால் பாதிக்கப்படுவோரின் எண்ணிக்கை அதிகரித்ததேயொழிய குறைவடையவில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

உலக சனத்தொகையில் ஐந்தில் ஒரு பகுதியினர் புகைத்தலுக்க அடிமையாகியுள்ளதாகவும் சர்வதேச புகையிலை நிறுவனங்கள் பல்வேறு நாடுகளிலும் மேற்கொண்டு வரும் விரிவான சந்தைப்படுத்தல் ஊக்குவிப்பு திட்டங்களே இதற்கான காரணம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் காசநோயில் இருந்து மக்களை பாதுகாப்பதற்கான விரிவான செயற்றிட்டங்களை உலகளாவிய ரீதியில் முன்னெடுக்க வேண்டியதன் அவசியத்தை சுகாதாரத் தரப்பினர் வலியுறுத்தியுள்ளனர். (4-2)

# எரிவாயு மையத்தின் பயனை பெற இரு ஆண்டுகள் தேவை

## அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவிப்பு



(கொழும்பு)

இலங்கையின் மன்னார் கடற்பரப்பில் கண்டுபிடிக்கப்பட்டுள்ள எரிவாயு மையத்தின் பயனை பெற்றுக்கொள்ள இரண்டு ஆண்டுகள் செல்லும். ஆனால், மேற்படி எரிவாயு மையத்தினால் நாடு பொருளாதார ரீதியில் விரைவான அபிவிருத்தியை காணுமென்று அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

இந்த எரிவாயுவின் பயன்பாட்டை முழு அளவில் பெற்றுக் கொண்டதன் பின்னர் உள்நாட்டில் பொதுமக்களுக்கு குறைந்த விலையில் எரிவாயுவினை வழங்க முடியும்.

அதேபோன்று மேலதிகமானவற்றை ஏனைய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதன் மூலம் கூடிய வருமானத்தை பெற்றுக் கொள்ள முடியுமென்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

மகாவலி கேந்திர நிலையத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற விசேட செய்தியாளர் மாநாட்டிலேயே அமைச்சர் சுசில் பிரேமஜயந்த மேற்கண்டவாறு கூறினார்.

இவர் இங்கு தொடர்ந்து கூறுகையில், மன்னார் கடலில் அடிமட்ட நிலப்பரப்பில் இருந்த ஆயிரத்து 354 அடி ஆழத்தில் எரிவாயு மையமொன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அறிவித்துள்ளார். இந்த அறிவிப்பானது 2 கோடி நாட்டு மக்களுக்கும் சந்தோசமான சமாச்சாரமாகும். ஏனென்றால் எரிவாயு மற்றும் கனியவளம் உள்நாடுகள் செல்வந்த நாடாக திகழ்கின்றன. தற்போது இலங்கைக்கும் இயற்கை எரிவாயு மையம் கிடைக்கப் பெற்றுள்ளதால் நாடு பன்மடங்கில் அபிவிருத்தியடைந்துவிடும்.

எவ்வாறாயினும் மேற்படி எரிவாயு மையத்திலிருந்து வாயுவை பாதுகாப்பான முறையில் களஞ்சியப்படுத்தி அதனை வகைப்படுத்தி மக்கள் பயன்பாட்டுக்கு வழங்க சுமார் 24 மாதங்கள் தேவைப்படுகின்றது.எள

அதேபோன்று எரிவாயுவை பயன்படுத்தும்போது ஓசோன் படலம் உள்ளிட்ட வாயு கோளங்கள் பாதுகாக்கப்படுகின்றன. இவ்வாறு பல வகைகளில் இலங்கை நன்மையடையும் எனத் தெரிவித்தார். (4-2)

# கமநல சேவை நிலையத்தினரால் மானியவிலையில் உரம் வழங்கல்

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி கமநல சேவைகள் நிலையத்தினரால் விவசாயிகளுக்கு மானிய விலையிலான உரம் கடந்த 28 ஆம் திகதி தொடக்கம் வழங்கப்பட்டு வருகின்றது. திகதி ரீதியாக உரம் வழங்கப்படும் பிரிவுகள் அறிவிக்கப்பட்டுள்ளன. அதன் விபரம் வருமாறு,

இன்று வெள்ளிக்கிழமை காலை குடமியன், மாலை சரசாலை வடக்கு, மறுநாள் சனிக்கிழமை காலை விடத்தல்பளை, 10 ஆம் திகதி திங்கட்கிழமை காலை வரணிஇயற்றாலை, மாலை கச்சாய், 12 ஆம் திகதி புதன்கிழமை காலை நாவற்காடு, மாலை கெற்பெலி, 13 ஆம் திகதி வியாழக்கிழமை காலை வரணி வடக்கு, மாலை வெள்ளாம் போக்கட்டி, 14 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை கரம்பகம், மாலை மிருசுவில் தெற்கு, 15 ஆம் திகதி சனிக்கிழமை காலை கரம்பைக் குறிச்சி, 17 ஆம் திகதி திங்கட்கிழமை காலை சரசாலை தெற்கு, மாலை கொடிகாமம் வடக்கு,

18 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை மாசேரி, மாலை மீசாலை வடக்கு, 19 ஆம் திகதி புதன்கிழமை மந்துவில் ஆகிய இடங்களுக்கு வழங்கப்படவுள்ளன. (4-2)

# விவசாயி நமது வளர்ப்புத் தாய்




ஆன்மீகம் ஐ

…இதற்கு அடிப்படையாக ஒரு பிரச்சினை இருக்கிறது. இப்போது நீங்கள் கரும்பு பயிர் செய்கிறீர்கள் என்றால் தொன் ஒன்றிற்கு 1800 ரூபாய் கொடுக்கிறார்கள். உங்களுக்குப் போதவில்லை. 5000 ரூபாய் வழங்க வேண்டும் என்று அரசாங்கத்திடம் போராடுகிறீர்கள். அரசும் அனுமதி தீர்வு கிடைக்கும். என் பிரச்சினை மட்டும் தீர்ந்ததென்று செயற்பட்டால் எத்தனை நாள் நடக்கும். நாம் வியாபாரம் செய்தாலும் பயிர் வளர்த்தாலும் குடும்பத்தில் இருந்தாலும் செய்கின்ற செயலினால் அனைவருக்கும் நன்மை இருப்பது போல செயற்பட வேண்டும். எப்போதுமே இரு தரப்பிலும் ரூபாய் கேட்டோம் அடுத்த வருடம் அவர் வாங்கவில்லையென்றால் நமது உழைப்பு என்னவாகும். இப்போது 2000 ரூபாய் வருகிறது இது பரவாயில்லை. ஆனால் ஒரு ரூபாய் கூட வரவில்லையென்றால் அடுத்த வருடம் என் செய்வது? நாம் கேட்கிறோம். கொடுப்பதற்கு அவருக்குத் திறமை

## நாம் செய்கின்ற செயல்கள் அனைவருக்கும் நன்மையை ஏற்படுத்த வேண்டும்

வழங்கிவிட்டது. நான் கரும்பு ஆலை நடத்தி வருகிறேன் என்று வைத்துக் கொள்ளுங்கள். கொள் முதல் விலை 5000 ரூபாய் என்பதை அறிந்து, எனக்குக் கரும்பு வேண்டாம். என்னால் முதலீடு செய்து நடத்த முடியாது. என்று நான் சொன்னால், இப்போது நீங்கள் என்ன செய்வீர்கள்? இதற்கு என்ன தீர்வு? ஒரு பிரச்சினைக்கு பல நிலைகள், பல கட்டங்கள் இருக்கின்னறன. விவசாயி, பிரச்சினையில் இருக்கிற தனது நிலையை உணர்ந்திருக்கிறார். ஆனால், பல நிலைகள் இருக்கின்றன. எல்லா நிலைகளிலிருந்தும் அந்தப்பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டும். ஒரு நிலையில் இருந்து மட்டும் தீர்வு பெற்றால் அது ‘நாம்’ அல்ல. நானிலிருந்து ‘நாம்’ ஆனால் தான் முழுமையான



இலாபம் இருந்தால்தான் உறவு தொடர்ந்திருக்கும். எனக்குமட்டுமே இலாபமாக இருக்க வேண்டும் என்றால் வியாபாரமும் நடக்காது; குடும்பமும் நடக்காது.

இப்போது நமக்குத் தேவையான விலை கிடைக்கவில்லை. உண்மை தான். நிச்சயமாக அதைப்பற்றிக் கவ்னம் வேண்டும். கரும்புக்கு 5000 இருக்கிறதா என்பதைப் பார்க்க வேண்டும். இப்போது தமிழ் நாட்டில் மிக முக்கியமான விடயம் வருடம் முழுவதும் நாம் எது வேண்டுமானாலும் பயிரிட முடியும். நமது நிலங்கள் இது போன்று வளமாக இருக்கிற போது கரும்பு, நெல்தான் பயிரிட வேண்டும் என்பதில்லை. இப்போது உலகில எந்தப் பொருளுக்கு தேவை இருக்கிறது என்று உற்றுக் கவனித்து சொல்லக்கூடிய ஆட்கள் வேண்டும். இப்போது வாழைப்பழம், சொட்டு நீர்ப்பாசன முறையில் இயற்கை விவசாயம் மூலமாக தமிழ்நாட்டில் எந்தத் தோட்டதில் வேண்டுமானாலும் பயிரிட முடியும். அதுபோன்ற சுற்றுச்சூழல் இருக்கிறது. அமெரிக்காவில் ஒரு வாழைப்பழம் ரூபாய் 25 ஆகிறது. 25 ரூபாய்க்கு விற்கிற வாழைப்பழத்தை நாம் பயிர் செய்வதற்கு 50 சதம் செலவாகிறது. நமது ஊர்ச் சந்தைக்குச் சென்றால் அதன் விலை 1 ரூபாய். 50 சதத்திற்கு விளைந்த வாழைப் பழத்திற்கு 1 ரூபாய் கிடைத்தது. அவர் 25 ரூபாய்க்கு விற்றால் நன்றாகத்தானே இருக்கும்! அமெரிக்காவின் சந்தையில் இடம் பிடித்து, இங்கிருக்கின்ற விவசாயிகளை ஒன்றுபடுத்தி ஒரே நாளில் விழைச்சலை எல்லாம் விமானத்தில் எடுத்துச் சென்று விற்பனை செய்யக்கூடிய திறமை கொண்ட நிறுவனம் வேண்டும். நாம் அந்த நிறுவனத்தை உருவாக்க வேண்டும் என்று முயற்சி செய்திருக்கிறோம். நாம் சிரமப்பட்டு உழைக்கிறோம் என்பதும் உண்மை. நமக்கு நல்ல இலாபம் வரவேண்டும் என்பதும் உண்மை. 14000 விவசாயிகள் தற்கொலை செய்து கொண்டார்கள் என்பதும் உண்மை. ஆனால் நமக்கு ஒரு தீர்வு வேண்டுமென்றால் எதிர்ச்செயலாக நினைக்காமல் நீண்ட பார்வையோடு இதை அணுக வேண்டும்.

(தொடரும்)

சத்குரு ஜக்கி வாசு தேவ்

# கிழக்கிலங்கையில் தொலையும் தொன்மைகளும் தொன்மைக் கிராமங்களும்

02

### தனித் தமிழ் பிரதேசங்களில் தன்னாட்சி வன்னிமைகள்

யாழ்ப்பாணக்குடா நாடும் மேற்குக் கரையோரமும் போர்த்துக்கேயர் ஆட்சிக்குட்பட்டிருந்தன. இதற்கெனத் தனி ஆட்சி அமைப்பையும் அவர்கள் நிறுவியிருந்தனர். ஆனால், கிழக்கே இருந்த வன்னிமைகள் போர்த்துக்கேயருக்கு திறை கொடுக்க விரும்பவில்லை. கண்டி மன்னனின் ஆணையையும் ஏற்கவில்லை.

தன்னாட்சி வன்னிமைகளான கிழக்குக் கரையோரம் கொட்டியாரப்பற்று, பளுகாமம், பாணமை ஆகிய மூன்று வன்னிமைகளும் கண்டி மன்னனிடம் பாதுகாப்புக் கோரியிருந்தன. எனினும் தன்னாட்சி பிரிவுகளாகிய தனித்தமிழ்ப் பிரதேசங்களாகவே இவை செயற்பட்டன. மகாவலி ஆற்றுக்குக் கிழக்கே உள்ள நிலப்பகுதிகள் குமுக்கன் ஆற்றுக்குக் கிழக்கே உள்ள நிலப் பகுதிகள் இவ்வன்னிமைக்குட்படுத்தப்பட்டிருந்தன.[4]

### தமிழகம் பற்றி றொபேட் நொக்ஸ் இன் குறிப்பு

கி.பி.1660 இல் றொபேட் நொக்ஸ் என்ற ஆங்கிலேயன் கண்டி மன்னனின் தளபதிகளால் திருகோணமலையில் வைத்து சிறைபிடிக்கப்பட்டான். 1679 இல் தப்பியோடிய நொக்ஸ் தமிழகம் பற்றி கூறியுள்ளவை முக்கியமானவை.[5] தமிழினம் இத்தீவில் தனியினமாக வாழ்வதையும், சிங்கள மக்களைக் காட்டிலும் நாகரிகம் உடையவர்களாக வாழ்ந்தமையையும் சுட்டிக்காட்டியுள்ளான். தப்பியோடும் வழியில் அநுராதபுரம் அடைந்த நொக்ஸ் தான் கண்டவற்றையும் கூறியுள்ளான். சிங்கள மொழி தெரிந்தோர் எங்கும் இல்லை எனவும் ஊர்களிலும், வழிகளிலும், கடைகளிலும் தமிழரே வாழ்ந்தனர் எனவும் கூறியுள்ளார். அருவி வரை சென்ற நொக்ஸ் வழி நெடுகிலும் தமிழர் வாழ்கின்றமையையும் கைலாய வன்னியன் ஆட்சியில் இருந்தமையையும் சுட்டிக் காட்டியுள்ளார்.

### அட்சியன் ரேலண்ட் தமிழினம் பற்றிக் குறிப்பிட்டுள்ளமை

பலர் இவ்விதமான குறிப்புக்கள் கூறியிருந்தாலும் 17 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இங்கு வந்த அட்சியன் ரேலண்ட் இத்தீவின் பழமை பற்றிக் கூறியுள்ளான். தீவின் பெரும் பகுதி தமிழர் வசம் இருந்

“கொழும்பில் நடைபெற்ற சர்வதேச தமிழ் எழுத்தாளர் மாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வுக்கட்டுரை”

தாகக் கூறும் இவன் ஒல்லாந்தர் காலத்தில் கரையோரத்திலுள்ள துணைக் கண்டத்திற்கு அருகாமையிலுள்ள ஏனைய மாவட்டங்களிலும் தமிழ் மொழி பேச்சு வழக்கில் இருந்துள்ளது எனக் குறிப்பிட்டுள்ளார்.[6]

### தமிழகம் பற்றி கிறிஸ்தோபர் சுவைட்சர் கூறியுள்ளது

கி.பி. 1700 இல் ஒல்லாந்தர் காலத்தில் வந்த கிறிஸ்தோபர் சுவைட்சர் இத்தீவின் தமிழ் குடிகள் காலி, மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை, நீர்கொழும்புக் கரையோரம் வரை வாழ்ந்தனர் எனக் குறிப்பிட்டுள்ளார். வன்னி நாட்டுத் தமிழரைத் தவிர ஏனையோர் ஒல்லாந்தர் ஆட்சிக்கு உட்பட்டிருந்தனர் எனக்கூறியுள்ளார்.[7] இலங்கையின் கரையோரப்பகுதியை ஆட்சிக்குட்படுத்தியிருந்த ஒல்லாந்தர் அவற்றை 6 பிரிவுகளாகப்பிரித்தனர். அவை வருமாறு[8]:

1. பென்தோட்டை ஆறு தொடக்கம் தெதுறு ஓயா வரை உள்ள பிரதேசம்- கொழும்பு ஆட்சி மாவட்டம்.
2. தெதுறு ஓயா தொடக்கம் மோதரகம் ஆறு வரை உள்ள பிரதேசம்- புத்தளம் கற்பிட்டி ஆட்சி மாவட்டம்.
3. மோதரகம் ஆறு தொடக்கம் வடக்கே குடாநாடு, வன்னி ஆகிய வற்றை உள்ளடக்கி, கிழக்கே கொக்கிளாய் வரை உள்ள பிரதேசம் - யாழப்பாண ஆட்சிமாவட்டம்.
4. கொக்கிளாய் தொடக்கம் கிழக்குக் கரையோரம் தெற்கே வெருகல் ஆறுவரை உள்ள பிரதேசம் - திருகோணமலை ஆட்சி மாவட்டம்.
5. வெருகல் ஆற்றிலிருந்து தெற்கே குமுக்கன் ஆறுவரை உள்ள பிரதேசம் - மட்டக்களப்பு மாவட்டம்.
6. குமுக்கன் ஆற்றிலிருந்து தெற்கே ரோகணம், பெந்தோட்டை ஆறுவரை உள்ள பிரதேசம்- காலி மாவட்டம்.

இதிலிருந்து ஒல்லாந்தர் ஆட்சிக் காலத்தில் மட்டக்களப்பு மாவட்டம் என்பது மேலே கூறியுள்ளவற்றில் வெருகல் ஆற்றிலிருந்து தெற்கே குமுக்கன் ஆறுவரை உள்ளடக்கிய பிரதேமாகும் என்பது தெளிவாகிறது. கொழும்பு, காலி தவிர்ந்த பிரதேசங்களில் தமிழரின் ஆட்சி முறைக்கேற்பவே ஆட்சியும் மேற்கொள்ளப்பட்டன.

பிரிட்டிஸ் காரர் ஆட்சியின்போது 1796 இல் வரையப்பட்ட பல வரைபடங்ளில் புத்தளம், கற்பிட்டி வரையிலான கரையோரங்கள் தமிழரின் ஆட்சிப்பிரதேசம் என்பதைத் தெளிவாகக் காட்டுகின்றன. கொழும்பிலிருந்து தெற்காக குமுக்கன் வரையுள்ள கரையோரப் பிரதேசம் மட்டுமே சிங்கள ஆட்சிப் பிரதேசங்களாயிருந்தன என்பதை இவர்களது வரைபடங்கள் காட்டுகின்றன. இது அரோசிமித்யின் படத்தில் தெளிவாகக் காட்டப்பட்டுள்ளது.[9]

(தொடரும்)

செல்வி கதிர்காமன் தங்கேஸ்வரி

# இலங்கை அரசாங்கம் இனவாத கொள்கையை பின்பற்றுகின்றது



## வைகோ குற்றச்சாட்டு

(கொழும்பு)

தமிழர் பிரதேசங்களில் சிங்கள மக்கள் குடியேற்றப்படுவதாக மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுச்செயலாளர் வை. கோபாலசாமி தெரிவித்துள்ளார்.

இலங்கை அரசாங்கம் இனவாத கொள்கைகளைப் பின்பற்றி வருவதாக குற்றம் சுமத்தியுள்ளார்.

தமிழ் மக்களுக்கு எதிராக இன சுத்திகரிப்பு நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொண்டு வருகின்றது எனவும் திட்டமிட்ட வகையில் தமிழ் சமூகத்தை அரசாங்கம் ஒடுக்கி வருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். தமிழர்களின் மரபு நிலங்களில் திட்டமிட்ட வகையில் சிங்கள மக்கள் குடியேற்றப்பட்டு வருவதாகவும் இதற்கு அரசாங்கத்திற்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமெனவும் அவர் வலியுறுத்தியுள்ளளார்.

இலங்கையின் இனச் சுத்திகரிப்பு நடவடிக்கைகளுக்கு இந்திய மத்திய அரசாங்கம் ஆதரவு வழங்கி வருவதாக குறிப்பிட்டுள்ளார்.

இந்தியா மற்றும் இலங்கை ஆகிய நாடுகளின் மத்திய அரசாங்கங்களின் மீது சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் வழக்குத் தொடர வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார்.

இந்திய மத்திய அரசாங்கத்தின் துரோகச் செயலை ஒருபோதும் மன்னிக்க முடியாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தமிழ் மக்களின் மீது பிரயோகிக்கப்பட்ட அடகுக்கு முறைகளுக்கு இந்திய மத்திய அரசாங்கம் ஒத்துழைப்பு வழங்கியதாகக் குறிப்பிட்டுள்ளார். (4-2)

# கட்சியின் சவால்களை எதிர்நோக்கி வெற்றிகொள்ளத்தயார்–ரில்வின்

(கொழும்பு)

கிளர்ச்சியாளர்கள் ஜே.வி.பி கட்சியை இல்லாதொழிக்கும் முனைப்புக்களில் ஈடுபட்டுள்ளதாக கட்சியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

ஜே.வி.பி.கிளர்ச்சியாளர்கள் கட்சியை சீர்குலைப்பதற்கு ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு மற்றும் ஐக்கிய தேசியக் கட்சி ஆகியவற்றுக்கு சந்தர்ப்பம் ஏற்படுத்திக் கொடுப்பதாகத் குற்றம் சுமத்தியுள்ளார்.

இவ்வாறான சவால்களை ஜே.பி.வி எதிர்நோக்கும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.கட்சி கிளர்ச்சியாளர்களை ஏற்றுக் கொள்ளத் தயார் எனவும் மத்திய செயற்குழுவில் அங்கம் வகித்து கட்சிக்குத் துரோகம் இழைத்தவர்களை மன்னிக்க முடியாது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பிரேம்குமார் குணரட்னம் என்ற ஒருவரைத் தமக்குத் தெரியாது எனவும் அவ்வாறன நபர் பற்றி பேசப் போவதில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார். இவ்வாறான சவால்களை எதிர்நோக்கி வெற்றிகொள்ளக்கூடிய ஆற்றல் ஜே.வி.பி.கட்சியிடம் வெகுவாகக் காணப்படுகின்றது என அவர் குறிப்பிட்டுள்ளார். (4-2)

# மருத்துவர்களுக்கு இழைக்கப்படும் அநீதிகள் குறித்து அக்கறை அவசியம்

## ஜனாதிபதியிடம் மருத்துவர்கள் கோரிக்கை

(கொழும்பு)

நாட்டில் சட்டம், ஒழுங்கை நிலைநாட்டுவதற்கு அரசாங்கம் முனைப்பு காட்ட வேண்டுமென மருத்துவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

சட்டம் ஒழுங்கைப் பேணும் நல்ல பிரஜைகள் மீது குற்றவாளிகள் தாகுதல் நடத்த வருவதாக அரசாங்க மருத்துவ உத்தியோகதர் பேரவை அறிவித்துள்ளது.

சமூக விரோத செயல்களில் ஈடுபடுவோருக்கு எதிராக அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென வலியுறுத்தியுள்ளது.

இலங்கை மருத்துவ பேரவையின் பதிவாளர் டாக்டர் என்.ஜே.நோனிஸ் மீது தாக்குதல் நடத்தப்பட்ட சம்பவத்திற்கு அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் பேரவை, அரசாங்க பல் மருத்துவர் பேரவை, இலங்கை மருத்துவ நிபுணர் பேரவை, இலங்கை மருத்துவ பேரவை ஆகியன் எதிர்ப்பை வெளியிட்டுள்ளன.

சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேனவுடன் நடைபெற்ற சந்திப்பின் போது இந்த எதிர்ப்பு வெளியிடப்பட்டுள்ளது.

அரசியல் தலையீடுகளினால் மருத்துவ தொழிலை மேற்கொள்வதில் சிக்கல் நிலைமை ஏற்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

மருத்துவர்களுக்கு இழைக்கப்படும் அநீதிகள் குறித்து ஜனாதிபதி கவனம் செலுத்த வேண்டுமெனவும் வலியுறுத்தப்பட்டுள்ளது. (4-2)




# கம்பர் மலையில் கைக்குண்டு மீட்பு

(கரவெட்டி)

வடமராட்சி கம்பர்மலை பாரதி சனசமூக நிலையத்திற்கு அருகில் உள்ள வீட்டுத்தோட்டம் ஒன்றிலிருந்து நேற்று முன்தினம் கைக்குண்டொன்று மீட்கப்பட்டுள்ளது.

வீட்டுத் தோட்டத்தில் கைக்குண்டு இருப்பதைக்கண்ட வீட்டு உரிமையாளர் பொலிஸாருக்கு தகவலைக் கொடுத்ததையடுத்து சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார் பாதுகாப்பாக கைக்குண்டை மீட்டு பொலிஸ் நிலையத்திற்கு கொண்டு சென்று பின் யாழ்ப்பாண விசேட அதிரடிப் பொலிஸாரிடம் கைக்குண்டை பாரப்படுத்தியுள்ளனர். (எ-9-24)

# கௌரிவிரதம்

(யாழ்ப்பாணம்)

சுட்டிவேரம் கண்ணகை அம்பாள் தேவஸ்தான கேதார கௌரி விரத்ம் நேற்று வியாழக்கிழமை காலை 9 மணிக்கு விரதகாரர் சங்கற்பத்துடன் ஆரம்பமாகி கேதாரேஸ்வரரிற்கும் அம்பாளிற்கும் விசேட பூசைகள் மற்றும் இலட்சார்ச்சனையும் இடம்பெறும்.

இதில் தினமும் காலை 9 மணிக்கு விரத வழிபாடுகள் ஆரம்பமாகி நடைபெறும்

(4-12)

# தேர்தல் காலங்களில் அரசு சொத்துக்கள் பயன்படுத்தப்படுவதில்லை- ஹெகலிய



(கொழும்பு)

18 ஆம் திருத்தச் சட்டத்தின் மூலம் தேர்தல் ஆணையாளரின் அதிகாரங்கள் வரையறுக்கப்படவில்லை என ஹெகலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

அரசு சொத்துக்கள் துஷ்பிரயோகம் செய்யப்படுவதாக சுமத்தப்படும் குற்றச்சாட்டுக்களில் உண்மையில்லை என ஊடக அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

தேர்தல் பிரசார நடவடிக்கைகளுக்காக அரசு ஊடகங்கள் பயன்படுத்தப்பட்டதாக சுமத்தப்படும் குற்றச்சாட்டுக்கள் உண்மைக்குப் புறம்பானவை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

18 ஆம் திருத்தச் சட்டத்தின் மூலம் தேர்தல் ஆணையாளரின் அதிகாரங்கள் வரையறுக்கப்படவில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அரசாங்க ஊடகங்களைப் போன்றே தனியார் ஊடகங்களுக்கு எதிராகவும் நடவடிக்கை எடுப்பதற்கு சட்டத்தில் சந்தர்ப்பம் காணப்படுவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

தனியார் ஊடகங்கள் ஒரு பக்கச் சார்பாக செயற்பட்டு வருவதாகவும் இதனை மக்கள் நன்கு அறிந்து கொண்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அரசு ஊடகம் காத்திரமான சேவையாற்றி வருவதாகவும் நாட்டின் அபிவிருத்திப் பணிகள் குறித்து மக்களுக்கு அறிவித்து வருவதாகவும் குறிப்பிட்டுள்ளார். (4-2)

# இலங்கையில் பொருளாதார நெருக்கடி ஏற்படும் நிலை-ஐ.தே.க.தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையில் பாரிய பொருளாதார நெருக்கடி நிலைமை ஏற்படக் கூடிய அபாயம் காணப்படுவதாக ஐக்கிய தேசியக் கட்சியின் இணைப் பிரதித் தலைவர் கரு ஜயசூரிய தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டபோது அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். கிறிஸ், அயர்லாந்து மற்றும் ஏனைய மேற்குலக நாடுகளில் நிலவும் பொருளாதார நெருக்கடி நிலைமையைப் போன்றதொரு நெருக்கடி இலங்கையிலும் ஏற்படலாம் என தெரிவித்துள்ளார்.

பொருளாதாரம் சரியான முறையில் நிர்வாகம் செய்யப்படாவிட்டால் மோசமான விளைவுகளை எதிர்நோக்க நேரிடும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டில் அவ்வாறான ஓர் நிலைமை ஏற்பட வேண்டும் என தமது கட்சி விரும்பவில்லை என்ற போதிலும் நிர்வாக முறைகேடுகளினால் இவ்வாறான பாதிப்புக்கள் ஏற்படக்கூடுமென அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

புதிய விமானங்களை நிர்மாணம் செய்வதாக விடுவிக்கப்பட்டுள்ள அறிவிப்பு வெறும் தேர்தல் வாக்குறுதிகளே என அவர் குறிப்பிட்டுள்ளார்.

மக்களின் அதிருப்தியே சட்டம் ஒழுங்கு சீர்குலைவதற்கு ஏதுவாக அமைக்கின்றது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். மொரட்டுவை மற்றும் தொம்பே பிரதேசங்களில் இடம்பெற்ற சம்பவங்கள் இதனையே வெளிப்படுத்துகின்றன என அவர் குறிப்பிட்டுள்ளார்.

சுயாதீனமானதும் நீதியுமானதுமான தேர்தல் நடைபெறும் என்பது வெறும் கனவாக மாற்றமடைந்துள்ளது என அவர் தெரிவித்துள்ளார்.



தேர்தல் காலத்தில் அரச சொத்துக்கள் பயன்பாடு தொடர்பில் தேர்தல் ஆணையாளரின் வழிகாட்டல்கள் மீறப்பட்டுள்ளதாகக் குற்றம் சுமத்தியுள்ளார்.

அரச சொத்துக்கள் மிகவும் மோனமான முறையில் துஷ்பிரயோகம் செய்யப்படுவதாகக் குறிப்பிட்டுள்ளார். (4-2)

# டெங்குநோய் தாக்கம் குறித்து துண்டுப்பிரசுர விநியோகம்

(கொழும்பு)

டெங்கு நோய்த் தாக்கம் அதிகரிப்பதற்கான வாய்ப்புக்கள் காணப்படுவதையடுத்து சுகாதார அமைச்சும் பாதுகாப்பு அமைச்சும் இணைந்து துண்டுப் பிரசுரங்களை வவுனியாவில் விநியோகித்தது.

அத்துண்டு பிரசுரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

உங்கள் சுற்றுச்சூழலில் நுளம்புகள் பெருகுவதற்கான மற்றும் டெங்கு நோய் பரவக் கூடிய நும்புகள் உருவாகுவதற்கான சாத்தியக்கூறுகள் உள்ளனவாவென பரீட்சித்து பார்ப்பதற்காக எதிர்வரும் தினங்களில் சுகாதார அதிகாரிகள் மற்றும் பொலிஸ் உத்தியோகத்தர்கள் அடங்கிய குழுவொன்று விஜயம் செய்யவுள்ளது.

இதன்போது சுற்றுச்சூழலில் டெங்கு நோய் பரவக் கூடிய இடங்கள் அடையாளம் காணப்படின் இலங்கை சட்டப்பிரிவு 262 ஆம் பிரிவின் பிரகாரம் காவிகள் பரவுவதற்கு ஏதுவான ஓர் காரணியை சட்டவிரோதமாக அல்லது பொறுப்பற்ற விதத்தில் செயற்படுத்திய குற்றச்சாட்டில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நீதிவான் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்வதற்கான வாய்ப்புள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(4-2)

# 800 பேருக்கு மரண தண்டனை நிறைவேற்ற அலுகோசு தேவை

## சிறைச்சாலைகள் அமைச்சின் செயலாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையில் குறைந்தபட்சம் 800 குற்றவாளிகள் மரண தண்டனை நிறைவேற்றப்படுவதை எதிர்நோக்கியுள்ள நிலையில் தூக்கத் தண்டனையை நிறைவேற்றும் அலுகோசு பதவிக்கு ஆட்களை சேர்க்க அரசாங்கம் விரும்புவதாக புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சின் செயலாளர் ஏ.திஸாநாயக்க ரோய்ட்டர்ஸ் செய்திச் சேவைக்கு தெரிவித்துள்ளார்.

கடந்த 1976 ஆம் ஆண்டு முதல் இலங்கையில் மரண தண்டனைகள் விதிக்கப்படாத நிலையில் 2004 ஆம் ஆண்டு முதல் பாலியல் வல்லுறவு, போதைப் பொருள் கடத்தல், கொலைக் குற்றங்களுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது.

இந் நிலையில் அலுகோசு பதவியிலிருந்து இருவரும் பதவி உயர்வு பெற்றுள்ளதால் அலுகோசு பதவி வெற்றிடமாகவுள்ளதாகவும் அவர் கூறினார்.

இப் பதவியை வெற்றிடமாக வைத்திருக்க முடியாதென்பதால் அடுத்த வாரம் இப் பதவிக்கு விண்ணப்பங்களை கோரவுள்ளோம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

கொலைகள் மற்றும் போதைப் பொருள் தொடர்பான குற்றங்களுக்காக குறைந்த பட்சம் 800 பேர் மரண தண்டனை நிறைவேற்றப்படுவதை எதிர்நோக்கியுள்ளதாகவும் ஆனால் மரணதண்டனை நிறைவேற்றப்படுவதற்கு ஜனாதிபதி கையெழுத்திட வேண்டும் எனவும் திஸாநாயக்க கூறினார். (4-2)




★ 1737-இந்தியா, வங்காளத்தில் கிளம்பிய 40 அடி உயர அலை சுமார் 3 இலட்சம் பேரைக் கொன்றது.

★ 1769-ஆங்கிலேய நாடுகாண் பயணி கப்டன் ஜேம்ஸ் குக் நியூசிலாந்தைக் கண்டுபிடித்தான்.

★ 1806-ஆங்கிலேயர் ரால்ஃப் வெட்ஜ்வூட் என்பவரால் காபன் தாள் காப்புரிமம் பெறப்பட்டது.

★ 1874-யாழ்ப்பாணத்துக்கான தந்தி இணைப்பு அநுராதபுரம் வரையில் நீடிக்கப்பட்டது.

★ 1919-நெதர்லாந்தின் கே.எல்.எம். விமானசேவை ஆரம்பிக்கப்பட்டது.

★ 1942-அமெரிக்கா மற்றும் பிரித்தானியா ஐக்கிய நாடுகள் அவையை ஆரம்பிக்கப் போவதாக அறிவித்தன.

★ 1949-ஜேர்மன் ஜனநாயகக் குடியரசு உருவாக்கப்பட்டது.

★ 1950-சீனா, திபெத்து மீதான தாக்குதலை ஆரம்பித்தது.

★ 1951-இஸ்ரேலிய அரசு டேவிட் பென்-கூரியன் என்பவரால் அமைக்கப்பட்டது.

★ 1958-பாகிஸ்தான் ஜனாதிபதி இஸ்காண்டர் மிர்சா ஜெனரல் அயூப் கான் ஆதரவுடன் 1956 அரசமைப்பை நிராகரித்து இராணுவ ஆட்சியைக் கொண்டு வந்தார்.

★ 1959-சோவியத் விண்கலம் லூனா 3 சந்திரனின் அதி தூரத்தியப் புகைப்படங்களை பூமிக்கு அனுப்பியது.

★ 1962-சோவியத் ஒன்றியம் நோவயா, சிம்லியா என்ற இடத்தில் அணுக்கரு சோதனையை நிகழ்த்தியது.

★ 2001-ஆப்கானிஸ்தான் மீது அமெரிக்கா மூன்று முறை விமானத் தாக்குதல் நடத்தியது. வலிமையான கொன்கிறீட் கட்டடங்களையும் ஊடுருவி தாக்கும் டொமஹாக் ரக ஏவுகணைகளை ஏவியது.

★ 2004-கம்போடியாவின் நொரொடொம் சிஹானூக் மன்னர் பதவியில் இருந்து விலகினார்.

### பிறப்புக்கள்

★ 1931-டெஸ்மண்ட் டுட்டு, தென்னாபிரிக்க ஆயர் நோபல் பரிசு பெற்றவர்

★ 1978-சகீர் கான், இந்திய வேகப்பந்து வீச்சாளர்

★ 1979-நரேன், தென்னிந்தியத் திரைப்பட நடிகர்

### இறப்புக்கள்


★ 1967-நோர்மன் ஏஞ்செல், நோபல் பரிசு பெற்றவர் (பி.1872)

★ 1974-சி.மு. இராசமாணிக்கம், முன்னாள் இலங்கைத் தமிழரசுக் கட்சி பட்டிருப்பு பாராளுமன்ற உறுப்பினர்

★ 1984-அப்துல் காதர் லெப்பை, ஈழத்துக் கவிஞர் (பி.1913)

★ 1994-நீல்ஸ் காஜ் ஜேர்ன், நோபல் பரிசு பெற்றவர் (பி. 1911)

# நவீன எண் சோதிடம்



## பிறர்கூற்றுக்கு செவிசாய்க்காது தன் மனதில் உதிப்பதற்கேற்ப நடப்பர் 65

### உடல் எண் 7 உயிர் எண் ௯

7,16,25 போன்ற தேதியில் பிறந்து, பிறந்த தேதி, மாதம், வருடம் இம் மூன்றையும் கூட்டி வருகின்ற கூட்டு எண்ணாகிய உயிர் எண் 9 வருமேயானால் இவர்கள் கேது, செவ்வாய் ஆதிக்கத்தில் பிறந்தவராவர். இவர்கள் பார்ப்பதற்கு ஓரளவு உயரமாகவும் சிலர் குறைந்த உயரத்துடனும் இருப்பர். சோகமும், மகிழ்ச்சியும் இவர்களின் வாழ்க்கையில் கலந்து வருவதால் முகம் பொழிவிழந்து, பின் தெளிவடைந்தது போலக் காணப்படும். இவர்களுக்குப் பெயர் நன்றாக அமையாவிட்டாலும், பொருத்தமான எண்ணில் பிறந்த வாழ்க்கைத் துணைவர் அமையாவிட்டாலும், குடும்ப வாழ்க்கை ஒரு குழப்பமான வாழ்க்கையாக இருக்கும்.

மனநிலை சரியில்லாது தனிமையில் வேதனைப்பட்டு தானாகவே பேசிக்கொண்டிருக்கும் நிலை ஏற்படுகின்றது. ஆண்களாக இருந்தால் பெண்களாலும், பெண்களாக இருந்தால் ஆண்களாலும் குழப்பங்கள் ஏற்படுகின்றன. சிலருக்குத் திருமணம் தாமதம் ஆகிக்கொண்டு போவதாலும் இன்னும் சிலருக்கு விவாகரத்து ஏற்படுவதாலும் வேதனைப்பட வேண்டிய நிலை ஏற்படுகிறது. இதனால் பெயரை நல்ல எண்ணில் மாற்றியமைத்துக்

| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
|---|---|---|---|---|---|---|---|
| A | B | C | D | E | U | O | F |
| I | K | G | M | H | V | Z | P |
| J | R | L | T | N | W | | |
| Q | | S | | X | | | |
| Y | | | | | | | |

கொண்டாலோ, அல்லது இயற்கையில் பெயர் நல்ல எண்ணில் அமைத்து விட்டாலோ, நல்ல வாழ்க்கைத் துணைவர், நல்ல குழந்தைகள், நல்ல செல்வம் பெற்று வீடு, வாகனம் பெற்று சிறப்பாக வாழலாம். இவர்களுக்குத் திடமான மனநிலை இருந்தபோதிலும் சில நேரங்களில் கோழையாகி விடுகின்றனர்.

அது மட்டுமல்லாமல், தேவையற்ற காரியங்களில் தலையிட்டு சிக்கலை உருவாக்கிக் கொள்கின்றனர். இந்த எண்ணிக்கையில் பிறந்த சிலர் காதல் வயப்பட்டு சிக்கலை உருவாக்கி வாழ்க்கையை வெறுத்து தற்கொலை முயற்சியில் ஈடுபடுகின்றனர். ஆனால் பிறந்த தேதிக்கு பொருத்தமான எண்ணில் பெயர் அமைந்தவர்கள் உத்தியோகத்தாலும் தொழிலாலும் உயர்ந்த நிலையை அடைந்து நல்ல வாழ்க்கையை நடத்துகின்றனர். சிந்தனாசக்தி படைத்த இவர்களுக்குத் தெய்வீக அருள் உண்டு என்ற போதிலும் கெட்ட செயல்களுக்கு ஒரு பக்கம் இழுத்துச் செல்லத் தயாராக இருக்கும்.

பொதுவாக இவர்களில் பலர் வேலைபார்ப்பவர்களாகவும், சிலர் தொழில் செய்பவர்களாகவும் இருக்கின்றனர். ஆனால் மனநிலை சரியில்லாததாகிவிட்டால் தொழில் செய்பவர்கள் தொழிலைக் கவனிக்கமாட்டார்கள். உத்தியோகம் செய்பவர்கள் திடீரென்று வேலைக்குப் போவதை நிறுத்திக்கொள்வர். இப்படிக் குழப்பவாதியாக வாழும் இவர்களுக்குப் பெயர் நன்றாக அமையுமேயானால் படிப்படியாக உயர்ந்து முன்னேற்றம் பெற்று சிறப்பான வாழ்க்கையை அடைந்து பலர் போற்றும் நல்ல மனிதராக வாழ்கின்றனர்.

ஜோதிடம், சட்டம், சமயம், மருத்துவம் போன்றவற்றில் ஆராய்ச்சியிருக்கும். பிடிவாத குணம் படைத்த இவர்கள் மற்றவர்கள் கூறுவதை உடனே எடுத்துக் கொள்ளாது தன் மனதில் உதிக்கின்றபடியே நடப்பர். சிலருக்கு நல்ல மனைவி அமைந்துவிட்டால், பணம் சம்பாதிப்பது கஷ்டமாகி விடுகிறது. சிலருக்கு எல்லாம் இருந்தும் ஆரோக்கியம் கெட்டு விடுகின்றது. இன்னும் சிலருக்கு எல்லா வசதிகளும் இருந்தும் வாழ்க்கைத் துணைவராலோ அல்லது குழந்தைகளாலோ பிரச்சனை வந்து விடுகின்றது.

எண் கணித நிபுணர்
கலாநிதி ஆர்.ஐ.துரைமுருகர் D.LIT

இப்படிப்பட்ட சூழ்நிலையில் தவிக்கும் இவர்களுக்குப் பெயர் பொருத்தமான நல்ல எண்ணில் அமைந்து விட்டால் கெட்ட பலன் குறைந்து நல்லவைகள் இவர்களை நாடிவந்து உயர்வடையச் செய்யும்.

**தொழில்**

இந்த எண்ணிக்கைக் காரர்களுக்கு எழுத்து, வழக்குத் தீர்த்தல், மருத்துவம், கமிஷன், மருந்து, ஏஜென்சீஸ், ஒப்பந்த வேலைகள், இரும்பு சம்பந்தமான அனைத்துத் தொழிலும் சிறந்தவையே.

**நோய்**

மனநோய், இருதய வலி, முதுகுவலி, மூட்டுவலி, வயிற்றுக் கோளாறுகள், வாயுக்கோளாறுகள் மலச்சிக்கல், இரத்த அழுத்தம், போன்றவைகள் வர வாய்ப்பு இருப்பதால் நோய் உள்ளவர்கள் 42 எண்ணில் பெயரை அமைத்துக் கொண்டு நோயிலிருந்து விடுபடலாம்.

**பெயர் அமைக்கும் முறை**

இந்த எண்ணிக்கையில் பிறந்தவர்களுக்கு சுக்கிர ஆதிக்கமான 15,24,33,42,51,60,69 போன்ற எண்களிலும் புதன் ஆதிக்கமான 14,23,32,41,50,59,77 போன்ற எண்களிலும் பெயரை அமைத்துக் கொண்டு சிறப்படையலாம்.

**பின்பற்ற வேண்டியவை**

யோகமான எண்-6,5

யோகமான தேதிகள்-6,15,24, 5,14,23

யோகமான மோதிரக்கல்-வைடூரியம், டைகர்ஸ்ஐ, மூன்ஸ்டோன்

யோகமான நிறம்-வெளிர் நீலம், வெளிர் மஞ்சல்,

ஆகாத தேதிகள்-இல்லை

ஆகாத நிறம்-இல்லை


### பெயர் எண்களின் பலன்

**99 எண் பலன்**

9 என்கிற செவ்வாயும், செவ்வாயும் சேர்ந்து 99 வருவதால், மிகுந்த உடல் வலிமையுடையவராகவும், சண்டைக்காரராகவும் விளங்குவர். சிறிய காரியங்களுக்குக்கூட உடனே பழிவாங்க வேண்டும் என்ற எண்ணம் உண்டாகும். இவர்களுடைய கல்வி, பொருளெல்லாம் கெட்ட வழிக்காகவே செலவு செய்யப்படும். எப்பொழுதும் எதிர்ப்புக்களை சம்பாதிக்கும் இந்த எண்காரர்கள் 5,14,23 போன்ற தேதிகளில் பிறந்திருந்தால் மட்டும் ஓரளவு திருப்திகரமான வாழ்க்கையை அடைவர் இதனால் இந்த எண் மற்றவர்களுக்கு விரும்பத்தக்கதல்ல.

**100 எண் பலன்**

இந்த எண்ணைப் பெயராகக் கொண்டால் முன்னேற்றம் படிப்படியாகவே காணப்படும். இவர்களுக்குப் பொறுமை இயற்கையாகவே அமைந்துவிடும். பெரும்



யோகக்காரராக இல்லாவிட்டாலும், சிறிய அளவில் வசதிகளைப் பெற்று திருப்திகரமாக வாழ்வர். பெரும் திட்டங்களில் இறங்கினாலும் தோல்விதான் கிடைக்கும். இதனால் சிறிய சிறிய தொழில்களிலும் பல்வேறு முயற்சிகளிலும் பணம் அதிகம் சேர்க்கும் பாக்கியம் உண்டு. பல்வேறு அனுபவங்கள் இல்லாது ஒரு கட்டத்திற்குள்ளே வாழ்க்கை அமையும்.

**101 எண்பலன்**

இந்த எண்ணைப் பெயராகக் கொண்டவர்களுக்கு முதல் இல்லாத வருமானம் அதிகம் இருக்கும். அத்தோடு பல அரசாள்பவரது தொடர்பால் உதவியும் கிடைக்கும். கமிஷன், ஏஜென்சி போன்றவற்றால் இலாபம் கிடைக்கும். இந்த எண் திடீரென்று ஒருநாள் எல்லா வருமானத்தையும் நிறுத்திவிடும். அதோடு புத்தியையும் கெடுத்துவிடும். இதனால் இந்த எண் 7,16,25 தேதியில் பிறந்தவர்களைத் தவிர மற்றவர்களுக்கு நன்மையளிக்காது.

**102 எண்பலன்**

இந்த எண்ணைப் பெயராகக் கொண்டால் தொடர்ந்து வெற்றி கிட்டாது. தான் பலநாள் உழைத்துச் சேர்த்த பொருளை ஒருநாள் இழக்கும் சந்தர்ப்பம் வரும். தேவையற்ற காரியங்களில் தலையிட்டு மனதைக் குழப்பிக் கொண்டு வாழ்நாட்கள் முழுவதும் குழப்பவாதியாக வாழும் இவர்கள் 3,12,21 போன்ற திகதிகளில் பிறந்திருந்தால் மட்டும் சில நன்மைகளை அடைவர்.

**103 எண்பலன்**

இந்த எண்ணைப் பெயரில் உடையவர்களின் பெற்றோர்கள் ஏற்கனவே வசதி படைத்தவர்கள். பாரம்பரியமான தொழிலை மாற்றி புதுமையான தொழில் செய்ய முற்படுவர். பல்வேறு கஷ்டங்களுக்கு இடையில் நிரந்தரமான தொழிலையும் நிரந்தரமான வருமானத்தையும் அமைத்துக் கொள்ளுவர். இதனால் இந்த எண் விரும்பத்தக்கதே. 1,10,19,28 போன்ற தேதியில் பிறந்தவர்கள் இந்த எண்ணைப் பெயராகவோ, வியாபார விலாசமாகவோ வைத்துக் கொண்டால் முன்னேற்றம் பெறலாம்.

(தொடரும்)

# ஐரோ.ஒன்றிய நாடாளுமன்றில் சனல் 4 ஆவணப்படம் திரையிட நடவடிக்கை

## சர்வதேச மனிதநேய அமைப்புக்கள் மும்முரம்

(கொழும்பு)

சனல் 4 தொலைக்காட்சியினால் தயாரிக்கப்பட்ட இலங்கையின் கொலைக்களம் ஆவணப்படத்தை ஐரோப்பிய ஒன்றிய நாடாளுமன்றில் திரையிடுவதற்கான முயற்சியில் மூன்று சர்வதேச மனிதநேய அமைப்புகளினால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

சர்வதேச பொதுமன்னிப்புச் சபை, சர்வதேச நெருக்கடிக்கான குழு, மனித உரிமை கண்காணிப்பகம் ஆகியன ஒன்றிணைந்து ஐரோப்பிய நாடாளுமன்றில் திரையிடுவதற்கான முழுமையான நடவடிக்கையில் ஈடுபட்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

இலங்கையின் மனித உரிமை மீறல்கள் மற்றும் போர்க்குற்றத்திற்கு எதிரான சர்வதேச விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் எனத் தெரிவித்து சர்வதேச நாடுகள் ஓரணியில் நின்று செயற்பட்டு வருகின்றனர்.

இந் நிலையில் அவுஸ்திரேலியா உட்பட ஐரோப்பிய நாடுகளில் நாடுகளிடையே சனல் 4 தொலைக்காட்சி நிறுவனத்தினால் தயாரிக்கப்பட்ட ஆவணப்படம் திரையிடப்பட்டு வருகிற வேளையில் ஐரோப்பிய நாடாளுமன்றில் திரையிடப்படுவது இலங்கை அரசுக்கு பாரிய அழுத்தத்தை ஏற்படுத்தும் என அவதானிகள் கருத்துத் தெரிவிக்கின்றனர்.

மனிதாபிமான நடவடிக்கையின்போது பொதுமக்கள் இழப்பு பூச்சியம் என இலங்கையினால் தெரிவிக்கப்படும் கருத்துக்கு நேர் எதிர் மறையாக இலங்கையின் கொலைக்களம் ஆவணப்படம் ஆதாரமாக உள்ளது.

பிரித்தானியா மற்றும் கனடா போன்ற நாடுகளில் நாடாளுமன்றத்தில் ஒளிபரப்பாகிய ஆவணப்படத்தினால் இலங்கை பிரதிநிதிகள் கடந்த மாதம் இடம்பெற்ற 66 ஆவது மனித உரிமை பேரவையில் பெரும் தடுமாற்றத்தை எதிர்நோக்கியதாக தெரிவிக்கப்படுகிறது.

(4-2)

# கைதடி முதியோர் இல்லத்தின் முதியோர் வார ஏழாம் நாள் நிகழ்வுகள்

(யாழ்ப்பாணம்)

கைதடி முதியோர் இல்லத்தில் நடைபெற்று வரும் முதியோர் வார நிகழ்வுகளில் இன்று ஏழாம் நாள் நிகழ்வு காலை 8.30 மணிக்கு உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் திருமதி ரமேஸ் விஜயலட்சுமி தலைமையில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ. சந்திரசிறி, சிறப்பு விருந்தினர்களாக வடக்கு மாகாண பிரதம செயலாளர் ஆறுமுகசாமி சிவசுவாமி ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

அத்தோடு உள்ளூராட்சி அமைச்சின் அனுசரணையுடன் முதியோர்களுக்கான மருத்துவ முகாம் நடைபெறும். அத்துடன் உள்ளூராட்சி அமைச்சு அலுவலர்கள் முதியோருடன் கலந்துரையாடல் மற்றும் கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன.

(4-12)

# தேசிய சுகாதார வாரத்தை முன்னிட்டு சுகநலத்திட்டங்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பிரதேச செயலர் பிரிவும் நல்லூர் பிரதேச செயலர் பிரிவினருடன் இணைந்து தேசிய சுகாதார வாரத்தினை முன்னிட்டு பல்வேறு திணைக்களங்கள், நிறுவனங்கள், பொது அமைப்புக்களின் ஒத்துழைப்புடன் பல்வேறு சுகநல மேம்பாட்டு திட்டங்கள் யாழ்.மாநகர சபையின் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிற்குட்பட்ட பகுதிகளில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

இதில் இன்று முதியவர்களுக்கான சுகநல விழிப்புணர்வு சபை எல்லைக்குட்பட்ட சகல பகுதிகளிலும் மேற்கொள்ளல், அத்துடன் அவர்களுக்கான இலவச மருத்துவ பரிசோதனை மேற்கொள்ளல், முதியோர் இல்லத்தில் முதியோர்களுக்கான விளையாட்டுப் போட்டி நடத்துதல் போன்ற செயற்பாடுகள் இடம்பெறவுள்ளது.

நாளை சனிக்கிழமை மாநகர சபை எல்லைக்குட்பட்ட வணக்க ஸ்தலங்கள் யாவற்றிலும் இந்து ஆலயங்கள், கிறிஸ்தவ தேவாலயங்கள், முஸ்லிம் பள்ளி வாசல்களில் பரிபாலன சபையினரின் உதவியுடனும் தொண்டர்களின் உதவியுடனும் துப்பரவு செய்தல் போன்ற செயற்பாடுகளும் நடைபெறவுள்ளன.

(4-12)

# வர்த்தகரிடம் கப்பம் கோரியோர் யாழில் கைது

(கொழும்பு)

வெள்ளவத்தை வர்த்தகர் ஒருவரிடம் கப்பம் கோரிய இரண்டு பேர் யாழ்ப்பாணத்தில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தமிழ் வர்த்தகர் ஒருவரிடம் 25 இலட்சம் ரூபா கப்பம் கோரப்பட்டதாகவும் கப்பம் கோரிய இருவரும் தமிழர்கள் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

கொழும்பு குற்றப் புலனாய்வு விசாரணைப் பிரிவினர் குறித்த சந்தேக நபர்களை கைது செய்துள்ளனர்.

பிள்ளைகளைக் கடத்திச் சென்று கொலை செய்து விடுவதாக மிரட்டல் விடுத்து கப்பம் கோரப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த குறித்த இருவரும் வவுனியா, யாழ்ப்பாணம் மற்றும் கொழும்பு போன்ற பிரதேசங்களில் உள்ள தொலைபேசிகளின் ஊடாக மிரட்டல் விடுத்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட இருவரும் முன்னர் ஒரு சந்தர்ப்பத்தில் ஐந்து இலட்சம் ரூபா கப்பம் பெற்றுக் கொண்டுள்ளனர்.

தனது மைத்துனர் ஒருவரிடம் சந்தேக நபர்களில் ஒருவர் இவ்வாறு கப்பம் பெற்றுக் கொண்டுள்ளார்.

சந்தேக நபர்கள் நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டுள்ளதாகவும் விசாரணைகள் நடத்தப்பட்டு வருவதாகவும் குறிப்பிடப்படுகிறது.

(4-2)

# பதவி உயர்வு வழங்கப்படாத பொலிஸ் அதிகாரிகள் ஓய்வு பெறுவதற்கு முடிவு

(கொழும்பு)

உரிய முறையில் பதவி உயர்வு வழங்கப்படாத சிரேஷ்ட பொலிஸ் ஓய்வு பெற்றுக் கொள்ளத் தீர்மானித்துள்ளனர். குற்ற விசாரணை உள்ளிட்ட பொலிஸ் சேவையின் சகல விடயங்களிலும் 20 க்கும் மேற்பட்ட ஆண்டுகள் பரந்த அனுபவமுடைய உயர் பொலிஸ் உத்தியோகத்தர்களே இவ்வாறு அதிருப்தி வெளியிட்டுள்ளனர்.

ஓய்வு பெற்றுக் கொள்வது குறித்து பாதிக்கப்பட்ட பொலிஸ் அதிகாரிகள்,பொலிஸ் மா அதிபர் என்.கே.இலங்கக்கோனிடம் அறிவித்துள்ளனர்.

அனுபவமுடைய பிரதான பொலிஸ் பரிசோதகர்கள் மற்றும் பொலிஸ் பரிசோதகர்களே இவ்வாறு அதிருப்தி வெளியிட்டுள்ளனர்.

நீச்சல், கலாசாரம் போன்ற துறைகளில் பட்டம் பெற்றுக் கொண்ட புதியவர்களுக்கு பொலிஸ் அத்தியட்சகர் பதவி வழங்கப்படும் அதேவேளை, நீண்ட அனுபவமுடைய தமக்கு எவ்வித பதவி உயர்வும் வழங்கப்படுவதில்லை என தெரிவித்துள்ளனர்.

குறித்த பட்டதாரி அதிகாரிகளுக்கு வழக்கு விசாரணைகளில் பங்கேற்கவோ அல்லது குற்ற விசாரணைகளை நடத்தவோ தெரியாது என பாதிக்கப்பட்ட அதிகாரிகள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

பொலிஸ் பரிசோதகர்களாக பத்து ஆண்டுகளுக்கு மேல் கடமையாற்றியவர்களுக்கு இதுவரையில் பதவி உயர்வு வழங்கப்படவில்லை என விசனம் வெளியிடப்பட்டுள்ளது.

(4-2)

# செழுமையான வளங்களைக் கொண்ட இலங்கை சுயாதீனமாகச் செயற்படும்

## அமைச்சர் லக்ஸ்மன் தெரிவிப்பு



(கொழும்பு)

சர்வதேச சமூகத்தினால் பிரயோகிக்கப்படும் சகல அழுத்தங்களுக்கும் அடி பணிய வேண்டிய அவசியமில்லை என பிரதிப் பொருளாதார அமைச்சர் லக்ஸ்மன் யாப்பா அபேவர்த்தன தெரிவித்துள்ளார்.

சர்வதேச அழுத்தங்களை எதிர்நோக்கி முன்னோக்கி நகரக்கூடிய ஆளுமை ஜனாதிபதியிடம் காணப்படுகின்றது.

யுத்தம் இடம்பெற்ற காலத்தில் ஜனாதிபதி இதனை நன்கு வெளிப்படுத்தினார். செழுமையான வளங்களை கொண்ட இலங்கை சுயாதீனமாக செயற்படும்.

பிராந்தியத்தின் முக்கியமான நாடுகளான சீனா மற்றும் இந்தியாவுடன் நல்ல உறவு பேணப்படுகின்றது.

சர்வதேச அழுத்தங்களின்போது குறித்த நாடுகள் இலங்கைக்கு உதவிகளை வழங்கும் என எதிர்பார்ப்பதாகக் குறிப்பிட்டுள்ளார்.

ஐக்கிய தேசியக்கட்சி தொடர்பில் தமிழ், முஸ்லிம் மக்கள் மத்தியில் காணப்பட்ட நல்லெண்ணம் வீழ்ச்சியடைந்துள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சிக்குள் சிறுபான்மை மக்களுக்கு இடமில்லை. ஐக்கிய தேசியக் கட்சி கொள்கையின்றி செயற்பட்டு வருகின்றது என்றார்.

(4-2)

# அடையாள அட்டை கண்டெடுப்பு

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை கட்டைக்காடு, முள்ளியானைச் சேர்ந்த மோசஸ்தாசியஸ்-பவுஸ் தீனா (925501395V) என்பவருடைய தேசிய அடையாள அட்டையுடன் கூடிய பேர்ஸ் ஒன்று கண்டெடுக்கப்பட்டு வலம்புரி அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

எனவே உரியவர்கள் அலுவலக நேரத்தில் வந்து பெற்றுக்கொள்ளலாம்.(4-12)

# விற்பனை முகவராக அறிமுகமான நபர் பலமில்லியன் ரூபாவுடன் தலைமறைவு

(கொழும்பு)

நீர்கொழும்பு விமான விற்பனை முகவராகவும் வாகனங்களை விற்பனை மற்றும் வாடகைக்கு விடுவதிலும் ஈடுபட்ட வர்த்தகர் பல மில்லியன் ரூபா மோசடி செய்துவிட்டு தலைமறைவாகியுள்ளார்.

இவரிடம் சுமார் 35 பேர் வரை ஏமாந்துள்ளதாகத் தெரியவருகின்றது. இவர்கள் நீர்கொழும்பு, பேலியகொடை பொலிஸ் நிலையங்களில் முறைப்பாடு செய்துள்ளனர். சுமார் 150 மில்லியன் ரூபா முதல் 200 மில்லியன் ரூபா வரை மோசடி செய்துள்ளதாக அறியவருகின்றது.

விதானகங்கானகே பியங்கா கருணாரத்ன என்பவரே மோசடியில் ஈடுபட்டவராவார். இவர் தனது மனைவி, பிள்ளைகள் மற்றும் உறவினர்களுடன் இணைந்து குழுவாக இயங்கியே இந்த மோசடியில் ஈடுபட்டுள்ளனர். வாகனங்களை அதன் பெறுமதியிலும் பார்க்க 5.6 இலட்சம் ரூபா குறைவாக விற்பனை செய்துள்ளதுடன் ஒரே வாகனத்தைக் காண்பித்து பலரிடம் முற்பணம் பெற்றுள்ளதாகவும் தெரியவருகின்றது.

இவர் ஜப்பான் , அமெரிக்கா போன்ற நாடுகளுக்கு தொழிலுக்காக ஆட்களை அனுப்புவதாகக் கூறியும் மோசடி செய்துள்ளார். ஆரம்பத்தில் ஒரு சிலரை வெளிநாடுகளுக்கு அனுப்பியுள்ளதுடன் பெரும் காணிகளை வாங்கி தன்னை உறுதிப்படுத்திக் கொண்டு மக்களிடம் நம்பிக்கையை வளர்த்துள்ளார்.

காலப்போக்கில் இவரிடம் பலர் பணம் கொடுத்து ஏமாந்துள்ளனர். வைத்தியர்கள் , சட்டத்தரணிகள் , பிரபல வர்த்தகர்கள் என 35 பேர் வரை பல இலட்சம் ரூபாவை இவரிடம் கொடுத்துவிட்டு அங்கலாய்க்கின்றனர்.

கந்தானையை வசிப்பிடமாகக் கொண்ட இவர் நீர்கொழும்பு கந்தான பகுதியில் இரண்டு வாகனங்களை விட்டுவிட்டு காரியாலயத்தை மூடிவிட்டு தலைமறைவாகியுள்ளார். இவரைக் கண்டுபிடிப்பதற்காகப் பொலிஸார் விசாரணைகளை நடத்தி வருகின்றனர்.

நீர்கொழும்பில் இவ்வாறான கோடிக்கணக்கில் மோசடியில் ஒரு கும்பல் திட்டமிட்டு செயற்படுவதாகத் தெரியவருவதாகவும் குறைந்த விலைக்கு சொகுசு வாகனங்களை விலைக்கு வாங்கும் போது மக்கள் அவதானமாக இருக்குமாறும் பொலிஸார் கேட்டுள்ளனர்.

(4-2)

# யாழ். மாநகர சபை உறுப்பினரால் பொருட்கள் அன்பளிப்பு



(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகர சபையின் உறுப்பினர் கே.என். விந்தன் கனகரத்தின் அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட இவ்வருட நிதியிலிருந்து அரியாலை சனசமூக நிலைய முன்பள்ளிக்கு மூன்று மின் விசிறிகளும் பாண்டியன்தாழ்வு புனித அன்னம்மாள் தேவாலய முன்பள்ளிக்கு 25 கதிரைகளும் 5 வட்ட மேசைகளும் ஒரு மின்விசிறியும் வழங்கப்பட்டன.

இந்தப் பொருட்கள் கையளிக்கும் நிகழ்வு நேற்று யாழ். மாநகர சபையில் முதல்வரின் மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

யாழ். மாநகர சபை முதல்வர் திருமதி. யோகேஸ்வரி பற்குணராசா, யாழ். மாநகரசபை ஆணையாளர் மு.செ. சரவணபவ, உறுப்பினர் விந்தன் கனகரத்தின் ஆகியோர் கலந்து கொண்டனர். (4-6)

# இந்திய தேர்தல் ஆணைக்குழு அதிகாரிகள் ஆறுபேர் வருகை

நாளை சனிக்கிழமை நடைபெறவிருக்கும் 23 உள்ளூராட்சி தேர்தல்களை அவதானிப்பதற்காக இந்திய தேர்தல் ஆணைக்குழுவின் ஆறு அதிகாரிகள் இலங்கை வந்துள்ளனர். தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரியவின் அழைப்பின் போரிலேயே இந்த அதிகாரிகள் வந்திருப்பதாக தேர்தல் திணைக்களம் தெரிவித்தது.

நாட்டின் தலைநகர் உட்பட பிரதான நகரங்களின் மாநகர சபைகளுக்கான தேர்தலாக இது காணப்படுவதால் இத்தேர்தலை முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்படுவதால் அரசியல் அவதானிகள் இத்தேர்தலை உன்னிப்பாக அவதானித்து வருகின்றனர்.

இந்திய தேர்தல் ஆணைக்குழுவின் அதிகாரிகள் இத்தேர்தலை அவதானிப்பதோடு தேர்தல் நடைபெறும் பிரதான நகரங்கள் பலவற்றுக்கும் நாளை சனிக்கிழமை விஜயம் செய்து வாக்களிப்பு நடைமுறைகளை அவதானிக்கவிருக்கின்றனர்.

இக்குழுவினருடன் தேர்தல் திணைக்கள அதிகாரிகளும் இணைந்து அவதானிப்புக்களை மேற்கொள்ளவிருப்பதாக தேர்தல் ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

இந்தியத் தேர்தல் அதிகாரிகள் குழு தவிர்ந்த வேறெந்த வெளிநாட்டு அவதானிப்பாளர்களுக்கும் அழைப்பு விடுக்கப்படவில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார். (4-2)

# கல்வித்துறை ஊழல்கள் குறித்து அநாமதேய முறைப்பாடுகள்

(கொழும்பு)

இலஞ்சம் பெறப்படுகின்றமை தொடர்பில் அநாமதேய முறைப்பாடுகள் பதிவாகின்றமையால் அது குறித்து விசாரணைகளை மேற்கொள்ள முடியாதுள்ளதாக இலஞ்சம் ஊழல் ஒழிப்பு ஆணைக்குழு தெரிவிக்கின் றது.

கல்வித்துறையில் இலஞ்சம் பெறப்படுகின்றமை தொடர்பிலேயே அதிகளவிலான முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாக ஆணைக்குழுவின் தலைவர் முன்னாள் நீதிபதி ஜகத் பாலபடபெந்தி கூறியுள்ளார்..

அவ்வாறு கிடைக்கப் பெற்றுள்ள அனைத்து முறைப்பாடுகளும் அநாமதேய முறைப்பாடுகள் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இலஞ்சம் பெறுவோர் தொடர்பான முறைப்பாடுகளைப் பதிவு செய்வோர் தமது பெயர் விபரங்கைள உறுதிப்படுத்தியதன் பின்னர் அந்த முறைப்பாடுகளை மேற்கொள்ள வேண்டும் என இலஞ்சம் ஊழல் ஒழிப்பு ஆணைக்குழு ஆலோசனை கூறியுள்ளது.

இவ்வாறு முறைப்பாடுகளை செய்வோரின் இரகசியத்தன்மை பாதுகாக்கப்படும் எனவும் ஆணைக்குழுவின் தலைவர் உறுதியளித்துள்ளார். (4-2)

# அநுராதபுரம் பொலிஸ் சோதனைச் சாவடி மீது தாக்குதல் நடத்தியவர்களுக்கு அபராதம்

(கொழும்பு)

அநுராதபுரம் வஹால்கட பொலிஸ் சோதனைச் சாவடி மீது தாக்குதல் நடத்திய நபர்களுக்கு 61 இலட்சம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

வஹால்கட சோதனைச் சாவடிக்குள் அத்துமீறி பிரவேசித்து கடுமையான தாக்குதல் நடத்தியதூக தாக்கல் செய்யப்பட்ட வழக்கு விசாரணைகளின் போது இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

பாதுகாப்புத் தரப்பைச் சேர்ந்த ஏழு பேர் உள்ளிட்ட 36 பேருக்கு எதிராக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இரண்டு இராணுவ வீரர்கள், சிவில் பாதுகாப்புப் படையைச் சேர்ந்த ஐந்து பேர் மற்றும் பிரதேசத்தைச் சேர்ந்தவர்களுக்கு இந்த அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

கடந்த 2004 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

தடுத்து வைக்கப்பட்டிருந்த கைதி ஒருவர் உயிரிழந்த சம்பவத்தினால் ஆத்திரமுற்ற மக்கள் சோதனைச் சாவடி மீது தாக்குதல் நடத்தியிருந்தனர்.

அபராதப் பணத்தை செலுத்தத் தவறுவோருக்கு மூன்று ஆண்டு கடூழிய சிறைத் தண்டனை விதிக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (4-2)

# துணுக்காய் கல்வி வலயத்தின் கோட்டமட்ட வாய்பாட்டு மனனப்போட்டி முடிபுகள்

(மல்லாவி)

துணுக்காய் கல்வி வலயத்திற்குட்பட்ட ஒட்டுசுட்டான் கோட்டம், துணுக்காய் கோட்டம், மாந்தை கிழக்கு கோட்டம் ஆகிய கோட்டங்களுக்குரிய பாடசாலை மாணவர்களுக்கிடையே நடத்தப்பட்ட வாய்பாட்டு மனனப் போட்டி முடிவுகள் துணுக்காய் வலயக் கல்விப் பணிப்பாளர் த.மேகநாதனால் அறிவிக்கப்பட்டுள்ளன.

இதில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவர்களின் விபரங்கள் வருமாறு,

**துணுக்காய் கோட்டம்**

தரம்-03

வி.லக்ஷிகன் (மு/அனிஞ்சியன் குளம் தமிழ் வித்தியாலயம்),

*இருவர் இரண்டாம் இடம்*

க. வினோதினி (மு/அம்பலப் பெருமான் குளம் அ.த.க.பாடசாலை), ஜெ.நிலாஜினி (மு/யோகபுரம் ம.வி)

தரம் 04

ர.பிறைநிலா (மு/அனிஞ்சியன் குளம் தமிழ் வித்தியாலயம்), கே.பவித்திரன் (மு/ஆரோக்கியபுரம் த.வி), கு. சுஜாத் (மு/அம்பலப் பெருமான் குளம் அ.த.க.பாடசாலை),

தரம் 05

க.கதீஷ் (மு/ யோகபுரம் ம.வி) பா. அஜீர்தன் (மு/மயில்வாகனம் தமிழ் வித்தியாலயம் மல்லாவி), அ. சண்முகப்பிரியா (மு/அனிஞ்சியன் குளம் தமிழ் வித்தியாலயம்),

**மாந்தை கிழக்குக் கோட்டம்**

தரம் 03

செ.புவிராஜ். (மு/பாண்டியன் குளம். ம.வி), ம.டிலக்ஷனா (மு/பூவரசன் குளம் அ.த.க. பாசாலை),

*இருவர் மூன்றாமிடம்*

ச.கிருஷாளினி (மு/அம்பாள்புரம் அ.த.க. பாடசாலை), இ. பிரவின்குமார் (மு/பாலிநகர் ம.வி)

தரம் 4

சி.கிரியந்தன் (மு/பாண்டியன்குளம் ம.வி.), கோ.வேணுசன் (மு/பூவரசங் குளம் அ.த.க. பாசாலை), நா. சதுர்ஷன் (மு/நட்டாங்கண்டல் அ.த.க.பாடசாலை)

தரம் -5

சி.மேனகா (மு/பாண்டியன்குளம் ம.வி.),

ர.கம்ஷிகா (மு/வன்னிவிளாங்குளம் அ.த.க.பாடசாலை),யோ.கனித்திரன் (மு/நட்டாங்கண்டல் அ.த.க.பாடசாலை)

**ஒட்டுசுட்டான் கோட்டம்**

தரம் 3

சா.கிஷாளினி (மு/முத்தையன்கட்டு இடது கரை அ.த.க.பாடசாலை), க.கஜீபன் (மு/பனிக்கன்குளம் அ.த.க.பாடசாலை), நா.தனராஜ் (மு/ஆறுமுகம் த.வி.ஒட்டுசுட்டான்)

தரம் 04

ஞா. கம்ஷனா (மு/கூளாமுறிப்பு அ.த.க. பாடசாலை),

*இருவர் இரண்டாம் இடம்*

சி.தனுசிகன் (மு/ தண்டுவான் அ.த.க. பாடசாலை), யூ.யுவிதா (மு/மாங்குளம் ம.வி)

தரம் 05

*இருவர் முதலாமிடம்*

இ.லக்ஷிகன் (மு/ஆறுமுகம் தமிழ் வித்தியாலயம்), உ.கவிசனா (மு/முத்தையன் கட்டு இடது கரை அ.த.க.பாடசாலை), ச.சரிதன் (மு/கருவேலன் கண்டல் அ.த.க. பாடசாலை). (4-12-15)

# சுமந்திரன்- எரிக்சொல்ஹெம் சந்திப்பு இலங்கையின் நடவடிக்கை குறித்து ஆராய்வு

(கொழும்பு)

அண்மையில் நோர்வேயில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன்- எரிக்சொல்ஹெம் அவர்களைச் சந்தித்து இலங்கையின் அண்மைக் கால நடவடிக்கைகள் குறித்து விரிவான சந்திப்பொன்றை நடத்தியதாகத் தெரிய வருகிறது.


இது குறித்து மேலும் தெரிய வருவதாவது, அண்மையில் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் நோர்வேக்கு விஜயம் செய்த போது எரிக்சொல்ஹெம் அவர்களைச் சந்தித்துக் கலந்துரையாடியதுடன் இனப்பிரச்சினை தொடர்பாக இலங்கை அரசாங்கம் மேற்கொள்ளும் நடவடிக்கைகள் குறித்து விரிவாக கலந்துரையாடியதாகவும் அரசாங்கம்- கூட்டமைப்பு பேச்சுவார்த்தையின் முன்னேற்றங்கள் மற்றும் அவற்றில் உள்ள தடைகள் தொடர்பாகவும் விரிவாக ஆராய்ந்ததாகவும் தெரிய வருகிறது.


இச்சந்திப்பின் போது இலங்கை அரசாங்கத்தின் தமிழர் தாயகப் பிரதேசங்களில் மேற்கொள்ளப்படும் குடியேற்றங்கள், அரசின் அத்துமீறல்கள் தொடர்பாக சுமந்திரன் எரிக்சொல்ஹெமிடம் தெரிவித்ததாக தெரிய வருகிறது. (4-2)





சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் வளர்ச்சிக்காக அதன் நிறுவுநர் தாமோதரம்பிள்ளையின் வழித்தோன்றல் சாரதா தாமோதரம்பிள்ளை மற்றும் ச.சிறிகுமார் தம்பதியரால் பேருந்து வழங்கும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் நிறுவுனரின் வழித்தோன்றலைச் சேர்ந்த ஒருவர் மங்கல விளக்கேற்றுவதையும் அருகில் தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிறேமகாந்தன் மற்றும் பாடசாலை மாணவர்கள் நிற்பதனையும் பாடசாலை அதிபர் அ.கைலாயபிள்ளையிடம் பேருந்திற்குரிய மாதிரி வடிவமைப்பிலான திறப்பை வழங்குவதையும் புடங்களில் காணலாம். *(படங்கள்:- சாவகச்சேரி செய்தியாளர்)*





பிரித்தானிய நூலகம் மற்றும் பிரித்தானிய கவுன்சில் என்பன இணைந்து நடாத்திய உலக திரட்டல்கள் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் இலங்கை வரலாற்றின் கவர்ச்சி மிகு உட்பார்வையை வழங்கக் கூடிய வகையில் நிலவுருவப் படங்கள், கையெழுத்துப் பிரதிகள்,புகைப்படங்கள், வரலாற்று விளக்கங்கள் என்பனவற்றை நேற்றுமுன்தினம் யாழ்.பொதுநூலக மண்டபத்தில் காட்சிப்படுத்தப்பட்டிருப்பதைப் படங்களில் காணலாம். (படங்கள்:-அலுவலகச் செய்தியாளர்)

## ஓய்வூதியப் பணிக்கொடை வழங்கல்

(யாழ்ப்பாணம்)

இலங்கைப் பாதுகாப்புச் சபையின் யாழ். மாவட்டக் காரியாலயத்தினால் சுயதொழில் ஓய்வூதியத் திட்டத்தில் இணைந்து ஓய்வூதியம் பெறுவதற்கு முன் மரணமடைந்த ஓய்வூதியத் திட்டப் பயனாளிகள் இருவரின் மரணப் பணிக்கொடை நேற்று முன்தினம் யாழ். மாவட்ட செயலகத்தில் வைத்து வழங்கப்பட்டது.

இதில் ஓய்வூதியத் திட்டப் பயனாளி ஆர். தர்மலிங்கம் அவர்களுக்கு 42 ஆயிரம் ரூபாவும் ஆர்.யசோதா என்பவரின் மரணப் பணிக் கொடை 37ஆயிரம் ரூபாவும் யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி இமெல்டா சுகுமாரினால் அவர்களது உறவினர்களிடம் வழங்கப்பட்டது. (4-6)

## தேர்தல் வன்முறையில் ஈடுபட்ட 180 பேர் கைது

(கொழும்பு)

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலை முன்னிட்டு இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்களுடன் தொடர்புடையதான 180 பேர் இதுவரையில் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று தேர்தல் நடவடிக்கைகளுக்குப் பொறுப்பான பிரதி பொலிஸ்மா அதிபர் காமினி நவரட்ன தெரிவித்தார்.

இதுவரையில் 91 வன்முறைச் சம்பவங்கள் தொடர்பில் பொலிஸாருக்கு முறைப்பாடு கிடைக்கப் பெற்றுள்ளதாக தெரிவித்த அவர், அவற்றுடன் தொடர்புடையதான சந்தேகத்தின் பேரிலேயே மேற்படி 180 பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும் மேலும் குறிப்பிட்டார். (4-2)

# புலிகளுக்கு எதிரான போரில் அவசரத்தை காட்டிய அரசு இனப்பிரச்சினை விடயத்தில் காலம் கடத்துகிறது

## மனோகணேசன் குற்றச்சாட்டு



கல்முனையிலிருந்து வந்த தகவலின்படி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கொழும்பு மற்றும் தெஹிவளை- கல்கிசை தேர்தல்களிலே ஜனநாயக மக்கள் முன்னணிக்கு ஆதரவை தெரிவித்திருக்கின்றது. இது சம்பந்தமான அறிவித்தலை கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் மாவை சேனாதிராஜா எம்.பி. வெளியிட்டுள்ளார்.

கூட்டமைப்பின் ஆதரவு எங்களது வெற்றியை மென்மேலும் உறுதிப்படுத்துகின்றது. நாம் பெறப்போகும் வெற்றி இந்த தமிழர் விரோத சர்வாதிகார அரசாங்கத்தை வீட்டுக்கு அனுப்பும் முகமாக தென்னிலங்கையிலே பாரிய எதிர்க்கட்சி கூட்டணியை உருவாக்குவதற்கு வித்திடுகின்றது என ஜனநாயக மக்கள் முன்னணியின் இறுதி பிரசாரக் கூட்டத்தில் கட்சியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்தார்.

இந்த அரசாங்கம் தமிழருக்கு எதிரான கோரப்போரை நடத்தி முடித்திருக்கின்றது. புலிகளுக்கு எதிரான போர் என்று சொல்லப்பட்டாலும் அது தமிழ் மக்களுக்கு எதிரான போராகவே நடத்தப்பட்டது. இந்தப் போரை நடத்துவதில் அவசரத்தையும் அக்கறையையும் காட்டிய இந்த அரசாங்கம் தேசிய இனப் பிரச்சினைக்கு தீர்வு காண்பதில் காலத்தை கடத்திக்கொண்டிருக்கின்றது.

தமிழர்களை அறுபது வருடகாலமாக கொழும்பு அரசாங்கங்கள் ஏமாற்றி வந்துள்ளன. இவ்வரிசையில் முதன்மை வகிக்கும் இன்றைய ஆட்சியாளர்கள் தற்போது இந்தியா உட்பட சர்வதேச சமூகத்தையும் ஏமாற்ற ஆரம்பித்துள்ளார்கள். தமிழ் தலைவர்களை ஏமாற்றியதை போல் இந்திய மற்றும் அமெரிக்க தலைவர்களையும் இலங்கை அரசாங்கம் வெற்றிகரமாக ஏமாற்றப் போகின்றதா இல்லையா என்பதை இன்னும் சில மாதங்களில் தெரிந்து கொள்ளலாம்.

ஏனெனில் இந்த அரசாங்கம் இன்னும் மூன்று மாதத்திற்குள் தேசிய இனப்பிரச்சினைக்கு நியாயமான தீர்வை கண்டேயாக வேண்டும். இந்த உண்மைகள் இன்றைய அரசாங்கத்திற்கு துதிப்பாடும் சில ஞான சூன்யங்களுக்கு தெரியாது.

நாளை மாநகர சபையின் மேயராக மாறிவிட்டு பின்னர் ஆளும்கட்சிக்கு தாவுவதற்கு திட்டம் போட்டு வைத்திருப்போருக்கு எமது மக்களின் வாக்குகளை வாங்கிக் கொடுப்பதற்கும் நாம் தயாராக இல்லை. இதனால்தான் இவர்களுக்கு என்மீது கோபம். என்னைப்பற்றிய பொய்யான வதந்திகளையெல்லாம் இவர்கள் இன்று பரப்பிக் கொண்டிருக்கின்றார்கள்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எங்களை ஆதரிக்காது என்று இவர்கள் சொன்னார்கள். இவர்களது மேயர் வேட்பாளர்களும் இன்னும் இரண்டு தமிழ்த் தேசியப்பட்டியல் அரசியல் வாதிகளும் கூட்டமைப்பு தங்களையே ஆதரிக்கிறது என்று கூட்டமைப்பின் தலைவரின் கருத்தை திரித்து பேசினார்கள். இதோ இப்போது கூட்டமைப்பு எங்களை ஆதரித்து விட்டது. எனவே, இதுபற்றி கருத்து தெரிவித்த ஐக்கிய தேசியக் கட்சியின் அனைத்து உறுப்பினர்களும் தாங்கள் பேசிய வார்த்தைகளை தாங்களே தற்போது விழுங்க வேண்டிய நிலைமை ஏற்பட்டு விட்டது. எங்களுக்கும் கூட்டமைப்பிற்கும் இருக்கின்ற உறவு உணர்வுபூர்வமானது. இதை புரிந்து கொள்வதற்கு இத்தகைய பெரும்பான்மை கட்சிகளுடன் சங்கமமாகி விட்டவர்களுக்கு தெரியாது. எனவே, இவர்களை பார்த்து நான் பரிதாபப்படுகிறேன். (4-2)

## குரும்பசிட்டி பகுதி பொதுமக்கள் பாவனைக்கு அனுமதியளிப்பு

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட குரும்பசிட்டி பகுதி மக்கள் பாவனைக்கு நேற்று விடுவிக்கப்பட்டது.

கடந்த கால யுத்தம் முடிவுக்குக் கொண்டு வரப்பட்ட போதிலும் இதுவரை காலமும் இராணுவத்தினரால் உயர் பாதுகாப்பு வலயம் என அறிவிக்கப்பட்ட நிலையில் மேற்படி பகுதி அமைந்திருந்தது.

இந் நிலையில்நேற்று 200 ஏக்கர் நிலப் பரப்பு மக்கள் பாவனைக்கு என இராணுவத்தினரால் விடுவிக்கப்பட்டது.

அத்தோடு பொன் பரமானந்தா வித்தியாலயம், 5 இந்து ஆலயங்கள் என்பனவும் மக்களிடம் கையளிக்கப்பட்டது.

இந்நிகழ்வில் யாழ். மாவட்ட கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மஹிந்த ஹத்துருசிங்க, யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி இமெல்டா சுகுமார், தெல்லிப்பழை பிரதேச செயலர் எஸ். முரளிதரன் ஆகியோர் கலந்து கொண்டனர். இப்பகுதி மக்களின் நீண்ட கால கோரிக்கையை அடுத்தே மக்கள் பாவனைக்கென இப்பகுதி விடுவிக்கப்பட்டுள்ளது.

மேலும் 200 குடும்பங்கள் அங்கு மீள் குடியமர்வுக்கு பதிவினை மேற்கொண்டுள்ளனர். இவர்கள் மீள்குடியேற்றும் நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகின்றது. (4-6)


கண்ணீர் அஞ்சலியும் அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பும்

அமரர் திருமதி அமிர்தலிங்கம் நந்தகுமாரி



குடும்பத்தின் ஒளிவிளக்கே
நீ அணைந்து போனதேனோ?
கொடிய நோய் வந்து
இக் கொடுமையை செய்ததேனோ?
காலமெலாம் நாம் அழவோ எமை
கைவிட்டுப் போய்விட்டாய்
கண்கள் குளமாக கதறுகிறோம்
உன் பிரிவால்
எங்கு நீ சென்றாயோ
எங்கள் குலவிளக்கே!

அவர்களின் அந்தியேட்டி கிரியைகள் இன்று 07.10.2011 (வெள்ளிக்கிழமை) காலை 5.00 மணியளவில் திக்கம் மடத்துவாசல் ஆலய முன்றலில் நடைபெறும். மேற்படி கிரியைகளிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம்-: குடும்பத்தினர்.
"இராச இல்லம்" திக்கம்.

(6475)

# ஆப்பிள் நிறுவன ஸ்தாபகர் ஸ்டீவ் ஜாப்ஸ் மரணமானார்

## ஒபாமா, பில்கேட்ஸ் இரங்கல்

(நியூயோர்க்)

கணனி உலகில் பல அரிய சாதனைகளைப் படைத்த ஆப்பிள் நிறுவனத்தை உருவாக்கிய ஸ்டீவ் ஜாப்ஸ் (வயது-56) மரணமடைந்தார்.

புற்றுநோயால் அவதிப்பட்டு வந்த அவர் நியூயோர்க் நகரில் மரணமடைந்தார். அறிவாளிகளும் சாதனையாளர்களும் நீண்டகாலம் உயிர் வாழ்வதில்லை என்பதை நிரூபிக்கும் வகையில் இவருடைய மரணம் அமைந்துள்ளது.

கடந்த 1980 இல் இவரால் உருவாக்கப்பட்ட ஆப்பிள் நிறுவனம் இன்றைய நவீன கணனி தொழில்நுட்ப புரட்சியில் முக்கிய இடம் வகித்து வருகிறது. ஸ்டீவ் ஜாப்ஸ் இதை தனது 21 ஆவது வயதில் உருவாக்கினார். 1980 இல் இவர் உருவாக்கிய ஆப்பிள் கணனி மிக வெற்றிகரமாக விளங்கியது. 2011 இல் இதன் விற்பனை 4 இலட்சத்தைத் தாண்டியது. இது உலக சாதனையாகும்.


எங்கும் எடுத்துச் செல்லும் வகையில் கணனி தொழில் நுட்பத்தை மாற்றிய பெருமை இவருக்கே உரியது. சாதாரணமான கணனி தயாரிக்கும் நிறுவனமாக உருவாகிய ஆப்பிள் நிறுவனத்தில் இசைக்கு முக்கியத்துவம் கொடுக்கும் வகையில் ஐ. பேட் மற்றும் டியூன்ஸ், ஐபோன் உருவாக்கியவர் இவரே. கடந்த 2003 இல் ஐ பேட் உருவாக்கப்பட்ட பின் இசை உலகில் ஒரு மாற்றமே ஏற்பட்டது. சுமார் 20 கோடி பேர் இதில் பதிவு செய்து ஒன்றரை கோடிக்கும் மேற்பட்ட பாடல்களை பதிவிறக்கம் செய்து ரசிக்க வருகின்றனர்.

2007 இல் ஐ போனை இவர் உருவாக்கினார். ஸ்மார்ட் போன் உருவாக இது ஒரு முன்னோடியாக விளங்கியது. 2011 இல் உருவாக்கப்பட்ட ஐ டியூன்ஸ் சேவை மேலும் ஒரு புரட்சியை ஏற்படுத்தி உள்ளது. இதைத் தொடர்ந்து முழு கணனி பயன்பாட்டை கையடக்க வடிவில் கொண்டு வரும் வகையில் இவர் உருவாக்கிய ஐபேட் வடிவமைப்பு மற்றும் தொழில்நுட்பம், கணனி யுகத்தில் புதிய வரலாற்றைப் படைத்திருந்தது. கடந்த ஆண்டு வரை பிரபலமாக இருந்த டேப்லட் பிசி என்ற கணனியை ஐ பேட் பின்னுக்குத் தள்ளி 2010 இறுதியில் ஒன்றரை கோடி விற்பனையானது.

இவர் கடந்த ஒகஸ்ட் வரை அதன் தலைவராகவும் இருந்தார். இவருடைய மரணம் குறித்து அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா, பில்கேட்ஸ் ஆகியோர் இரங்கல் தெரிவித்துள்ளனர்.

**ஒபாமாவின் இரங்கல் செய்தியில்,**

அமெரிக்காவில் புதிய படைப்புக்களை உருவாக்கி உலகில் சாதனை படைத்தவர்களில் ஸ்டீவ் ஜாப்ஸும் ஒருவர் என அமெரிக்க ஜனாதிபதி தெரிவித்துள்ளார். ஆப்பிள் நிறுவனத்தை ஆரம்பித்து இந்த உலகிற்கு மகத்தான சேவை செய்து நம்மை விட்டு பிரிந்து விட்டார். மனித வரலாற்றில் அரிய சாதனை படைத்துள்ளார். மிகவும் அசாதாரணமான ஒரு மனிதரை இந்த உலகம் இழந்துவிட்டது என்றார்.



**பேஸ்புக் நிறுவநர் மார்க் ஜுகர்பெர்க்யின் செய்தியில்,**

கணனி உலகில் புரட்சியை ஏற்படுத்தி உலகையே மாற்றி அமைத்தவர் ஸ்டீவ் ஜாப்ஸ். அவரை இந்த கணனி உலகம் இழந்து விட்டது என சமூக இணையத் தளமான பேஸ்புக் நிறுவநர் மார்க் ஜுகர்பெர்க் கூறினார்.

அமெரிக்காவின் சான்பிரான்ஸிஸ்கோ நகரில் கடந்த 1955 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 24 ஆம் திகதி பிறந்தார் ஸ்டீவன் பவுல் ஜாப்ஸ். கணனி பொறியியலாளராக தனது பாடசாலை வாழ்க்கையை ஆரம் பித்தார். 300 இற்கும் மேற்பட்ட தனது எலெக்ரோனிக் தொழில்நுட்ப கண்டுபிடிப்புகளுக்கு அமெரிக்காவில் காப்புரிமை பெற்றுள்ளார்.

அவர் விலகினாலும் ஆப்பிள் நிறுவனத்தின் வளர்ச்சிக்கு அவர் ஆற்றிய பணியை உலகம் மறக்கவில்லை. (4-2)

# தாய்லாந்தில் மழை; 237 பேர் பலி

தாய்லாந்தில் புயல் தாக்கியதால் பலத்த மழை பெய்து வருகிறது. தலைநகர் பாங்கொக்கில் வீதிகளில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடுகிறது. இதனால் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.

வீதிகளில் வாகன போக்குவரத்து நடைபெறவில்லை. வீடுகளுக்குள்ளும் வெள்ளம் புகுந்துள்ளது. தாழ்வான பகுதிகளில் வசிக்கும் மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு வெளியேற்றப்பட்டனர். மழை வெள்ளத்துக்கு இதுவரை 237 பேர் பலியானார்கள்.

தொடர்ந்து தாழ்வு நிலை நீடிப்பதால் மழை மேலும் சில நாட்களுக்கு பெய்யும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. (4-2)

# பருவகால புயல் காரணமாக மக்கள் வெளியேற்றம்

கனடாவின் நியூ பவுண்ட்லாந்து தென் கரையிலுள்ள மக்கள் பருவகாலப் புயல் காரணமாக தமது வீடுகளை விட்டுக் கட்டாயமாக வெளியேறுமாறு பணிக்கப்பட்டுள்ளனர். இந்த பிரதேசத்திலுள்ள பாறைகள் உடைந்து விழும் நிலையில் மக்கள் வெளியே செல்லவோ அல்லது வீடுகளுக்குத் திரும்பி வரவோ முடியாது பெரும் சிரமத்திற்குள் தள்ளப்பட்டுள்ளனர்.

எனினும் நேற்றுமுன்தினம் மட்டும் தென் பகுதியில் 40-60 மி.மீ மழை பெய்துள்ளதாக வானிலை அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

இந்நகரத்தின் பெரும்பாலான வீதிகள் நீரில் மூழ்கியுள்ளதால் சாரதிகளுக்கு எச்சரிக்கை சமிஞ்ஞை விடுக்கப்பட்டுள்ளது. (4-2)

# தொழிலில் இருந்து ஓய்வுபெறும் சட்டரீதியான வயது நீக்கம்

பிரிட்டனில் கடந்த ஏப்ரல் மாதத்திலிருந்து படிப்படியாக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் மூலம் ஒருவர் தொழிலொன்றிலிருந்து ஓய்வு பெற வேண்டிய சட்ட ரீதியான வயது உச்ச வரம்பு நீக்கப்பட்டுவிட்டது.

ஒருவர் 65 வயதை அடைந்தவுடன் வயதைக் காரணம் காட்டி அவரை தொழிலிலிருந்து நீக்குவதற்கு தொழில் வழங்குநருக்கு இருந்த அதிகாரத்தை இந்தப் புதிய சட்டம் இத்துடன் ஒழித்துவிட்டது.

ஆனாலும் பிரிட்டனில் உள்ள தொழில் ஸ்தாபனங்களில் பத்தில் ஒரு நிறுவனம் ஊழியர்களை குறித்த ஒரு வயதில் ஓய்வு பெறச் செய்வதற்காக ஊக்குவிப்பு சலுகைகளை வழங்குவதாக நோர்ட்டன் ரோஸ் என்ற சட்ட நிறுவனமொன்று நடத்திய ஆய்வொன்றின் மூலம் தெரியவந்துள்ளது.

இந்தப் புதிய சட்டத்தை வரவேற்றுள்ள ஏஜ யுகே என்ற தன்னார்வ நிறுவனமொன்று ஆனாலும் வேலைத்தளங்களில் வயதை மையமாகக் கொண்டே பாரபட்சங்கள் இன்னும் இருக்கத்தான் செய்கிறது என்று சுட்டிக் காட்டியிருக்கின்றது. (4-2)

# 135 கோடி மதிப்பு மிக்க போதைப்பொருள் பறிமுதல்



இந்தியா பாகிஸ்தான் எல்லைப்பகுதியான அட்டாரியில் 135 கோடி மதிப்புமிக்க போதைப்பொருள் பறிமுதல் செய்யப்பட்டது.

ஹெரொயின் போதைபொருளுடன் இந்திய எல்லைக்குள் நுழைய முற்பட்ட கடத்தல்காரர்களை எல்லை பாதுகாப்பு படையினர் துப்பாக்கியால் சுட்டு விரட்டியதில் கடத்தல்காரர்கள் விட்டு சென்ற 27 கிலோ நார்காட்டிக் என்ற போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது.

இந்திய -பாகிஸ்தான் எல்லைப்பகுதியான அட்டாரி எல்லை பாதுகாப்பு படையினர் ரோந்துபணியில் ஈடுபட்டிருந்த பொழுது சிலர் இந்திய எல்லைக்குள் நுழைவதைக் கண்டதும் உஷாராகி பாதுகாப்பு படையினர் தொடர்ந்து துப்பாக்கியால் சுட ஆரம்பித்ததும் கடத் தல்காரர்கள் பாகிஸ்தான் எல்லைக்குள் திரும்பி விட்டனர். இதில் யாருக்கும் காயம் ஏற்படவில்லை.

இது குறித்து பி.எஸ்.எப். இன்ஸ்பெக்டர் பவான்சௌத்திரி கூறுகையில், இந்த அளவிற்கு போதைப்பொருள் இதுவரை கைப்பற்றியதில்லை. தொடர்ந்து தீவிர கண்காணிப்பில் ஈடுபட்டுள்ளோம் என்றார்.

அவர்கள் கொண்டு வந்த 27 கிலோ எடையுள்ள நார்காடிக் போதைப்பொருளின் சர்வதேச மதிப்பு 135 கோடியாகும்.

கடந்த 4ஆம் திகதி ரூ.75 கோடி மதிப்பு கொண்ட 15 கிலோ ஹெரொயின் கைப்பற்றப்பட்டது குறிப்பிடத்தக்கது. (2)

# இந்தியாவில் தனது ஆதிக்கத்தை செலுத்தப் போகின்றதா சீனா?

(புதுடில்லி)

இந்தியாவின் பொருளாதார வளர்ச்சியால் அரண்டு போய் இருக்கும் சீனா மெல்ல மெல்ல இந்தியாவை சுற்றி தன் இராணுவ பலத்தை அதிகரித்து வருகின்றது.

பாகிஸ்தான், வங்கதேசம், மியன்மார் நாடுகளின் பகுதிகளில் ஏற்கனவே சீன இராணுவம் வலுவான தளம் அமைத்துள்ளது. இலங்கையில் விடுதலைப்புலிகள் மிகவும் வலுவாக இருந்த வரை அங்கு சீனர்களால் கால் ஊன்ற இயலவில்லை.

விடுதலைப்புலிகள் ஒடுக்கப்பட்ட பின் தற்போது இலங்கை ஆதரவுடன் சீனா இராணுவ வீரர்கள் கச்சதீவு வரை வந்து விட்டனர். இதன்மூலம் இந்தியாவை சுற்றி பூமாலை போன்று தன் இராணுவத்தை சீனா வைத்துள்ளது.

இந்த நிலையில் தனது இராணுவத்தை புதிய படை பிரிவு ஒன்றை இந்திய எல்லைக்கு மிக அருகில் சீனா கொண்டு வந்துள்ளது. பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீருக்குள் அந்த புதிய படை பிரிவு அமைக்கப்பட்டுள்ளது.

பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீர் பகுதியில் அதிநவீன வீதிகளை சீன இராணுவம் அமைத்து வருகின்றது.


இந்தியா கடும் எதிர்ப்புத் தெரிவித்த போதிலும் சீனா அதை கண்டு கொள்ளாமல் மளமளவென வீதி அமைத்து இதற்காக பல்லாயிரக்கணக்கான சீனர்கள் பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீருக்குள் உள்ளனர். அவர்களுடன் சீன இராணுவ வீரர்கள் 4 ஆயிரம் பேர் ஊடுருவி வந்துள்ளனர்.

அவர்கள் காஷ்மீர் எல்லை அருகே வந்து இந்தியாவை நோட்டமிடும் வகையில் நிறுத்தப்பட்டுள்ளனர். திடீரென எல்லை அருகே சீன வீரர்கள் வந்துள்ளதால் இந்திய இராணுவம் உஷார்படுத்தப்பட்டுள்ளது. சீன இராணுவத்தின் இந்த திடீர் அச்சுறுத்தல் இந்திய இராணுவ தலைமை தளபதி வி.கே.சிங் உறுதிப்படுத்தியுள்ளார். ஆனால் மத்திய வெளியுறவுத்துறை இன்னமும் இது பற்றி எந்த ஆய்வையும் தொடங்காமல் உள்ளது. (4-2)

# தூக்குத்தண்டனை கைதிகள் மூவருக்கும் பொது மன்னிப்பு வழங்கப்பட வேண்டும்

## மத்திய அரசைக் கோருகிறார் கருணாநிதி

(சென்னை)



தி.மு.க. தலைவர் கருணாநிதி பிரதமருக்கு வேண்டுகோள் ஒன்றை விடுத்துள்ளார். இது தொடர்பாக வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறி இருப்பதாவது,

ராஜீவ் காந்தி கொலை வழக்கில் குற்றம் சாட்டப் பட்டு தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டு இருபதாண்டு காலத்திற்கு மேலாக சிறையில் வைக்கப்பட்டுள்ள பேறிவாளன், சாந்தன், முருகன் ஆகியோரை விடு விக்க மத்திய, மாநில அரசுகள் முன்வர வேண்டும். அதற்காக தமிழக அரசு அமைச்சரவையில் தீர்மா னம் நிறைவேற்றி ஆளுநருக்கு அனுப்ப வேண்டும் என்றும் அனைவரும் கேட்டுக் கொண்டு பல நாட்களாகியும் தமிழக அரசு அதற்கு முன் வராத நிலையில் மத்திய அரசாவது இவர்கள் மூவரையும் சிறையிலிருந்து விடுவிப்பதற்கான முயற்சிகளிலே ஈடுபட்டு உதவிட வேண்டும் என்று பிரதமரையும் ஐக்கிய முற்போக்கு கூட்டணியின் வழிகாட்டும் தலைவி சோனியா காந்தியையும் தி.மு.க. சார்பில் கேட்டுக் கொள்கின்றேன் என அதில் கூறப்பட்டுள்ளது. (4-2)

முதலில் தூசியைக் கிளப்பி விடுகிறோம். பின்னால் பார்க்க முடியவில்லை என்று முறையிடுகிறோம். ~ பிஷப் பார்க்லி

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# வாகன சாரதிகளிடம் அன்புக் கோரிக்கை

அன்புமிகு வாகன சாரதிகளுக்கு வணக்கம். தாங்கள் பொறுப்பான சாரதிகளாக செயற்படுவதன் மூலம் மனித உயிர்களை காப்பாற்ற முடியும் என்ற அடிப்படையில் இக்கோரிக்கை விடப்படுகின்றது.

தற்போதைய யாழ்ப்பாணம் கட்டுப்படுத்த ஆளில்லாத ஒரு பிரதேசமாக மாறிவிட்டது.

கடன் கொடுக்கும் நிறுவனங்களின் ஆக்கிரமிப்பு அதனால், வாகனங்களின் பெருக்கம் காரணமாக யாழ்ப்பாணக் குடாநாட்டில், வீதி விபத்துக்கள் கடுமையாக அதிகரித்து விட்டன.

இதே நிலைமை இரண்டு வருடங்கள் தொடருமாயின், வன்னி யுத்தத்தின் போது இழந்த மனித உயிர்களின் எண்ணிக்கையை,

வீதிவிபத்துக்களால் ஏற்படும் மரணங்கள் எட்டிப்பிடித்துவிடும் என்பது சர்வ நிச்சயம்.

இத்தகைய விபத்துக்கள் ஏற்படுவதற்கான காரணங்கள் பலவற்றை முன்வைக்க முடியும். வீதிகளின் அகலிப்பின்மை, அதிரடியாக ஏற்பட்ட வாகன நெரிசல், அதிரடியான வாகன நெரிசலுக்கு பழக்கப்படாத மக்கள், திருத்தப் படாத வீதிகள் போன்றவற்றை சுட்டிக்காட்டும் அதேநேரம், சாரதிகளின் பொறுப்பற்ற செயற்பாடுகள் வீதி விபத்துக்கான முதன்மைக் காரணமாக அமைந்து விடுகின்றது.

இளம் வயதினர் வாகனங்களை வேகமாக செலுத்துதல், மோட்டார் சைக்கிள்களைச் செலுத்தும் போது வேகக்கட்டுப்பாட்டை மறந்துவிடுதல் போன்றன வீதி விபத்துக்களை கணிசமாக்கி விடுகின்றன.

இதன் இடையே சிறிய வாகனச் சாரதிகள் காட்டும் அவசரம், வேகம் என்பன அவர்களிடம் பொது மக்கள் பற்றிய எண்ணம் இம்மியும் இல்லை என்பதைத்திட்டவட்டமாக வெளிப்படுத்தி நிற்கின்றது.

எனவே அன்புக்குரிய சாரதிகளே! மோட்டார் சைக்கிள் ஓட்டும் இளைஞர்களே! நீங்கள் வீதியில் இறங்கும் போது உங்கள் உயிர், மற்றவர்களுடைய உயிர் என்பவற்றை பாதுகாக்கும் பாரிய பொறுப்பு உங்களிடம் உண்டு என்பதை மறந்து விடாதீர்கள்.

உங்கள் உயிருக்கோ அல்லது மற்றவரின் உயிருக்கோ உங்களால் ஆபத்து ஏற்பட்டு விடுமாக இருந்தால், அதனால் ஏற்படக் கூடிய பெரும் துன்பம் வாழ்நாள் முழுவதும் எங்களை, உங்களை வாட்டும் என்ற உண்மையை மறந்து விடாதீர்கள்.

கையடக்கத் தொலைபேசியில் உரையாடிய வண்ணம் பயணிக்கும் எங்கள் சாரதிகளின் பண்பாட்டைப் பொலிஸாரால் ஒரு போதும் தடுத்து விட முடியாது என்பதால் சாரதிகள் ஒவ்வொருவரும் நிதானமாகச் சிந்தித்து செயற்படுவது கட்டாயம்.

# வடக்கின் நிவாரணப் பணிகளுக்கு ஐ.நா. அமைப்புகளுக்கு நிதிச் சிக்கல்

(கொழும்பு)

போர் காரணமாக பாதிக்கப்பட்ட வட மாகாணத்தில் நிவாரணப் பணிகளை மேற்கொள்வதில் நிதிச் சிக்கல் ஏற்பட்டுள்ளதாக ஐ.நா. தெரிவித்துள்ளது.

இந்த ஆண்டில் மேற்கொள்ளப்பட வேண்டிய அபிவிருத்திப் பணிகளுக்காக இன்னமும் 200 மில்லியன் அமெரிக்க டொலர்கள் தேவைப்படுவதாக ஐக்கிய நாடுகள் அமைப்புகள் அறிவித்துள்ளது.

நிவாரணப் பணிகளை மேற்கொள்வதற்காக 289 மில்லியன் அமெரிக்க டொலர்கள் தேவைப்படுவதாகவும் இதுவரையில் 76.5 மில்லியன் அமெரிக்க டொலர்களே கிடைக்கப் பெற்றுள்ளதாகவும் அவை தெரிவித்துள்ளன.

போர் வலயத்தைச் சேர்ந்த மக்கள் போதியளவு உணவுகளை பெற்றுக் கொள்வதில் சிரமங்களை எதிர்நோக்கி வருவதாகக் குறிப்பிட்டுள்ளது.

அடிப்படை மனிதாபிமான உதவிகளை வழங்குவதற்கும் மேலும் நிதி உதவிகள் தேவைப்படுவதாக ஐ.நா. அமைப்புகள் கோரிக்கை விடுத்துள்ளன. (பா-9)

# உரமானியம் வழங்கல்

(தனங்கிளப்பு)

மறவன்புலோ கமக்கார அமைப்புக்குட்பட்ட விவசாயிகளுக்கான உர மானியம் எதிர்வரும் 12 ஆம் திகதி புதன்கிழமை காலை 8 மணிக்கு கைதடி கமநல சேவை திணைக்களத்தில் வைத்து வழங்கப்படுமென கமக்கார அமைப்பினர் தெரிவித்துள்ளனர். (4-12-37)

# வாரிய பொலவில் வாகன விபத்தில் 6 பேர் பலி

(கொழும்பு)

வாரியபொல காவல் நிலையத்திற்கு முன்பாக இடம்பெற்ற வாகன விபத்தில் 6 பேர் பலியாகினர். உயிரிழந்தவர்களின் சடலங்கள் தற்போது வாரியபொல வைத் தியசாலைக்கு எடுத்துவரப்பட்டதாக வைத்தியசாலைப் பேச்சாளர் ஒருவர் தெரிவி த்தார்.


இரண்டு பாரஊர்திகள் நேருக்கு நேராக மோதியதன் காரணமாகவே இந்த அனர் த்தம் இடம்பெற்றுள்ளது. (4-9)

# வாகன விபத்தில் ஒருவர் பலி

(கொழும்பு)

கிளிநொச்சி மாங்குளம் பகுதியில் இடம் பெற்ற வாகன விபத்தில் இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார். வீதியில் நிறுத்திவைக் கப்பட்டிருந்த லொறியொன்றுடன் பேருந்து ஒன்று மோதியதால் இந்த விபத்துச்சம் பவம் நேர்ந்துள்ளதாக பொலிஸார் குறிப்பிடுகின்றனர்.

விபத்தில் பேருந்து மிதிபலகையில் பய ணித்த ஒருவரே உயிரிழந் துள்ளதாகக்குறிப்பிடப்படுகிறது. (4-2)



# அறிந்து கொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்

## துர்க்கைக்குப் பிடித்த மலர்

இராகு காலத்தில் எலுமிச்சைப்பழ விளக்கேற்றி துர்க்கையை வழிபடுவது வழக்கம். கன்னிப்பெண்கள் நல்ல கணவன் வேண்டியும், திருமண மானவர்கள் மாங்கல்ய பாக்கியத்திற்காகவும் மற்றும் வேலைவாய்ப்பு, தைரியம் வேண்டுதல், கல்வி முன்னேற்றம் ஆகியவற்றுக்காக இந்த வழிபாட்டைச் செய்யலாம். ஆனால், குறிப்பிட்ட வகை மலர்களால் அர்ச்சித்தால் பலன் இரட்டிப்பாகும் என்பது நம்பிக்கை.

- ஞாயிறு-வில்வ மாலை
- திங்கள்-வெள்ளரவி மாலை
- செவ்வாய்-செவ்வரளி அல்லது செந்தாமரை மாலை
- புதன்- துளசி மாலை
- வியாழன்-சாமந்திப்பூ
- வெள்ளி-மல்லிகை மாலை
- சனி-வெள்ளளரளி மாலை

# தரம் 5 புலமைப் பரீட்சை முடிபுகள்

**யா/உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயம்**

ஜெ.அகிலன்-181, இ.கலைப்பருதி-180, ஞா.கயானி-171, த.சமரமுகன்-170, செ.கௌசிக்-169, அ.ரிசாளினி-166, த.புனர்வசன்-163, பா.துளசிகா-163 கோ.கோ மைந்தன்-160, சி.ரிஷிகீதன்-157, ர.ஜிந்திசன்-155.

**யா/ஊர்காவற்றுறை ரோ.க. தமிழ் ஆண்கள் பாடசாலை**

ஞா.டக்ஜன்-163. (4)





# வெள்ளி நற்சிந்தனை

40

## செவ்வியல் தமிழில் சீர்மியம்

மனித வாழ்க்கையில் காமம் என்னும் உணர்வு மேலோங்கும் போது செயற்பாடுகளில் மாற்றம் ஏற்படும். தன்னுடைய அறிவை இழந்து செயற்படுவோரும் உண்டு. ஆண்கள் காம உணர்வை அடக்கும் திறன் அற்றவர்கள். பல பழைய பாடல்களில் ஆண் கூற்றாக இச் செய்தி பதிவு செய்யப்பட்டுள்ளது. மணிவாசகரும் தன் கூற்றாகப் பாடலிலே இச் செய்தியினைப் திவு செய்துள்ளார்.

திருச்சதகம் என்னும் பாடல் தொகுப்பில் மணிவாசகர் மனம் திறந்து பேசியுள்ளார். இறைவன் குருவடிவாக வந்து அவரை ஆட்கொண்ட போது இறை வழி அவர் மனம் தொழிற்பட்டது. சிவனருளை எண்ணிச் செயற்பட்டது. ஆனால் இறைவனைப் பிரிந்தும் மீண்டும் உலக இன்பங்களையே அவருடைய மனம் நாடிச் சென்றது. அவ்வாறு மனம் நாடி யதை அவர் மறைக்கவில்லை. தன்னு டைய பலவீனத்தை வெளிப்படையாகவே எடுத்துரைக்கின்றார். பருவ நிலையால் உடல் காமவயப்பட மான்போன்ற நோக் கினையுடைய பெண்களோடு வாழும் பொய்யான வாழ்வையே மீண்டும் விரும் புகிறார். வேனிற் காலத்தில் மன்மத னின் மலரம்புகள் மனதைத் கிழித்திட அப்பிளவிலே நிலவுசுடுகின்ற மாறுபட்ட அத்துன்பநிலையைவிலக்காமல்உடலை ஒம்பியதை உள்ளபடி கூறுகிறார். இறை சிந்தனையை முற்றாக மறந்து காம வயப்பட்டு வாழ்ந்ததை எண்ணி வருந்துகிறார். தன்னுடைய மனக்கலக்கத்தை ஒரு செயற்பாட்டின் மூலம் தெளிவாக விளக்கியுள்ளார்.

மானிலாவிய நோக்கியர் படிறிடை மத்திடுதயிராகி என்ற அடி இதனை உணர்த்தி நிற்கிறது. கட்டித்தயிரை மத்தினால் கடையும் போது அது எவ்வாறு உடைந்து சிதறுகின்றதோ அதேபோல அவருடைய உறுதியான மனமும் உடைந்து விட்டதென்கிறார். எல்லோரும் அவருடைய உணர்வை எளிதாகப் புரிந்து கொள்ளும் வண்ணம் இவ்வுவமையைப் பயன்படுத்தியுள்ளார். மனிதனுடைய இளமைக்காலத்தில் உணர்வைக் கட்டுப்படுத்த முடியாத நிலையை மணிவாசகர் சுய அநுபவமாகச் சொல்வது அவருடைய மனச்சீர்மையைக் காட்டுகிறது. இளவேனிற்காலம் என்பது சித்திரை, வைகாசி மாதங்களாகும். இக்காலத்தில் நிலவும் சுடும் எனக் கூறுவதன் மூலம் மணிவாசகர் காம உணர்வின் தாக்கத்தையும் விளக்க முற்பட்டுள்ளார்.

பெண்களின் வாழ்வியலில் காமத்தைப் பெருக்கும் வகையில் ஆண்களை வழிநடத்தும் செயற்பாட்டை மணிவாசகர் அநுபவ நிலையாகக் கூறுவது கவனத்திற்குரியது. அத்த கைய பெண்களைப் படிறுடையவர் எனக் குறிப்பிட்டுள்ளார். படிறு என்பது வஞ்சனை என்ற வடசொல்லின் பொருள் தரும் தமிழ்ச் சொல்லாகும். இறைவழிபாட்டை

**கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்**

மறந்து தேனீ போன்ற இனிமையான திருவருளை மறந்து வாழும் தன் குற்றத்தைத் தானே ஒப்புக் கொள்கிறார். உடலின் விருப்பத்தையே பெரிதாகஎண்ணி அதனையே ஒப்பும் பொருட்டு உண்டு உடுத்து வாழ்ந்திருந் தேனே என வருந்துகிறார். தன்னு டைய அறியாமை காரணமாகச் செய்த தவறை பிறர் செய்யக் கூடாதென நினைத்து தன் அநுபவத்தைப் பாடலிலே பதிவு செய்துள்ளார்.

வேனில் வேள்கணை கிழித்திட மிதி சுடும்
அதுதனை நினையாதே
மானிலாவிய நோக்கியர் படிறிடை
மத்திடு தயிராகித்
தேனி லாவிய திருவருள் புரிந்த வென்
சிவனகர் புகர் போகேன்
ஊனிலாவியை யோம்புதற் பொருட்டினும்
உண்டுடுத் திருந்தேனே.

# மாகாணமட்ட ஆங்கிலமொழி தின போட்டி முடிவுகள்-2011

(நேற்று முன்தின தொடர்ச்சி...)

*பார்த்தெழுதுதல்*

**தரம்-12**

ஏ.சந்திரிக்கா (யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை),என்.சோபனா (யா/மானிப்பாய் மகளிர் கல்லூரி),எம்.பகீரதி (வ/சி.சி.தமிழ் கல்வன் பாடசாலை)

*மனனம் செய்து ஒப்புவித்தல்*

**தரம்-03**

எல்.அபிகைல் றிகேசா (யா/சுண்டிக்குளி பெண்கள் கல்லூரி), ஏ.ஆர்.நிசாரா (யா/உடுவில் பெண்கள் கல்லூரி), எஸ்.பிரட்சகா (வவு/விபுலானந்தா கல்லூரி)

**தரம்-04**

ஆர்.தாரணி (யப/சென்.ஜோன்ஸ் பொஸ்கோ வித்தியாலயம்),ஜெ.ஜேனுசா (மன்/சென். சேவியர் மகளிர் கல்லூரி), ஆர்.மதுமிதா (யா/ மகாஜனா கல்லூரி)

**தரம்-05**

ரி.ஆதர்சினி (யா/ உடுவில் பெண்கள் கல்லூரி), எஸ்.பவதாரணி (யா/சென்.ஜோன்ஸ் பொஸ்கோ வித்தியாலயம்),ஆர். கிருஷிகா (மன்/சித்தி விநாயகர் இந்துக் கல்லூரி)

**தரம்-06**

எஸ்.மதுசாயினி (யா/ உடுவில் பெண்கள் கல்லூரி), ஜெ.ஜெயதீபிகா (யா/வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலை), மூன்றாமிடம் இருவர்:- எப்.பிரதிக்சைனி (மன்/முருங்கன் ம.வி), ஆர் சிவந்தனா(மன்/சித்தி விநாயகர் இந்துக் கல்லூரி)

**தரம்-07**

பி.ஔசியா (யா/ சாவகச்சேரி இந்துக் கல்லூரி), ஜெ.கரோலின் செனோவா (யா/சுண்டிக்குளி பெண்கள் கல்லூரி), எஸ். நித்ய பூபதி (யா/வடமராட்சி இந்து பெண்கள் கல்லூரி),

**தரம்-08**

சி.விசாகி (வ/வவுனியா தமிழ்.ம. ம.வி), பி.சௌமியா (யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை),பி.கெவி (யா/ சென் பற்றிக்ஸ் கல்லூரி)

**தரம்-09**

ஜெ. சலோமி ஜெவிதா (யா/ உடுவில் பெண்கள் கல்லூரி), வ.ஷரோன் திவ்யா (யா/சுண்டிக்குளி பெண்கள் கல்லூரி), பி.வினோஜன் (யா/ஹாட்லிக் கல்லூரி)

**தரம் 10**

வை.ஹர்சிக்கா (கிளி/கிளிநொச்சி ம.வி), பி.சக்தியா (வவு/இறம்பைக்குளம் மகளிர் மகா வித்தி,எஸ்.தேனுஜா (யா/இளவாலை கொன்வென்ற் ம.வி)

**தரம் 11**

கே.பிரியங்கி (யா/திருக்குடும்ப கன்னியர் மடம்),ரி.ஏஞ்சலின் நீறஜா (யா/திருக்குடும்ப கன்னியர்மடம்),ஆர்.காயத்திரி (யா/யாழ்ப்பாணக் கல்லூரி)

*முன்னாயத்தம் செய்து உரை நிகழ்த்துதல்*

**தரம் 12**

பி.ஜெனந்தன் (வவு/வவுனியா தமிழ் மகா வித்தி,எ.ஆத்மீகா (யா/வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலை),எஸ்.சாகீர்தியா (யா/நெல்லியடி மத்திய மகா வித்தி

**தரம் 13**

பி.லவன்சன் (வவு/தமிழ் மத்திய மகா வித்தி,பி.சோமா (யா/சுண்டிக்குளி பெண்கள் கல்லூரி), எஸ்.ஆரபி (யா/திருக்குடும்ப கன்னியர் மடம்)

*உடன் தயாரித்து உரை நிகழ்த்துதல்*

**தரம் 12**

பி.ஆனந்தசயன் (வவு/தமிழ் மத்திய மகா வித்தி),ரி.தனுஜா (வவு/இறம்பைக்குளம் மகளிர் மகா வித்தி), அஸ்மிகா (மன்/எருகலம்பிட்டி மத்திய மகா வித்தி

**தரம் 13**

எஸ்.சாம்பவி (யா/உடுவில் மகளிர் கல்லூரி), என்.மாதங்கி (யா/வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலை),எஸ்.கஜந்தன் (யா/சென்.ஜோன்ஸ் கல்லூரி)

*நாடகப்போட்டிகள்*

*உரையாடல் நாடகம்*

**ஆரம்பப்பிரிவு (3-5)**

யா/சென்.ஜோன்ஸ் பொஸ்கோ வித்தி, யா/உடுவில் மகளிர் கல்லூரி,வவு/இறம்பைக்குளம் மகளிர் மகா வித்தி

**கனிஷ்டபிரிவு (6-9)**

யா/உடுவில் மகளிர் கல்லூரி,வவு/தமிழ் மகா வித்தி,யா/வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலை

**சிரேஷ்டபிரிவு (10-13)**

யா/வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலை,மன்/சித்திவிநாயகர் கல்லூரி,வவு/இறம்பைக் குளம் மகளிர் மகா வித்தி

*கவிதை நாடகம்*

**சிரேஷ்டபிரிவு (10-13)**

யா/உடுவில் மகளிர் கல்லூரி, யா/வேம் படி பெண்கள் உயர்தரப் பாடசாலை,மன்/சென்சேவியர் மகளிர் கல்லூரி. (தொடரும்)


## சேவைநலன் பாராட்டி வாழ்த்துகின்றோம்

**1 AB** பாடசாலையில் அதிபர் தரம் 1 ஐ சேர்ந்த எமது அதிபர் யா/ வட்டு இந்துக் கல்லூரியில் நியமிக்கப்பட்டு மகத்தான சேவைபுரிந்து சேவையிலிருந்து ஓய்வு பெற்றுச் செல்லும் கல்லூரி அதிபர்

**சிவப்பிரகாசம் சிவகணேசசுந்தரன் (S.L.P.S-1)**



அவர்களின் மாண்புமிகு
அர்ப்பணிப்புள்ள
சேவையினைப் பாராட்டி
அவர்களை மனதார
வாழ்த்துகின்றோம். அத்துடன்
அவர் ஓய்வுக்காலத்தில் மனதில்
மகிழ்ச்சியும், வாழ்வில்
நிறைவும் பெற்று பல்லாண்டு
காலம் வாழ வேண்டும்
என இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

பாடசாலைச் சமூகம்
யா/வட்டு இந்துக் கல்லூரி.

(6330)


# இலங்கை கடற்படையினரால் 513 படகுகள் தடுத்து வைப்பு

சுமார் 513 இந்திய மீன்பிடி படகுகளை சர்வதேச கடல் எல்லைக்கு அருகில் வைத்து இலங்கைக் கடற்படையினரால் துப்பாக்கி முனையில் கைப்பற்றப்பட்டுள்ளதாக இந்திய மீன்பிடி திணைக்கள அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

நேற்றுமுன்தினம் காலை 9 மணியளவில் இம்மீன்படி படகுகளை 6 இலங்கைக் கடற்படை பட்குகள் சுற்றிவளைத்து மீன்பிடி படகுகளை சுமார் 5 மணித்தியாலங்கள் தடுத்து வைத்திருந்ததாக மீனவர்களை மேற்கோள்காட்டி இந்திய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்திய கரையோர காவல் படகொன்று அவ்விடத்திற்கு விரைந்ததாகவும் ஆனால் மீனவர்களை விடுவிப்பதற்கு எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளாமல் திரும்பிச் சென்றதாகவும் நேற்று காலை கரைக்குத் திரும்பிய மேற்படி மீனவர்கள் தெரிவித்துள்ளனர். (4-2)

# மலைநாட்டு ஆதிவாசிகள் தாழ்நிலங்களில் குடியேறினர்

## அகழ்வாராச்சியில் தகவல்

(கொழும்பு)

சுமார் ஆறாயிரம் வருடங்களுக்கு முன்னதாக மத்திய மலைநாட்டில் வாழ்ந்த ஆதி மனிதர்கள் பின்னர் தாழ் நிலங்களில் குடியேறியமை முதற்தடவையாக உறுதி செய்யப்பட்டுள்ளது.

கடந்த சில வாரங்களாக களனி பல்கலைக்கழத்தின் தொல்பொருள் பட்டப்பின் படிப்பு கல்வி நிறுவனம் மேற்கொண்ட அகழ்வாராய்சியின் போது இந்த விடயம் தெரிய வந்துள்ளது.

ஹல்துலலையிலிருந்து ஹோட்டன் சமவெளி வரையிலான பகுதியில் இந்த ஆராய்ச்சியின் போது இந்த விடயம் தெரியவந்துள்ளது. ஹலதுலலையிலிருந்து ஹோட்டன் சமவெளியிலான பகுதியில் இந்த ஆராய்ச்சிகள் முன்னெடுக்கப்பட்டதாக சிரேஷ்ட பேராசிரியர் ராஜ சோமதேவ கூறினார்.

இதன் போது கண்டுபிடிக்கப்பட்ட சான்றுகளுக்கு அமைய ஐந்து புராதன குடியேற்றங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாக பேராசிரியர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த ஆய்வின் மூலம் உறுதி செய்யப்பட்டுள்ள தகவல்கள் இலங்கையில் கற்காலம் தொடர்பான வரலாற்றைப் புதுப்பிக்க உதவும் என களனி பல்கலைக்கழகத்தின் தொல்பொருள் பட்டப்பின் படிப்பு கல்வி நிறுவனத்தின் சிரேஷ்ட பேராசிரியர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார். (4-2)


## Calling for Tender-Teaching Hospital,Jaffna.

### NTS Lecture Hall 2nd Floor Balance work

**01. The Chairman of the Divisional Tender Board, Teaching Hospital, Jaffna will receive sealed tender for NTS Lecture Hall 2nd Floor Balance Work, TH, Jaffna up to 10.00 am on 27.10.2011 Tender form may be collected from Director, TH, Jaffna up to 19.10.2011 on payment on non refundable deposit of Rs.1,000/-**

**02. Tender will be Opened immediately after closing at the office of the Director, Teaching Hospital, Jaffna. Tenders or their authorized representative are requested to be present at the opening Tenders.**

**03. Tender forms are issued only contractors have been valid registration in Grade M9 and above in the field of Building Constructions and other Institute of Constru ctions Training And Developement (ICTAD) criteria and valid membership of National Construction of contractors Association of Srilanka (NCCASL)**

**04. Sealed Tender may be dispatched either by registered post or hand delivered to Director,Teaching Hospital, Jaffna or deposited in the Tender Box at Teaching Hospital, Jaffna on or before 10.00 am on 27.10.2011.**

**05. Tender Document may be inspected free of charge at the Residence Engineers Office, CECB, Jaffna.**

**06. For Further details please contact Hospital Secretary, TH, Jaffna.**

**The Chairman,**
**Divisional Tender Board,**
**Teaching Hospital,**
**Jaffna.**

(C-4647)

# இறுதிப்போட்டிக்கு முன்னேறுமா பெங்களூர் இன்று நியூ சவுத் வேல்ஸுடன் மோதல்

(பெங்களூர்)

சம்பியன்ஸ் லீக் தொடரில் இன்றைய முதல் அரையிறுதிப்போட்டியில் பெங்களூர் றோயல் சலஞ்ஜர்ஸ்-நியூத் சவுத் வேல்ஸ் அணிகள் மோதுகின்றன.

சொந்த மண்ணில் களம் இறங்கும் பெங் களூர் அணி சிறப்பான ஆட்டத்தை வெளிப் படுத்தி இறுதிப் போட்டிக்கு முன்னேறும் என நம்பப்படுகிறது.

மூன்றாவது சம்பியன்ஸ் லீக் இருபது-20 தொடரில் லீக் போட்டிகள் முடிந்து இன்று அரையிறுதிப்போட்டிகள் ஆரம்பமாகின்றது. இன்று பெங்களூரில் நடக்கும் முதல் அரை யிறுதியில் பெங்களூர், நியூஸ்சவுத்வேல்ஸ் அணியை சந்திக்கிறது.

பெங்களூர் அணியை பொறுத்தவரை முதலிரு போட்டிகளில் தோல்வியடைந்து புள்ளிப்பட்டியலில் கடைசியிடத்திலிருந்தது. சோமர்சட் அணிக்கு எதிராக எழுச்சி கண்ட இந்த அணி தெற்கு அவுஸ்திரேலியாவை கடைசிப் பந்தில் வீழ்த்தி அரையிறுதிக்கு முன் னேறியது.

### ஹயில் பலம்

பெங்களூர் அணியின் துடுப்பாட்டம் ஹயிலின் ஆட்டத்தை பொறுத்தே அமை கிறது.சோமர் சட் அணிக்கு எதிராக அசத்திய ஹயில் தெற்கு அவுஸ்திரேலியாவுக்கு எதிராக ஏமாற்றினார். இன்று மீண்டும் மின்னல் வேக ஆட்டத்தை தொடர்ந்தால் பெங்களூர் அணியை இறுதிப்போட்டிக்கு கொண்டு செல் லலாம். தொடரின் ஆரம்பத்தில் ஏமாற்றிய டில்சான் முக்கியமான கடந்த போட்டியில் எழுச்சி கண்டது பெங்களூர் நிர்வாகத்திற்கு ஆறுதல் அளித்திருக்கும்.

இளம் கோலி வேகமான ஆட்டத்தைக் கொடுத்துவருவது அணியின் பலம். பின்வரி சையில் மயங்க் அகர்வால், சௌரப் திவாரி, அணித்தலைவர் விக்டோரி சூழ்நிலைக்கு தகுந்த ஆட்டத்தை வழிப்படுத்த வேண்டும்.

கடைசிப்பந்தில் சிக்ஸர் அடித்து பெங்க ளூர் நாயகனாக உருவெடுத்த அருண்கார்த் திக் இன்றும் கை கொடுப்பார் என நம்பலாம்.

### மோசமான பந்து வீச்சு

பெங்களூர்அணியின்பந்துவீச்சுதொடர்ந்து மோசமாகத்தான் உள்ளது. விக்டோரி, சையத் முகமெட் ஆகியோரைத் தவிர மற்றவீரர்கள் மந்தமாகவே பந்துவீசுகின்றனர். இந்திய அணிக்கு தேர்வாகிய அரவிந் ஸ்ரீநாத் ரன் வள்ளலாக இல்லாமல் விக்கெட் வீழ்த்துவதில் கவனம் செலுத்த வேண்டும்.

முதல் போட்டியில் தோல்வியடைந்த நியூ சௌத்வேல்ஸ் அணி அடுத்து திரினிடாட் அணிக்கு எதிராக தோல்வியின் விளிம்புவரை சென்று சுப்பர் ஓவரில் வென்றது. இதை போல் மும்பைக்கு எதிராகவும் அசத்தல் வெற்றிபெற்றது. மூன்றாவது போட்டியில் சென்னையை துவம்சம் செய்து அரையிறு திக்கு தகுதி பெற்றது.

அணியின் ஆரம்ப வீரர்கள் வோர்னர் அசுர வேகத்தில் ஓட்டங்கள் குவிப்பது வெற் றிக்கு உதவும். இவருடன் வோட்சனும் போமில் உள்ளதால் நல்ல ஆரம்பம் அமையும். தவிர ஸ்ரீபன் சிமித், கெல்லி, அணித்தலைவர் கடிச் ஆகியோரும் ஓட்டங்கள் குவிக்க காத்திருக் கின்றனர்.

### வெற்றி யாருக்கு?

முதல் சம்பியன்ஸ் லீக் தொடரில் சம்பிய னான நியூ சவுத் வேல்ஸ். 2010 தொடரில் அரையிறுதியில் சென்னையிடம் தோல்வி யடைந்த அணி பெங்களூர். இதனால் இரு அணிகளும் இறுதிப்போட்டிக்குச் செல்ல முயற்சிக்கும் என்பதால் கடுமையான போட்டி காத்திருக்கிறது.



சீன ஓபன் டென்னிஸ் தொடரின் இரண்டாம் சுற்றில் வெற்றி பெற்ற மகிழ்ச்சியில் போலந்தின் ரட்வன்ஸ்கா

# இந்திய அணியுடனான தொடர் சவால் நிறைந்ததாக அமையும்

## அணித் தலைவர் குக் தெரிவிப்பு

(ஹைதராபாத்)

இந்திய அணியை அதன் சொந்த மண் ணில் வீழ்த்துவது மிகவும் சிரமம். இதனால் தொடர் கடினமாகவிருக்கும் என இங்கிலாந்து அணியின் தலைவர் குக் தெரிவித்துள்ளார்.

இந்தியா, இங்கிலாந்து அணிகளுக்கிடை யிலான ஐந்து ஒருநாள் மற்றும் ஒரு இரு பது-20 போட்டிகள் கொண்ட தொடர் ஒக் டோபர் 14ஆம் திகதி முதல் 29ஆம் திகதிவரை நடை பெறவுள்ளது.

இதுகுறித்து இந்தியா வந்துள்ள இங் கிலாந்து அணித்தலைவர் அலெஸ்டர் குக் தெரிவித்துள்ளதாவது,


இங்கிலாந்தில் இந்திய அணியை எளி தாக வீழ்த்தினோம். ஆனால் இம்முறை இந் தியாவில் எங்களின் செயற்பாடு அதுபோன்று இருக்குமா தெரியவில்லை. இந்தியாவுக்கு எதிரான தொடரை முற்றிலும் வித்தியாச மாகப் பார்க்கின்றேன்.

ஏனெனில் இந்திய அணி அதன் சொந்த மண்ணில் எப்போதும் வலிமையாகவே இருந்துவருகிறது. இந்திய அணியில் சச்சின், சேவாக், சகீர்கான், யுவராஜ், ரோகித் சர்மா, முனாப் படேல், இஷாந்த் சர்மா ஆகியோர் காயம் காரணமாக மீண்டும் அணியில் இடம் பெறாதது எங்களுக்குச் சாதகமாக அமையும் என எதிர்பார்க்கின்றேன்.

சர்வதேசப் போட்டிகளில் விளையாடிய அனுபவம் இல்லாத ஒரு சில வீரர்கள் இந்திய அணியில் இடம்பெற்றிருந்தாலும் அனுபவ வீரர்களின் அதிரடி ஆட்டம் அணியின் வெற் றிக்குக் கைகொடுக்கும் என்பதால் இத்தொடர் சவால் நிறைந்ததாகத்தான் இருக்கும்.

இந்தியாவில் பெரும்பாலான மைதானங் கள் சுழற்பந்து வீச்சுக்கே ஒத்துழைப்புத் தரும் என்பதால் எங்கள் வீரர்கள் மெதுவாகத்தான் விக்கெட் வீழ்த்த முடியும் என நினைக்கிறேன். இருப்பினும் இங்குள்ள தட்ப வெப்பநிலையைச் சமாளித்துச் சிறப்பாகச் செயற்பட முடியும் என்ற நம்பிக்கை உள்ளது.

சர்வதேச கிரிக்கெட் சபை (ஐ.சி.சி.) ரன்னர் வைத்துக்கொள்ளக் கூடாது என்ற புதுவிதியை அறிமுகப்படுத்தியுள்ளது. இதற்கு எந்தளவு வரவேற்புக் கிடைக்கின்றது என்பது தெரிய வில்லை. நடுவர் மறுபரிசீலனை (டி.ஆர்.எஸ்.) முறை நன்றாகவுள்ளது. இதன்மூலம் துல்லிய மான முடிவுகளைப் பெறமுடிகிறது. இவ்வாறு அலெஸ்டர் குக் கூறினார்.







வலி.வடக்கு குரும்பசிட்டியில் நேற்று இடம்பெற்ற மீள்குடியேற்ற ஆரம்ப நிகழ்வில் அதிகாரிகள் அழைத்துவரப்படுவதையும் 513 ஆவது படையணித்தளபதி மங்கல விளக்கேற்றுவதையும் நிகழ்வில் கலந்துகொண்ட மாணவர்களில் ஒருபகுதியினரையும் படங்களில் காணலாம்.

# குரும்பசிட்டியில் நேற்று மீள்குடியேற்றம்

வலி.வடக்கு தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட குரும்பசிட்டிப் பகுதியில் பாடசாலை மற்றும் 4 கோவில்கள் அடங்கலாக 200 ஏக்கர் பரப்பளவு கொண்ட பகுதி யில் நேற்று மீள்குடியேறு வதற்கான அனுமதிவழங்கப்பட்டது.

இந்நிகழ்வு குரும்பசிட்டியிலுள்ள பொன்.பரமநாதர் வித்தியாலயத்தில் நேற்றுக் காலை நடைபெற்றது. இந்நிகழ்விற்கு யாழ்.மாவட்ட இராணு வக் கட்டளைத் தளபதி மேஜர் ஜென ரல் ஹத்துருசிங்க, அரசாங்க அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் மற்றும் இராணுவ உயரதிகாரிகள் கலந்து கொண்டனர்.

குரும்பசிட்டியின் ஜே/242, ஜே/243 ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளே விடுவிக்கப்பட்டுள்ளது. எனினும் இப்பகுதி முழுமையாக விடு விக்கப்படவில்லையென மக்கள் தெரிவித்துள்ளனர். (பா)

# சைக்கிள் ஓட்டப்போட்டி

இலங்கைவங்கிவிளையாட்டுக்கழகத் தின் மாகாணங்களுக்கிடையிலான வருடாந்த விளையாட்டுப்போட்டி இறுதி நிகழ்வு இவ்வருடம் யாழ்ப் பாணத்தில் நடைபெறவுள்ளது.

இதனை முன்னிட்டு ஆண் களுக்கான மாபெரும் துவிச்சக்கர வண்டி ஓட்டப்போட்டி நாளைமறு தினம் காலை நடத்துவற்கு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

இப் போட்டியில் பங்குபற்ற விரும் பும் போட்டியாளர்கள் இலங்கை வங்கியின் பிரதி பிரதம பாதுகாப்பு உத்தியோகத்தர் கருணாகரனுடன் தொடர்பு கொள்ளுமாறும் தெரிவிக் கப்பட்டுள்ளது. (பா)


பாராட்டி வாழ்த்துகிறோம்



திரு. அ. அகிலதாஸ்



திருமதி சுசீலா திருச்செல்வம்



செல்வி வ. கந்தசாமி

யா/கொக்குவில் இந்துக் கல்லூரியின் மதிப்புக்குரிய அதிபர் திரு.அ. அகிலதாஸ் அவர்கள் நல்லதிபர் விருதினையும் ஆசிரியர்களான திருமதி சுசீலா திருச்செல்வம், செல்வி வ. கந்தசாமி ஆகியோர் நல்லாசிரியர் விருதினையும் மாண்புமிகு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அவர்களிடம் அலரி மாளிகையில் பெற்றுக் கொள்கின்ற வேளையில் அதிபரையும் ஆசிரியர்களையும் மேலும் பல சிறப்புகள் பெற்று வாழ்க என வாழ்த்துகிறோம்.

யா/கொக்குவில் இந்துக் கல்லூரி
நலன் விரும்பிகள் (சி-4657)



உல்லாசம் உங்கள் கண்முன்னே...

TILKO JAFFNA CITY HOTEL

No.70/6, K.K.S Road, Jaffna.
Tel: 021 2225969
web:www.cityhoteljaffna.com
e-mail: info@cityhoteljaffna.com

# இடமாற்றம்

இல. 75, கஸ்தூரியார் வீதியில் இயங்கி வந்த
நியூ லலிதாஸ் ஜுவல்லறி ஸ்தாபனம்
10.09.2011 தொடக்கம் இல. 111, மின்சார நிலைய வீதியில் இயங்கி வருகின்றது என்பதை அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.
தொடர்புகளுக்கு : 021 222 4134




# ஜனாதிபதி அனுதாபம்

(கொழும்பு)

உலகின் பிரபல தகவல் தொழில்நுட்ப நிறுவனமான அப்பிள் நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி ஸ்டீவ் ஜொப்ஸின் மரணத்துக்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தனது அனுதாபத்தைத் தெரிவித்துள்ளார்.

தகவல் தொழில்நுட்பத்துறைக்காக ஸ்டீவ் ஜொப்ஸின் பங்களிப்பு பாராட்டுக்குரியது என ஜனாதிபதி தனது அனுதாபச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார். (பா)


## கணனி மலிவு விற்பனை

| | | |
|---|---|---|
| கணனி FULL SYSTEM | - | 19,750/- |
| (FREE 4GB PEN DRIVE / WEB CAMERA) | | |
| DDR III 2GB RAM | - | 2100/- (3Yr) |
| DDR II 2GB RAM | - | 3300/- (3Yr) |
| DDR II 1GB RAM | - | 2100/- (3Yr) |
| Power Sly 500W | - | 1200/- (1Yr) |

மற்றும் பல பொருட்கள் நம்பமுடியாத விலையில். உத்தரவாதம் உண்டு.

Sky Computer
162, Main Street, Jaffna.
T.P.:- 021-2221417, 0750698608
(C-4654)


# மனிதவுரிமைகள் செயற்திட்டம்...

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

இந்த மனித உரிமை செயற்றிட்டம் உடனடியாக அமுல்படுத்தப்பட உள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இது தொடர்பில் அவர் தெரிவித்துள்ளதாவது;

எதிர்வரும் மார்ச் மாதம் நடைபெறவுள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவை அமர்வுகளின் போது இந்த செயற்திட்டம் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

செயல்திட்டம் மற்றும் அதன் பயன்பாடு தொடர்பில் உலகின் ஏனையநாடுகளுக்கும், மனிதஉரிமை ஆர்வ அமைப்புகளுக்கும் தொடர்ச்சியாக தகவல்கள் வழங்கப்படும்.

மனித உரிமை பாதுகாப்பு குறித்த செயல் திட்டத்திற்கு உச்சளவிலான பிரசாரம் வழங்கப்படும். அரசாங்க மற்றும் சிவில் சமூக உறுப்பினர்களால் இந்த செயற்திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் இந்த செயல் திட்டத்திற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. மேலும் சிவில்-அரசியல் உரிமை,பெண்கள் உரிமை, பொருளாதார, சமூக -கலாசார உரிமை, சிறுவர் உரிமை, தொழிலாளர் உரிமை, வெளி நாட்டுத் தொழிலாளர் உரிமை, இடம்பெயர் மக்கள் உரிமை, மற்றும் சித்திரவதைகளிலிருந்து பாதுகாத்துக் கொள்ளும் உரிமை ஆகிய எட்டு பிரிவுகளில் இந்த செயல் திட்டம் உருவாக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் மகிந்த சமரசிங்க மேலும் தெரிவித்துள்ளார். மனித உரிமை பாதுகாப்பு தொடர்பான செயற்றிட்டத்தை அமுல்படுத்துவதற்கான நியமனங்களை ஜனாதிபதி இன்னமும் மேற்கொள்ளவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை இலங்கையின் மனிதவுரிமை விவகாரங்கள் தொடர்பில் சர்வதேச ரீதியில் அதிகரித்து வரும் அழுத்தங்களைத் தொடர்ந்தே அரசாங்கம் இச்செயற்றிட்ட அறிக்கையைச் சமர்ப்பிக்கத் திட்டமிட்டுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

எனினும் அரசால் மேற்கொள்ளப்படும் இந்நடவடிக்கையானது வெறும் கண்துடைப்பு நடவடிக்கையாகவே அமையுமென அரசியல் ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர். (பா)


NIRUTUITION CENTRE
KONDAVIL

A/L இணைந்த கணிதம்
2012 -வகையீடு
2013- நிலையியல்
ஆசிரியர் திரு. N. அதீசன்
(3898)


# வெள்ளைக் கொடி ...

கொள்ளப்பட்டபோது சட்டமா அதிபர் குறித்த கூற்றை நீதிமன்றுக்குத் தெரியப்படுத்துவதாக அரச பிரதி வழக்கறிஞர் புவனகே அளுவிகார தெரிவித்துள்ளார்.

வன்னி இறுதிக் கட்ட யுத்தத்தின் போது படையினரிடம் சரணடைய வந்த விடுதலைப்புலிகள் எவர் மீதும் துப்பாக்கிப் பிரயோகம் நடத் தப்படவில்லை என யுத்தகாலத்தில் 58-வது படையணியின் தளபதியாக விருந்த மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வா சாட்சியமளித்துள்ளார் என புவனகே அளுவிகார சுட்டிக் காட்டியுள்ளார்.

அதேபோன்று சரணடையவரும் தமிழீழ விடுதலைப்புலிகளின் உறுப்பினர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் நடத்துமாறு தான் ஆலோசனை வழங்கவில்லை என பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ அளித்த சாட்சியத்தையும் அரச சட்டத்தரணி குறிப்பிட்டுள்ளார்.

சந்தேகநபர் சார்பில் சாட்சியமளித்த மக்கள் விடுதலை முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் அனுரகுமார திஸநாயக்க மற்றும் ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் கரு ஜயசூரிய ஆகியோரின் சாட்சியம் பயனற்றதாகக் காணப்படுவதாகவும் புவனகே அளுவிகார கூறியுள்ளார்.

இதனையடுத்து வழக்கு விசாரணைகள் இன்றைய தினத்திற்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. (பா)


25 வருட சேவை நயப்பு விழா

புதிய உயர் கல்லூரியின் நிர்வாக இயக்குனரும்
இந்து நாகரிகத் துறையில் 25 வருடங்கட்கு மேலாக
விரிவுரை ஆற்றி வருபவருமான
திருமதி சண்முகநாதன் அருள்நங்கை அவர்களின்
சேவை நயப்பு விழா அழைப்பு

காலம் : 09.10.2011 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9.30 மணி
இடம் : புதிய உயர் கல்லூரி வளாகம்
தலைவர் : பேராசிரியர் கி. விசாகரூபன் (தலைவர் தமிழ்த்துறை யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம்)

மேற்குறிப்பிட்ட அழைப்பினை தனிப்பட்ட அழைப்பாக ஏற்று விரிவுரையாளரின் மாணவர்கள், பழைய மாணவர்கள், நலன் விரும்பிகள், உற்றார், உறவினர்கள் அனைவரும் இவ்விழாவில் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

புதிய உயர்கல்லூரி
ஆரியகுளம் சந்தி,
யாழ்ப்பாணம்.

இங்ஙனம்
விழாக் குழுவினர்
(சி-4650)



புதியதோர் உலகம் செய்வோம்
DCM 1ம் குறுக்குத் தெரு யாழ் நகர் (வேம்படி மகளிர் கல்லூரிக்கு அருகாமையில்)

A/L DAY CLASS
திங்கள் முதல் வெள்ளி வரை 7.30 – 12.00
(சி-4649)

| | | |
|---|---|---|
| பொருளியல் | - | வரதராஜன் |
| கணக்கீடு | - | பகீரதன் |
| வணிகக் கல்வி | - | வழமையான ஆசிரியர் |

ஆரம்பம் : 10.10.11 திங்கள் 7.30



மீண்டும் யாழ்.மண்ணில்...
அரசியல் - K.சுகாஷ் (LLB)
2008 வரை யாழ்.முன்னணி ஆசிரியர்
தற்போதைய கொழும்பின் பிரபல ஆசிரியர்
வகுப்புக்கள் ஆரம்பம் – 08. 10. 2011
• D.C.M யாழ்.நகர் (வேம்படி மகளிர் கல்லூரி அருகில்)
• BITSMANS மானிப்பாய் • SUBRA சித்தன்கேணி
2012 - இலங்கை அரசியல், Paper Class
2013 - ஆரம்பத்திலிருந்து கற்பிக்கப்படும்


# தமிழர்களுக்கு நியாய...

இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு தொடர்பில் அரசாங்கத்துடன் இடம்பெற்றுவரும் பேச்சுவார்த்தை, போரின்போது இடம்பெயர்ந்த மக்களின் மீள் குடியேற்றம் மற்றும் வடக்குக் கிழக்கு நிலைமைகள் குறித்துக் கவனம் செலுத்தப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்திய வெளிவிவகாரச் செயலாளராக கடந்த ஓகஸ்ட் மாதம் ரஞ்சன் மத்தாய் பதவியேற்றுக் கொண்ட பின்னர் நாளை முதல் முறையாக இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளார்.

இவ்விஜயத்தின்போது ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க உள்ளிட்டோரையும் சந்திக்கவுள்ளதாகக் கூறப்பட்டுள்ளது.

அத்துடன் இவ்விரு நாடுகளுக்குமிடையிலான உறவுகள் மற்றும் பிராந்திய நிலைப்பாடுகள் குறித்து வெளிவிவகாரச் செயலாளர் கருணாதிலக அமுனகமவுடன் அவர் கலந்துரையாடவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (பா-8)

# மரண அறிவித்தல்

## திருமதி பிறின்ஸி சத்தியதாஸ்

யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகவும் கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பிறின்ஸி சத்தியதாஸ் 05.10.2011 புதன்கிழமை அன்று காலமானார்.

அன்னார் ஜோசப் சத்தியதாஸின் (ஓய்வுபெற்ற யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர்) அன்பு மனைவியும், காலம்சென்றவர்களான சந்தியாகோ, பிலோமினா தம்பதியினரின் அன்பு மகளும், அலன் நவராஜன், ஜோசப் பிரியராஜன் ஆகியோரின் அன்புத் தாயாரும், கீத்தாஞ்சலி, நிரஞ்சனி ஆகியோரின் அன்பு மாமியாரும், டனிஷா, டிஷானி ஆகியோரின் அன்புப் பாட்டியும், ரைடஸ், பீற்றர் போல், மேரி அகத்தா, யஸ்ரஸ், மாலின், லோஜினி ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் அஞ்சலிக்காக கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் வெள்ளிக்கிழமை காலை 9.00 மணி தொடக்கம் வைக்கப்பட்டு,நல்லடக்க ஆராதனை சனிக்கிழமை(08.10.2011) பிற்பகல் 3.30க்கு நடைபெறும்.

இவ் அறிவித்தலை நண்பர்கள், உற்றார், உறவினர் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

0777313815 (C-4659)


# பதவி வெற்றிடம்

பின்வரும் பதவிகளில் உள்ள வெற்றிடம் நிரப்பப்படவுள்ளதால் பொருத்தமானவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

VACANCIES

- அலுவலக செய்தியாளர்கள் (இருபாலாரும்)
- கணனி ரைப்பிங் தமிழ் (ஆண்கள்)
- பக்கம் மற்றும் விளம்பர வடிவமைப்பாளர்கள் (இருபாலாரும்)
- உதவிக் கணக்காளர் (இருபாலாரும்)
- Offset இயந்திரம் இயக்குநர் மற்றும் பயிலுநர் (ஆண்கள்)
- விநியோக முகாமையாளர் (இரவுக் கடமை, ஆண்கள்)
- பத்திரிகை மடிப்பவர்கள் (ஆண்கள்)

பொருத்தமான தகைமையும் விருப்பமும் உடையவர்கள் தொலைபேசி இலக்கம் உட்பட தங்கள் விபரங்கள் அடங்கிய விண்ணப்பத்தை

மனிதவள முகாமையாளர்
வலம்புரி
இல.3 , 2-ம் ஒழுங்கை, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

எனும் முகவரிக்கு நேரில் அல்லது தபாலில் 10.10.2011 இற்கு முன்னதாகச அனுப்பி வைக்கவும்.

குறிப்பு: நேர்முகத் தேர்வு 11.10.2011 இல் நடைபெறும்.
(அது பற்றி தொலைபேசி மூலம் அறியத்தரப்படும்)

JOBS

பொது முகாமையாளர்,
வலம்புரி


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 07.10.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.